
மலரன்னை

# ஒரு பிடி சாம்பல்



# ஒரு பிடி சாம்பல்

மலரன்னை

ஒரு பிடி சாம்பல்

மலரன்னை

| | |
|---|---|
| முதற்பதிப்பு | : 2021 மார்கழி |
| வகை | : சிறுகதை |
| வெளியீடு | : ஜீவநதி, கலைஅகம், அல்வாய் |
| உரிமை | : மலரன்னை |
| வடிவமைப்பு | : க.பரணீதரன் |
| நூலாக்கம் | : பரணீ அச்சகம், நெல்லியடி |
| பக்கங்கள் | : 108 |
| விலை | : 400/- |
| ச.தே.பு.நி.இல | : 978-624-5881-26-0 |

**Oru Pidi Sampal**

Malaranai

| | |
|---|---|
| First Edition | : 2021 December |
| Category | : Shorts story |
| Copy Rights | : Malaranai |
| Publication | : Jeevanathy. Kalaiaham, Alvai. |
| Design | : K.Bharaneetharan |
| Printers | : Baranee Printers, Nelliady |
| Pages | : 108 |
| Price | : 400/- |
| ISBN | : 978-624-5881-26-0 |

ஜீவநதி வெளியீடு - 213

- கணிப்பு
- இருதாய் ஒரு சேய்
- வெண்மதி
- பிணைப்பு
- கருகிய கனவுப் பூக்கள்
- பாறாங்கல்
- இதம்
- அருமை உடைய செயல்
- ஒரு பிடி சாம்பல
- பனித்துகள்
- உளப்பசி
- பித்து
- மனக்கண்
- நதியோரத்து நாணல்கள்
- கருமணி
- அகக்கனல்

# என்னுரை

# கணிப்பு

கந்தவனம் வீட்டு மாட்டுக் கொட்டிலில் வகுப்பு நடந்து கொண்டிருந்தது. கந்தவனத்தாருக்கு பாரிசவாத நோய் வந்து படுக்கையில் வீழ்ந்ததால் பராமரிக்க ஆளின்றி பசுமாடுகள் விலை போய் விட்டன. காலியாகிவிட்ட மாட்டுக்கொட்டில் இப்போது திருவருட்செல்வன்... அதாவது கந்தவனத் தாரின் ஏகபுத்திரனது பிரத்தியேக வகுப்பறை.

திருவின் பிரத்தியேக வகுப்புக்களுக்கு சமூக மளிப்பவர்கள் மொத்தம் ஏழுபேர் தான். அவர்களுள் மூவர் பெண் பிள்ளைகள். எல்லோரும் வசதி படைத்தவர்கள் மட்டுமல்ல. திருவின் மீதும் அவனது கற்பித்தல் செயற்பாட்டின் மீதும் அதீத நம்பிக்கை கொண்டவர்கள். இவ்வளவிற்கும் திரு ஒன்றும் கல்வி யில் பெரிய பட்டதாரி இல்லை. போன வருடம் நடந்த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி மூன்று பாடங்களிலும் அதி சிறந்த பெறுபேறுகளைப் பெற்றதுடன் மாவட்ட ரீதியில் மூன்றாமிடம் பெற்றவன்.

அவனாகவே இஷ்டப்பட்டு வகுப்பு தொடங்கவில்லை. சில மாணவர்களின் வற்புறுத்த லால் அவன் கற்பிக்கத் தொடங்கியிருக்கிறான். எல்லாம் இந்த ஆவணி வரைதான். தான் கிரகித்து வைத்திருக்கும் விடயங்களை மற்றவர்களுக்கு எளிதில் புரியும் படியாக விளக்கும் ஆற்றல் அவனிடம் நிறைந்திருந்தது. அதனால் தான் மாணவர்களுக்கு அவன் மீது ஒரு ஈர்ப்பு ஏற்பட்டது.

அன்று கடந்த கால வினாத்தாளிலிருந்து

வினாக்களை தெரிவு செய்து அதற்கு விளக்கமளித்துக் கொண்டிருந் தான், திரு. மாணவர்களில் ஓரிருவர் தமக்கு விளங்காதவற்றை மீண்டும் சொல்லித்தருமாறு கேட்டனர். திருவும் சளைக்காது பதிலிறுத்துக்கொண்டிருந்தான். நேரம் போவது தெரியாமல் அனைவரும் படிப்பில் மூழ்கிப் போய் விட்டனர்.

காலை நேரமாதலால் திருவின் அம்மாவான சிந்தாமணி முற்றத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தாள். தெருவால் போய்க் கொண்டிருந்த இரு மரக்கறி வியாபாரிகளின் குரல் அவளது செவிகளில் வந்து மோதியது.

"என்னடாப்பா கந்தவனத்தார் வீட்டுக்கு முன்னால் அஞ்சாறு சைக்கிள் நிக்குது. ஆளுக்கு ஏதும் வில்லங்கமோ?"

"இல்லையடா மச்சான். அது வந்து கந்தவனத்தாரின்ரை பெடியன் டியூசன் குடுக்கிறானாம். அதுதான் பெடியள் வந்திருக்குதுகள் போல."

"சிவா! என்னடா பகிடி விடுகிறாய். முந்த நாள் முளைச்ச பெடி அதுக்கிடையில் டியூசன் குடுக்கிற அளவுக்கு வந்திட்டுதோ?"

"இல்லை மச்சான். அவன் போன வருசம் நடந்த சோதனை யில் பாஸ் பண்ணி இப்ப கம்பஸ்க்கு எடுபட்டிருக்கிறானாம்."

"அதைவிடு. உவனால உந்த பட்டதாரி வாத்திமாரை விட நல்லாய் படிப்பீக்க ஏலுமே? எல்லாம் பணத்துக்காக ஆசைப்பட்டு செய்யிற ஏமாத்து வேலை"

அவர்கள் உரையாடியவாறே தெருமுனையால் போய் மறைந்து விட்டார்கள். சிந்தாமணிக்கு "பக்" என்றது. அன்று மதியமே மகனிடம் தெருவில் போனவர்களது சம்பாஷணையைப் பற்றி எடுத்துச் சொன்னாள்.

ஒரு நமட்டுச் சிரிப்புடன் திரு வாய்திறந்தான்.

"அம்மா! நான் இஞ்சை டியூற்றரியே நடத்திறன். ஏதோ தெரியாததைச் சொல்லித் தாங்கோ என்று கேட்டு வாறவைக்கு என்னால ஏலுமானதைச் சொல்லிக் குடுக்கிறன். அவ்வளவுதான்"

சிந்தாமணியின் மனதுக்குள் ஒரு சிறு உறுத்தல் இருக்கத்தான் செய்தது. மகனிடம் அதைவெளிப்படுத்தினாள்.

"உவள் எங்கட கவிதாவும் இந்த முறை சோதினை எடுக்கப் போறாள். அவளும் வந்து உன்னட்டை கேட்டுப் படிக்கலாம் தானே."

*“அது அவையின்ர விருப்பம்”*

*ஒரு வாய்ப் பேச்சுக்கு சொல்லிவிட்டானே தவிர உள்ளூர அவனுக்கு மாமாவின் பெண்ணான கவிதா மீது ஒரு நாட்டம் இருப்பது உண்மைதான்.*

*சிந்தாமணி அத்துடன் விட்டுவிடவில்லை. அன்று மாலையே தனது அண்ணன் வீட்டிற்கு புறப்பட்டு விட்டாள். தங்கையை வரவேற்று குசலம் விசாரித்த சுந்தரலிங்கம் அவளிடம் திருவைப் பற்றியும் வினவினார்.*

*“என்ன சிந்தாமணி! உன்ரை மகன் ஊருக்குள்ள ரியூசன் குடுக்கிறானாம். மெய்தானே”*

*சிந்தாமணியின் மனம் பெருமையால் குதூகலித்தது.*

*“ஓமண்ணை. அங்கினை நாலைஞ்சு பிள்ளையள் வந்து படிக்கிறவை. அது தான் கவிதாவையும் வந்து கேட்டு படிக்கச் சொல்லலாமெண்டு நினைச்சுத்தான் வந்த நான்.”*

*சிந்தாமணியின் அப்பாவித்தனமான வார்த்தைகளைக் கேட்டு சுந்தரலிங்கம் எகத்தாளமாகச் சிரித்தார். அதன் அர்த்தம் புரியாமல் சிந்தாமணி திகைத்து நின்ற போது அவர் நிதானமாக சொல்லத் தொடங்கினார்.*

*“இஞ்சை பார் சிந்தாமணி! நான் என்ர பிள்ளையை நகரத் திலையே இருக்கிற பிரபலமான டியூற்றரியில தான் சேர்த்திருக்கிறன். அங்கை இப்ப பேப்பர் கிளாஸ் நடந்து கொண்டிருக்குது. அதை விட்டிட்டு உன்ரை மகனிட்டை வந்து பாடங்கேக்க அவன் என்ன அந்தளவு பெரிய படிப்பாளியோ. போன வருசம் சோதினை எடுத்தவன். ஏதோ நல்ல றிசல்ட் வந்திட்டுது எண்டாப்போல அவனிட்டை படிக்க அனுப்புறதுக்கு நான் என்ன முட்டாளே”*

*வாய் ஓயாமல் பொரிந்து தள்ளியதைக் கேட்ட சிந்தாமணிக்கு “சப்” என்று போய்விட்டது. தன்னை ஒருவாறு சுதாகரித்துக் கொண்டவளாய் வீடு திரும்பினாள். மனம் குறுகுறுத்த போதிலும் திருவிடம் இது விடயத்தைப் பற்றி எதுவும் சொல்லவில்லை.. தேவையில்லாமல் ஏன் அவனது மனதையும் நோகடிக்க வேண்டும் என நினைத்தவள் வாளாவிருந்து விட்டாள்.*

*காலம் தன் கதியில் நகர்ந்து கொண்டிருந்தது. திருவும் தனது கல்வியைத் தொடர பேராதனை பல்கலைக்கழகத்திற்கு போய் விட்டான். மகனைப் பிரிந்து வாழுவது சிந்தாமணிக்கு துயரத்தைத்*

*தந்த போதிலும் மகனுடைய மேம்பாட்டை கருத்தில் கொண்டு காலத்தைக் கழித்தாள். கணவனை பராமரிப்பதிலேயெ அவளது பொழுது கரைந்தத, நேரங்கிடைக்கும் போதெல்லாம் திரு அம்மாவுடன் அலைபேசியில் தொடர்பு கொண்டு கதைப்பான்.*

*இப்போதெல்லாம் சிந்தாமணி அண்ணர் வீட்டிற்குப் போவதில்லை. "மகன் கம்பஸுக்கு எடுபட்டுப் போனதிலிருந்து அவளுக்கு பெருமை தலைக்கேறி விட்டுது" என்று அவர் ஊருக்குள் சொல்லித் திரிவதாக அறிந்து அவள் ஆத்திரப்படவில்லை. "அண்ணர் தானே. என்னத்தையாவது சொல்லிவிட்டுப் போகட்டும்" என மனதுக்குள் நினைத்துக்கொண்டாள்.*

*அன்று ஒரு வெள்ளிக்கிழமை மாலை மணி ஐந்தைத் தாண்டியிருந்தது. சிந்தாமணி, கணவனை முச்சக்கர நாற்காலியில் இருத்தி, முற்றத்து மாவின் கீழ் நகர்த்தி வந்தாள். கந்தவனமும் அதில் இருந்தவாறே வாசலில் போவோர் வருவோரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். எந்நேரமும் வீட்டுக்குள் படுக்கையே தஞ்சம் என்று கிடப்பவருக்கு இது ஒரு நிவர்த்தியாகத் தோன்றியது. பாதசாரிகளில் சிலர் நின்று அவரிடம் குசலம் விசாரிப்பதும் உண்டு. மனித உறவுக் காக தவித்துக் கிடக்கும் அவரது மனதுக்கு அது ஒத்தடமாக இருக்கும்.*

*திடீரென இரண்டு சைக்கிள்கள் அவர்களது வாசலில் வந்து நின்றன. திடுக்கிட்டுத் திரும்பிய சிந்தாமணி அதில் வந்திறங்கியவர் களை ஆராய்ந்தாள். அவர்கள் வேறு யாருமில்லை. திருவிடம் வந்து பாடம் கேட்டுப் படித்தவர்களான தமிழரசியும், கலைமகளும் தான் என சிந்தாமணி அடையாளம் கண்டு கொண்டாள்.*

*"வாங்கோ பிள்ளையள். என்ன இந்தப் பக்கம்"*

*"அது ஒன்றுமில்லை அம்மா. எங்களுடைய எக்ஸாம் றிசல்ற் வந்திட்டுது. அது தான் திரு அண்ணாவுக்கு எடுத்துச் சொல்லுவ மெண்டு...."*

*இழுத்தாள் தமிழரசி.*

*"மெய்யே பிள்ளையள். நீங்கள் பாஸ் பண்ணீட்டியளே?"*

*"ஓம் அம்மா. திரு அண்ணாவிட்ட படிச்ச நாங்கள் எல்லாரும் பாஸ். அதைத் தான் திரு அண்ணாவுக்கு எடுத்துச் சொல்லுவ மெண்டால்... அவருடைய நம்பர் எங்களிட்ட இல்லை. உங்களிட்ட கேப்பமெண்டு தான் வந்த நாங்கள்."*

*"அப்பிடியே சங்கதி. சந்தோசமாய்க் கிடக்கு. எனக்கு அவனுடைய நம்பர் தெரியாது. நான் போனைத் தாறன். நீங்களே பாருங்கோ."*

*அலைபேசியை எடுத்து வந்து அவர்களிடம் கொடுத்தாள், சிந்தாமணி அவர்கள் விடைபெறும் போது சிந்தாமணியிடம் ஒரு பொதியை கொடுத்துவிட்டுப் போனார்கள்.*

*"நீங்கள் ஸ்வீற் சாப்பிடுவீங்களோ தெரியாது. அது தான் பழங்கள் வாங்கிக் கொண்டு வந்த நாங்கள்."*

*அவர்கள் போனதும் பொதியைப் பிரித்துப் பார்த்தான். அதற்குள் ஆப்பிளும் ஒரேஞ்ச்சும் இருந்தன.*

*இப்போது சிந்தாமணியின் மனதில் ஒரு துடிப்பு. "அண்ணரின் மகள் கவிதாவுக்கு என்ன மறுமொழி வந்திருக்கும்" அதை அறிந்து விட வேண்டுமென மனம் கிடந்து அடித்துக் கொண்டது. குறுகுறுத்த மனத்தை அடக்கியவாறு தனது வேலைகளில் மூழ்கிப் போனாள், சிந்தாமணி.*

*வழமையாக இரவு எழுமணிபோல் திரு அம்மாவிடம் அலைபேசியில் தொடர்பு கொண்டு சுகம் விசாரிப்பான். இன்று மணி ஏழரையாகியும் அவனது அழைப்பைக் காணவில்லை. பதைத்த மனத்துடன் இரவு உணவை தயாரிக்க முற்பட்ட போதுதான் அலைபேசி மணி கிணுகிணுத்தது. தன்னருகில் கிடந்த அலை பேசியை எடுத்து கதைக்கத் தொடங்கினாள்.*

*"தம்பி!... கலைமகளும் தமிழரசியும் வந்து உன்னுடைய நம்பரை வேண்டினவை. கதைச்சவையே?"*

*"ஓம் அம்மா. அதுக்கு முதலே நான் எல்லாருடைய றிசல்ற்றையும் "நெற்"றில பார்த்திட்டன். என்னட்டை படிச்சவையில நாலு பேருக்கு மூன்று "ஏ". மூன்று பேருக்கு இரண்டு "ஏ" யும் ஒரு "பி" யும். எனக்கு நல்ல சந்தோசம்."*

*"அது சரி தம்பி. உவள் கவிதாவுக்கு என்ன மறுமொழி வந்திருக்குதென்று பார்த்தநீயே?"*

*"பார்த்த நான். அவபெயில் அம்மா. ஒரு பாடம் தான் பாஸ் பண்ணியிருக்கிறா"*

*"ஏனாக்கும் உந்தப் பிள்ளை பெயிலானது. மாமா சொன்னாரே பிள்ளையை பெரிய டியூற்றரியில விட்டுப் படிப்பிக்கற னென்று."*

*விசனத்துடன் கூறினாள், சிந்தாமணி.*

*“அம்மா! ஒன்றை நாங்கள் வடிவாய்த் தெரிஞ்சு கொள்ள வேணும். காசைக் கொடுத்து படிப்பை விலைக்கு வாங்க முடியாது. படிப்பிக்கிறவை வடிவாய்... விளக்கமாய்த்தான் சொல்லிக் குடுப்பினம். படிக்கிறவை தான் அதிலை ஆர்வமாய் இருக்க வேணும். படிப்பிக்கிறதை கவனமாய்க் கேட்டு, அதை உள்வாங்கி கிரகித்து முழுச்சிரத்தையோட படிக்க வேணும். அங்கை தான் மாமாவின் கணிப்பு தப்பாப் போச்சுது”*

*திருவின் விளக்கம் சிந்தாமணிக்குப் புரியவில்லை. ஆனால் அவளது அண்ணர் சுந்தரலிங்கத்துக்கு இப்போது புரிந்திருக்கும்.*

– செம்மண்

# இரு தாய் ஒரு சேய்

*இரவு முழுவதும் கொட்டித் தீர்த்த மழை விடியற்புறம் சற்று ஓய்ந்திருந்தது. முற்றத்தில் நின்றிருந்த மாமரத்திலிருந்து சருகுகள் உதிர்ந்து நிலத்தை அலங்கோலப் படுத்தியதைக் கண்ணுற்ற சாரதா, விளக்குமாறை எடுத்து வந்து அதைப் பெருக்க ஆரம்பித்தாள். வெளிக் கூடத்தில் போட்டிருந்த சாய் மனையில் சாய்ந்தவாறு அன்றைய பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்த சபேசன் உரிமையுடன் மனைவியைக் கண்டித்தார்.*

*"இப்ப என்னத்துக்கு உந்த ஈரத்துக்கை நின்று கூட்டுறீர். எக்கணம் சிலுநீர் தலையில கொட்டப் போகுது. பேந்துதடிமன் ஆக்கிப் போடும்."*

*"அப்ப என்ன... முத்தத்தில் குப்பையைக் கிடக்க விடச் சொல்லுறியளோ"*

*"கிறீச்...!"*

*"கேற்" திறக்கும் சத்தம் இருவரையும் திரும்பிப் பார்க்க வைத்து அங்கே... அவர்களது அன்பு மகன் மாறன், தோளில் கொளுவிள பாக்குடன் வந்து கொண்டிருந்தான்.*

*"என்ன தம்பி! சொல்லாமல் கொள்ளாமல் வந்திருக்கிறாய்?"*

*சாரதாவின் குரலில் பாசத்துடன் கூடிய மகிழ்ச்சி கொப்பளித்தது.*

*"இல்லையம்மா. வாற கிழமை இரண்டு லீவு நாட்கள் வருகுது. அது தான் நான் மூன்று நாள் லீவு*

போட்டுவிட்டு உங்களோடை ஒரு கிழமை இருந்திட்டு போகலாமென்று நினைச்சு வந்திட்டன்."

மகனது இச்செயல் பெற்றோருக்கு நிறைவைத் தந்தது. "இவன் எங்களுக்குப் பிள்ளையாக நிலைத்திருப்பான் என நாங்கள் நம்பியிருக்கவில்லையே" ஏக காலத்தில் பெற்றோர் இருவரது மனங்களிலும் மின்னலென ஒரு நினைப்பு தோன்றி மறைந்தது.

மகனைக் கண்ட மாத்திரத்திலேயே சாரதா புத்துயிர் பெற்றவனாய் , சுறுசுறுப்புடன் சுழலத் தொடங்கிவிட்டான். சபேசன் மட்டும் என்ன... மகனிடம் குசலம் விசாரித்து அவனை அலுப்படைய வைத்து விட்டார். இருவர் மட்டுமே வாழ்ந்திருந்த அந்த வீட்டில் மாறனின் வருகை கலகலப்பை ஏற்படுத்தி விட்டது. அம்மாவின் கைப்பக்குவத்தில் தயாரிக்கப்பட்ட அரிசிமா இடியப்பமும் உருளைக்கிழங்கு பிரட்டலும் பாற்சொதியும், கடைச்சாப்பாட்டில் காய்ந்து போய்க்கிடந்த மாறனின் வயிற்றை நிறைக்க, ஏப்பம் ஒன்றை வெளிப்படுத்தியவாறே வந்தவன், ஹாலில் இருந்த சோபாவில் வசதியாக அமர்ந்து பின்னால் சாய்ந்து கொண்டான். அம்மாவும் அப்பாவும் அவனுக்கு முன்னால் வந்து இருந்து புதினங்களை பரிமாறிக்கொண்டனர்.

திடீரென எழுந்து உள்ளே போன மாறன், கையில் இரண்டு சேலைகளுடன் வந்தான்.

"அம்மா! இந்த இரண்டும் ஒரே சாறிதான். கலர் தான் வித்தியாசம். நீங்கள் இதில உங்களுக்குப் பிடிச்ச கலரை "செலக்ட்" பண்ணுங்கோ. மற்றதை அந்தம்மாவுக்கு குடுக்கப் போறன்"

சபேசனும் சாரதாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அதில் எந்தவித சலனமும் இருக்கவில்லை.

அடுத்த சில நிமிடங்களில் மாறனின் உந்துருளி நெல்லியடியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

"அம்மா..! மாறன் அண்ணா வந்திருக்கிறார்."

குரல் கேட்டதும் திலகவதி பரபரப்புடன் வாசலுக்கு வந்து விட்டாள்.

"எப்ப ராசா பதுளையில் இருந்து வந்த நீ?"

"காலமை தான் வந்த நான் அம்மா!"

மகனது தலையை கைகளால் பிடித்து வளைத்து உச்சியில்

முத்தமிட்டாள், அம்மா.

"எனக்குத் தெரியும். என்ரை பிள்ளை ஊருக்க வந்ததும் என்னைப் பாக்காமல் இருக்காது என்று"

ஹாலில் பத்திரிகையில் மூழ்கியிருந்த திலகவதியின் கணவர் சிவகுமாரன் ஒரு தரம் பத்திரிகையில் இருந்து பார்வையை மீட்டு தலையைத் தாழ்த்தி மூக்குக் கண்ணாடியின் மேற்புறத்தால் அவர்களை நோட்டமிட்டுவிட்டு மீண்டும் பார்வையை பத்திரிகையில் பதித்தார்.

இதற்கிடையில் கார்த்திகா, அக்கா நிருத்திகாவிடம் செய்தி சொல்லப் போனாள்.

"அக்கா! மாறன் அண்ணா வந்திருக்கிறார். இண்டைக்கு அம்மாவைப் பிடிக்கேலாது."

"விடு கார்த்திகா. அவரைச் சாட்டி எங்களுக்கும் இண்டைக்கு நல்ல சாப்பாடு தானே கிடைக்கப் போகுது."

"அதில்லையக்கா. அம்மா எங்களைத்தானே வேலை வாங்கப் போறா."

"பறவாயில்லை , மாறன் அண்ணா எங்களுக்கும் நல்ல "கிப்ற்" எல்லாம் வாங்கித் தாறவர் தானே. தவிர எங்களுக்கும் அண்ணா இல்லை. இருந்த அண்ணாவும் ஒரு "அக்சிடென்ட்"டில செத்துப் போயிட்டாராம். அம்மா நெடுகலும் சொல்லி அழுறவ."

அம்மாவின் அழைப்பு அவர்களிருவரையும் சமையலறையை நோக்கி நகரச் செய்துவிட்டது. அங்கே... அறுசுவையுடன் கூடிய விருந்து தயாராகிக் கொண்டிருந்தது. ஒரு பக்கத்தில் கதிரை ஒன்றைப் போட்டு அதில் மாறனை இருத்தி வைத்திருந்தாள், திலகவதி. மரக்கறிகளை நறுக்கித் தருவதாகக் கூறிய மாறனைத் தடுத்து நிறுத்தி விட்டாள், நிருத்திகா.

"அண்ணா! நீங்கள் உதில இருந்து அம்மாவோட கதைச்சுக் கொண்டிருந்தால் போதும். மற்றதெல்லாம் நாங்கள் பார்த்துக் கொள்ளுறம்."

திலகவதி மெதுவாக பேச்சை ஆரம்பித்தாள்.

"தம்பி! உமக்கும் வயசு வந்திட்டுது. அம்மாவை ஒரு இடமும் பார்க்கேல்லையே..."

"ஓம் அம்மா, அவை பார்க்க வெளிக்கிட்டவைதான். நான் தடுத்து

நிறுத்திப் போட்டன்,”

“ஏனப்பு. ஏன் தடுத்த நீர் ராசா? நானும் உமக்கு ஒரு நல்ல வசதியான குடும்பத்துப் பிள்ளையாய் பார்த்து வைச்சிருக்கிறன்.”

திலகவதியின் பேச்சைக் கேட்டதும் வாய்விட்டுச் சிரித்தான், மாறன்.

“அம்மா! நான் உந்தப் பணம் பொருளுக் கெல்லாம் ஆசைப்படயில்ல. என்னோட கூடப் படிப்பிக்கிற மாஸ்டரின்ரை தங்கச்சிக்கு ஒற்றைக் கண் இல்லையாம். இறுதிப் போரில குண்டடிபட்டு நரம்புகளும் பாதிக்கப்பட்டுப் போச்சுதாம். அந்தப் பிள்ளை ஒற்றைக் கண்ணோடயே படிச்சு பட்டதாரியாகி ஒரு டீச்சராய் இருக்கிறாவாம். நடுத்தர வசதியுள்ள குடும்பமாம்.”

அவசரமாய் திலகவதி கேட்டாள்.

“நீர் அந்தப் பொம்பிளையைப் பார்த்த நீரே. எப்பிடி வடிவான பிள்ளையே?”

கேள்விகளை அடுக்கியவளை இடைமறித்தான், மாறன்.

“பொறுங்கோம்மா, எனக்கு எதுவும் தெரியாது. உந்த விசயத்தைக் கேள்விப்பட்டது மட்டும் தான். நான்இப்ப உங்களிட்ட சொல்லிப்போட்டன், நீங்களும் அம்மாவையும் சேர்ந்து விசாரித்து ஒழுங்கு செய்ய வேண்டியது உங்கட பொறுப்பு”

மாறனது இதயத்தில் தோன்றிய கருணையை எண்ணி இறுமாப்படைந்தாள் திலகவதி.

“சரி, ராசா. எங்களிட்ட பொறுப்பை தந்துவிட்டீர். பிள்ளை யின்ரை விருப்பத்தை நிறைவேற்றுவதைத் தவிர பெற்றவை எங்களுக்கு வேறை என்ன கடமை இருக்கப் போகுது.”

திலகவதி வாய்ச்சொல்லோடு நின்று விடவில்லை. சாரதாவும் சபேசனும் திலகவதியும் இணைந்து முழு முயற்சியில் ஈடுபட்டு வாணியை மாறனுக்கு திருமணம் செய்து வைத்து விட்டனர். அவயவம் குறைந்த பெண்ணை ஏன் மாறன் விரும்பி ஏற்றுக் கொண்டான் என்பது பெண்வீட்டாருக்கு மட்டுமல்ல. சக ஆசிரியர்களுக்கும் கேள்விக் குறியே.

அவர்களது திருமணம் செல்வச் சந்நிதியான் ஆலயத்தில் எளிமையாக நடைபெற்றது. வாணியின் பெற்றோர் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். வாணி ஒரு பட்டதாரி ஆசிரியையாக இருந்த

போதிலும் அவளிடம் இருந்த அவயவக் குறைபாடு காரணமாக எவரும் அவளைத் திருமணம் செய்ய முன்வரவில்லை. நடுத்தரக் குடும்பமாதலால் நிறையச் சீதனத்தை அள்ளிக் கொடுத்து அவளுடைய குறைபாட்டை மறைக்கவும் முடியவில்லையே என ஏங்கித் தவித்தவர்களுக்கு வலிய வந்த மாறனது சம்மந்தம் வியப்பைத் தந்தது. ஏதோ தாங்கள் பூர்வீகத்தில் செய்த புண்ணியம் எனக் கருதி மனம் நிறைவடைந்தார்கள்.

திருமணச் சடங்குகள் நிறைவடைந்ததும், மாறனது விருப்பப்படி முதலில் மாப்பிள்ளையும் பெண்ணும் திலகவதியின் வீட்டுக்குத்தான் போனார்கள். அங்கே மாறன் நெடுஞ்சாண் கிடையாக திலகவதியின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றது வாணிக்கு அதிர்ச்சியைத் தந்தது. புதுக் கணவனிடம் எதையும் கேட்டறியும் மனப்பக்குவம் அவளுக்கிருக்கவில்லை.

சிறிது நேரம் அங்கு தங்கிவிட்டு மாலையானதும் அவர்கள் கொக்குவிலில் இருக்கும் மாறனது வீட்டுக்குப் புறப்பட்டார்கள். அங்கு... சாரதாவும் சபேசனும் பெரும் எடுப்பில் அவர்களுக்கு வரவேற்பளித்து அசத்தி விட்டார்கள். உற்றார் உறவினர் என பலரும் அன்றைய இரவு விருந்துபசாரத்தில் கலந்து சிறப்பித்தார்கள். இத்தகைய ஆடம்பரங்களை மாறன் விரும்புவதில்லையாயினும் அவனது அக்காமார் மூவருமாகச் சேர்ந்து அசத்தி விட்டார்கள்.

மறுநாள் பொழுது விடிந்தது. காலை உணவு உட்கொள்ளும் போது மாறன் சொன்னான்.

"அம்மா! நாங்கள் வல்லிபுரக் கோயிலுக்கும் போய் கும்பிட்டிட்டு அப்பிடியே அந்தம்மா வீட்டுக்குப் போய் மதியச் சாப்பாடு சாப்பிட்டிட்டு பின்னேரமாய்த்தான் திரும்புவம்."

சாரதாவும் சபேசனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். சபேசன் வாய் திறந்தார்.

"சரி ராசா உன்னுடைய இஷ்டம்"

வாணியின் மனதில் மட்டும் ஒரு இனம் புரியாத தவிப்பு.

"யார் இந்த அந்தம்மா. அவள் மீது கரிசனையும் அக்கறையும் கொண்டவராய் இவர் இருக்கிறாரே. என்ன காரணமாயிருக்கும்"

அங்கலாய்த்த மனத்தை ஒரு கட்டுக்குள் கொண்டு வந்தாள், வாணி. "என்ன அவசரம், போகப் போக தெரிஞ்சு கொள்ளலாம்." மனம் அவளுக்கு அறிவுறுத்தியது.

சரியாக ஒன்பது மணிக்கு இருவரும் மாறனின் உந்துருளியில் புறப்பட்டுப் போனார்கள். கணவனுடன் உரசியவாறு உந்துருளியில் பயணிப்பது வாணிக்கு உள்ளத்தில் கிளுகிளுப்பை மூட்டியது. முதலில் வல்லிபுரக் கோயிலுக்குப் போய் மனம் நெகிழ்ந்து வணங்கினார்கள். இருவருக்குமே வாழ்க்கைத் துணை கிடைத்துவிட்ட நன்றியுணர்வோடு கூடிய வழிபாடு நிறைவுற்றது. பழைமை வாய்ந்த அந்தக் கோயிலைப் பற்றி தான் அறிந்தவற்றை அவன் மனைவி வாணிக்கும் விளக்கினான்.

இருவரும் ஒரு தூணின் அடியில் அமர்ந்து கொண்டார்கள். மாறன் ஒரு புதிரோடு பேச ஆரம்பித்தான்.

“வாணி! நான் உமக்குத் தாலிகட்டி உம்மை என்னுள் பாதியாக்கி விட்டேன். ஆனபடியால் எங்களுக்குள்ள எந்த இரகசியமும் இனி இருக்கக் கூடாது.என்ன ! நான் சொல்லுறது சரிதானே?”

வாணி விக்கித்துப் போனவளாய் தலையை மட்டும் ஆட்டினாள்.

“இப்ப நான் எனக்குள்ள இருக்கிற இரகசியங்களை உமக்குச்சொல்லப் போறன்.”

“சரி சொல்லுங்கோ”

“நான் இந்த உலகத்தில வந்து பிறக்கும் போதே ஒரு குறைபாடுள்ள பிள்ளையாத்தான் பிறந்தேனாம். எனக்கு இதயத்தில ஒரு ஓட்டை பிறவியிலே இருந்ததாம். நான் சின்னப் பிள்ளையாய் இருக்கும் போது மற்றைய பிள்ளைகளைப் போல ஓடித்திரிஞ்சு விளையாட மாட்டேனாம். சோர்ந்து போய் ஒரு இடத்திலையே இருப்பேனாம்.”

“மூன்று பெண்பிள்ளைகளுக்குப் பிறகு பிறந்த ஆண் குழந்தையும் இப்படியாயிற்றே என்ற மனவருத்தத்தோடு ஒருபக்கம் கோயில்களை தரிசித்தும், மறுபக்கம் வைத்தியசாலையோடும் வாழ்க்கையைக் கழித்தவையாம். அப்பதான் யாரோ சொன்னார்களாம் கொழும்புக்குக் கொண்டு போனால் இருதய மாற்றுச்சிகிச்சை செய்யலாம் என்று. உடனேயே என்னைக் கூட்டிக் கொண்டு கொழும்புக்கு வந்திட்டினம். அப்ப எனக்கு பத்து வயது. அங்கை என்னை பரிசோதித்த டொக்டர்ஸ் சொல்லிப் போட்டினம் இருதய மாற்று சிகிச்சை தான் இதுக்கு ஒரே தீர்வு என்று. அதுக்காக அங்கேயே காத்திருக்க வேண்டி வந்திட்டுது. பொருத்தமான இதயம்

*கிடைக்க வேணுமே.”*

*இடைநிறுத்தினான், மாறன் வாணிக்கோ மிகுதியையும் கேட்டுவிட வேண்டும் என்ற மன ஆவல்.*

*“பிறகு என்ன நடத்தது?”*

*“அந்தம்மா அப்ப கொழும்பில தான் இருந்தவ. அவவுடைய மகன் சாரங்கனுக்கு ஒரு விபத்தில் மண்டை அடிபட்டு மூளை செய லிழந்து போயிட்டுது, உணர்ச்சியற்று வெறும் கட்டையாய் கிடந்த அவனுடைய உயிர் எந்நேரமும் பிரியலாம் என்ற நிலைப்பாடு. அந்த நேரத்தில் அவனுடைய இதயம் எனக்குப் பொருந்தும் என டொக்டர்ஸ் கருதிச்சினம். நேரிடையாகவே அந்த அம்மாவிட்ட கதைச்சிருக்கினம். அந்த அம்மா அதுக்கு என்ன சொல்லியிருக்கிறா தெரியுமா?*

*“என்னுடைய பிள்ளை எனக்கில்லை என்று ஆன பிறகு அவனுடைய உறுப்புக்கள் எதெல்லாம் பயன்படுமோ அதெல் லாத்தையும் தேவைப்பட்டவைக்கு தானமாகக் குடுங்கோ என்று அவவின்ரை வயிற்றுக்குள்ள உருவான அந்த இதயத்தோடதான் நான் இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கிறன். அப்பிடி ஒரு மனப்பக்குவம் யாருக்கும் வரும், நீரே சொல்லும்.”*

*மாறன் கண்களைத் துடைத்துக்கொண்டான், என்ன அதிசயம் வாணியின் கண்களிலிருந்து நீர் தாரையாக வழிந்து கொண்டிருந்தது.*

*இப்போது வாணியின் கண்களுக்கு அவளது கணவன் மாறன் மட்டுமல்ல , அந்தம்மாவும் கோபுரமாய் உயர்ந்து நின்றாள். அவளது மனதில் தோன்றிய பல புதிர்களுக்கும் விடை தெரிந்து விட்டது.*

# வெண்மதி

*அன்று பௌர்ணமி. வான்பரப்பில் வெண்மதி தண்ணொளி பரப்பி பவனி வந்து கொண்டிருந்தாள். முற்றத்து மாவின் கீழ் போடப்பட்டிருந்த சாய் மனையில் சாய்ந்திருந்தவாறே சபேசன் கண்கொட்டா மல் முழுநிலவை அவதானித்துக் கொண்டிருந்தார். ஆகாய வெளியில் ஓய்வில்லாமல் ஓடிக் கொண்டிருந்த முகிற் கூட்டத்தினிடையே நிலாமகள் ஒளிர்வதும், கரு முகில்கள் கடந்து போகும் போது மறைவதுமாய் தோன்றிய காட்சி சபேசனது கவனத்தை ஈர்த்தது. எத்தனை நேரம் தான் அந்தக் காட்சியில் லயித்திருந் தாரோ... திடீரென அவரது கவனம் சிதைந்தது.*

*அவரது மனத்தில் இனம்புரியாத ஒரு கற்பனை உருவாகியதுதான் காரணம். வானத்து நிலவாக ஒளிர வேண்டிய அவரது மகள் இந்துவின் வாழ்க்கையை தனது மனைவி செங்கமலமே கருமுகிலாக உரு வெடுத்து களங்கம் விளைவிப்பதாக ஒரு உறுத்தல்.*

*பாவம் இந்து தாயில்லாப் பிள்ளை. இத்தனை காலமும் அலைக்கழிந்த வாழ்க்கையில் இனியாவது அவள் முழுநிலாவாக ஒளிர வேண்டும்.*

*சஞ்சலப்பட்ட மனதில் பிறந்த உறுதி அவரை சமையலறை வரைக்கும் இட்டுச் சென்றது. அங்கே... இந்து இரவு உணவை சமைத்துக் கொண்டிருந்தாள். சபேசனுக்கு இருந்த மன உளைச்சலில் அடக்க முடியாத ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது. சமையலறைக்குள் பிரவேசித்தவர், மீண்டும் திரும்பி மனைவி செங்கமலத்தைத் தேடிக் கொண்டு போனார்.*

தொலைக் காட்சி பெட்டியின் முன் சோபா வில் அமர்ந்திருந்தவாறு அம்மாவும் பெண்ணுமாக சீரியல் தொடர்களில் மூழ்கிப் போயிருந்தனர். ஒருநாளும் இல்லாதவாறு இன்று சபேசனது குரல் ஓங்கி ஒலித்தது.

"பகல் முழுதும் வேலை செய்திட்டு வாற பிள்ளையை சமைக்க விட்டிட்டு நீங்கள் இருவரும் இருந்து ரி.வி பாக்கிறியளோ?" செங்கமலம் ஒன்றும் மிரண்டு போனதாகத் தெரியவில்லை.

"ஏன் பகல் முழுவதும் நாங்கள் இரண்டு பேரும் தானே வீட்டு வேலையளைச் செய்யிறம். இப்ப அவள் செய்யட்டுமன்"

"நல்லாய் இருக்குது உம்முடைய கதை. அவளுக்கு நான் இந்தச் சம்பந்தத்தை செய்து வைக்கிறது என்ற முடிவெடுத்திட்டன்."

சோபாவை விட்டு எழுந்து செங்கமலம் அவர் முன் வந்து நின்று சீறினாள்.

"வீடு வளவையும் அவளுக்குக் குடுத்து பத்தாக் குறைக்கு பாங்க்கிலை இருக்கிற காசையும் தாரை வார்த்திட்டு என்ரை பிள்ளை என்னதெருவிலையே நிற்கிறது?"

"இப்ப உங்களை ஆர் தெருவிலை நிக்கச் சொன்னது, சுதாமதியும் என்ரை பிள்ளைதானே. அவளுக்கும் ஒரு நல்ல வாழ்க்கையை அமைச்சுக் கொடுக்காமல் நான் விட்டிடுவனா?"

"வீடு வளவை இந்துவுக்கு குடுத்தால் எங்களுக் கென்று மிஞ்சப்போறது அந்த மூன்று பரப்பு காணி மட்டும் தான். அதை வைச்சுக் கொண்டு அவளுக்கு என்னெண்டு மாப்பிள்ளை பாக்கிறது"

அவளுக்கு இப்ப இருபத்தியிரண்டு வயது தானே ஆகுது. அவளுக்கு கலியாணஞ் செய்ய இன்னும் நாலைஞ்சு வருசமாவது ஆகும். அதுக்கிடையில நாங்கள் அந்தக் காணிக்குள்ள ஒரு வீட்டை கட்டிப் போடலாம். நான் சொல்லுறது சரிதானே"

சபேசனும் விட்டுக்கொடுக்காமல் வாதாடி னார். ஆனால் செங்கமலம் இம்மியளவும் இடம் கொடுக்க வில்லை.

"இந்துக்கு கலியாணத்துக்கு இப்ப என்ன அவசரம். அவளுக்கு இருபத்தியாறு வயசுதானே. இன்னும் இரண்டு மூன்று வருசத்துக்கு அவள் உழைச்சுத் தந்திட்டு கலியாணம் செய்யலாமே."

செங்கமலத்தின் சுயலாப சிந்தனையை சபேசன் நன்கு புரிந்து கொண்டார். இருவருக்குமிடையே வாக்குவாதம் முற்றி வருவதை

*அவதானித்த இந்து ஓடி வந்து அவர்கள் இருவரையும் சமாதானப் படுத்தினாள்.*

*“அப்பா! சித்தி சொல்லுறது தான் சரி. எனக்கு இப்ப கல்யாணத்துக்கு என்ன அவசரம். எங்கட தகுதிக்கு மிஞ்சி கேக்கிற இந்த சம்பந்தத்தை வேண்டாம் என்று சொல்லிவிடுறது தான் சரி என்று எனக்குப் படுகுது”*

*தோற்றுப் போனவராய் சபேசன் முகத்தை தொங்கப் போட்டுக்கொண்டு முற்றத்துக்கு இறங்கிப் போனவர் மீண்டும் சாய்மனையில் சாய்ந்து கொண்டார். அவரது மனம் ஒரு நிலைப்பட மறுத்து அடம் பிடித்து நடுங்கிக் கொண்டிருந்த தேகத்தை ஆசுவாசப்படுத்த முயன்றவராய் வானத்தை அன்னாந்து பார்த்தார். அங்கே... உச்சத்தை நோக்கி ஊர்ந்து வந்து கொண்டிருந்த முழுநிலவை இப்போது கருமுகில்கள் மட்டுமல்ல. மாமரத்தின் கிளைகளும் மறைக்கத் தொடங்கியிருந்தன.*

*“என்னுடைய இந்துவின் வாழ்க்கை முற்றிலும் சோக மயமானது தானா. அவளுக்கு விடியலே கிடையாதா?”*

*மனம் ஏங்கித்தவித்தது கண்களை இறுக மூடிக் கொண்டார். மனம் அங்கலாய்க்கத் தொடங்கியது.*

*பாவம் இந்து பிறந்த வீட்டுக்கையே தாயைத் தின்றவள். அவளை வளர்ப்பதற்கு வழி தெரியாமல் நான் செங்கமலத்தை மனைவியாக ஏற்றுக் கொண்டது நான் விட்ட மாபெரும் தவறு. ஆனாலும் அநியாயம் சொல்லக் கூடாது. அனாதையாய் தனித்து நின்ற செங்கமலம் என்னோடு வாழ்க்கையைப் பகிர்ந்து கொண்ட போது ஒரு அப்பாவியாய் தான் செயற் பட்டாள். இந்துவை தன் சொந்த மகளாகவே கருதி கரிசனை காட்டினாள். ஆனால்... அவளுக்கென்று ஒரு குழந்தை பிறந்த போது தான் வந்தது வில்லங்கம். தான் பெற்ற குழந்தையை தலையில் தூக்கி வைத்து இந்து விடம் வேற்றுமை காட்டி நடக்கத் தொடங்கினாள். எனக்கோ இந்து என்றால் உயிர். அவளுடைய அம்மா சீதாலட்சுமியைப் போலவே சாயலிலும் சரி குணத்திலும் சரி அழகும் பொறுமையும் அவளுடன் கூடப்பிறந்த சொத்து.*

*நான் செங்கமலத்தை கைப்பிடித்ததால் சீதாவின் சகோதரர் கள் என்னை ஒதுக்கித் தள்ளி விட்டார்கள். அக்கா, அத்தான் என்று எங்களுடன் ஒட்டி உறவாடிய அவளுடைய அருமைத்தம்பி மோகள் கூட என்னிடம் கதைப்பதில்லை. இப்போது சில காலமாக அவன்*

இந்துவுடன் தொலைபேசியில் தொடர்பு வைத்திருக்கிறான். லண்டனில் வசிக்கும் அவன், அங்கிருந்து இங்கு வருபவர்களிடம் இந்துவுக்கு ஏதாவது அன்பளிப்பு பொருட்களைக் கொடுத்து விடுவது வழக்கம். அதையும் செங்கமலம் அவளை அனுபவிக்க விடமாட்டாள். அதில் சிறந்த பொருட் களாகப் பார்த்து சுதாவுக்கு கொடுத்து விட்டு மிகுதியைத் தான் இந்துவுக்குக் கொடுப்பாள். அதை யிட்டு இந்து அலட்டிக் கொள்வதில்லை. நானும் கண்டும் காணாததுமாய் விட்டுவிடுவது வழக்கம்.

ஆனால் இப்போது கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது போன்றதாகிவிட்டது எனது வாழ்க்கை. இந்து பெண் பிள்ளை. அவளை என்னால் தனியாக இருந்து வளர்த்து ஆளாக்கமுடியாது என்ற ஒரே காரணத்துக்காக யாருமற்ற அநாதையாக வாழ்க்கை தேடி நின்ற  செங்கமலத்தை நான் கை பிடித்தேன். ஆனால் நிலைமை இன்று எதிர்மாறாகி விட்டதே.

குழம்பிக் கிடந்த சபேசனது மனம் எனும் குரங்கு, எங்கெல்லாமோ கிளை கிளையாகத் தாவி தன் மகளது வாழ்க்கையை செப்பனிட ஒரு நல்ல முடிவைத் தேடி அலைந்து கொண்டிருந்தது. எத்தனை நேரம் தான் கண் மூடிக்கிடந்தாரோ… ஒரு அரவணைக்கும் குரல் அவரை உலுப்பியது.

“அப்பா! நேரமாகீட்டுது. வாங்கோ சாப்பிடுவம் ”

மகளின் குரல் கேட்டு கண் விழித்தவர், மறு பேச்சின்றி எழுந்து அவளைப் பின் தொடர்ந்தார்.

செங்கமலமும் , சுதாவும் சாப்பாட்டு மேசையில் அவருக்காக காத்திருந்தனர். எதுவித சலனமுமில்லாமல் செங்கமலம் அவருக்கு உணவைப் பரிமாறினாள். சபேசன் இந்துவையும் வந்திருந்து உணவருந்தும்படி அழைத்தார்.

“இந்து! நீயும் வாம்மா சாப்பிடலாம்”

அப்பாவின் வருடும் வார்த்தைகள் இந்துவின் மனதை நெகிழ வைத்தது. சித்தியை தயக்கத்துடன் திரும்பிப் பார்த்தாள். அவளுடைய திருமணப்பேச்சை கலைத்துவிட்ட  நிம்மதி சித்தியின் முகத்தில் தாண்டவ மாடியது.

“இந்து சொல்லுறது சரிதானே. அவங்கள் கேக்கிறதை அப்பிடியே அள்ளிக் குடுக்க வேணுமென்று ஒற்றைக் காலில நிக்கிறியள்”

செங்கமலத்தின் சீற்றம் இப்போது கணவனின் பக்கம் திரும்பியது.

“இனி இந்த கதையை விட்டிடுவம்”

இந்து நிலையைச் சமாளிக்க முயற்சித்தாளேயன்றி அவளது உள்ளம் கொதித்துக் கொண்டு தானிருந்தது.

திருமணம் மூலமாவது சித்தியின் நிர்ப்பந்தத்திலிருந்து தப்பிக்கலாம் என்ற நப்பாசையுடன் காத்திருந்த வளுக்கு ஏமாற்றமே மிஞ்சியிருந்தது. அன்று இரவு அவள் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாளே தவிர , நித்திராதேவி அவளை அணுக மறுத்து விட்டாள். சித்தியையும் தங்கை சுதாவையும் பற்றிய எண்ணங்களே அவள் மனதில் குறும்படமாக ஓடிக் கொண்டிருந்தது.

தங்கை சுதா முன்னரெல்லாம் அவனை அனுசரித்துத் தான் நடந்து கொண்டிருந்தாள். சித்தி தான் அவளின் மனதில் பொறாமை எனும் தீயை மூட்டி அதை அணைய விடாமல் ஊதி ஊதி பெருப்பித்துக் கொண்டிருக்கிறாள். சித்தி கொடுத்த அதீத செல்லத்தி னால் அவளுக்கு படிப்பு ஏறவில்லை. ஓ.எல். பரீட்சையை கோட்டை விட்டதுடன் சரி படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தாயிற்று.

இந்துவோ சித்தியின் நச்சரிப்புக்கு மத்தியிலும் கடின முயற்சி எடுத்துப் படித்து ஒரு பட்டதாரி ஆகி விட்டாள். அப்பாவின் கரிசனையும் அனுசரனையும் அவளை அந்த நிலைக்கு கொண்டு வந்து விட்டது. பிரதேச செயலகத்தில் உத்தியோகம் கிடைத்து அவள் வேலைக்குப் போய் வருவதற்கென ஒரு ஸ்கூட்டரை வாங்குவதற்காக முனைந்த போது சித்தியின் எதிர்ப்பு பலமாக இருந்தது. அதையும் பொருட்படுத்தாமல் அப்பா அவளை எதிர்த்து நின்று வாங்கிக் கொடுத்த போது அவளது மனதில் ஒரு நம்பிக்கை தோன்றி யிருந்தது. சித்தியை எதிர்த்து அப்பா அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பார் என்ற நம்பிக்கை தான் அது.

கல்யாணத் தரகர் ஒருவர் சாதகக் குறிப்புடன் மாப்பிள்ளை சுதர்மனின் போட்டோ ஒன்றையும் அப்பாவிடம் கொண்டு வந்து கொடுத்திருக்கிறார். குறிப்பு அவளுடையதுடன் நன்கு பொருந்தி யிருந்தது. அப்பா அவளிடம் சுதர்மனின் போட்டோவைக் காட்டி போது ஏனோ அவளையறியாமலேயே அவனிடம் ஒரு ஈர்ப்பு ஏற்பட்டிருந்ததை அவளால் நன்கு உணர முடிந்தது. அன்றிலிருந்து அவளது நினைவில் வந்து பல வகையான கற்பனைத் துளிகள் அவளது நெஞ்சத்தை ஆக்கிரமிக்கத் தொடங்கி விட்டன. இப்போது

எடுத்த எடுப்பில் எனக்கு திருமணம் வேண்டாம் என்று வாயார சொல்லி விட்டாலும் மனம் எனும் குரங்கு அங்கலாய்க்கத் தொடங்கி விட்டது.

மறுநாள் வேலைக்குப் போயிருந்த போது அவளது சிநேகிதி யான பிரியா அவளது முக வாட்டத்தைக் கண்டு ஒரேயடியாக குடைந்தெடுத்து விட்டாள். வேறு வழியில்லாமல் அவளிடம் தனது அந்தரங்கத்தை உளறிக் கொட்டினாள் இந்து.

“இந்து! நீர் ஒன்றுக்கும் கவலைப்படாதையும். நான் ஒன்று மட்டும் சொல்லுவன் நிச்சயமாய் இந்த அழகான முகத்தை அவர்கள் பணத்துக்காக விட்டுக் கொடுக்க மாட்டார்கள். கட்டாயம் அவை தேடி வருவினம் இருந்து பாரும்.”

தோழியின் வார்த்தைகள் தந்த ஆறுதலோடு அவள் வேலையைக் கவனிக்கத் தொடங்கி விட்டாள்.

மாதம் ஒன்று உருண்டோடியது. பிரியாவின் வாக்கு வீண்போகவில்லை. மீண்டும் மாப்பிள்ளை வீட்டார் சபேசனைத் தேடி வந்துவிட்டார்கள். வீடு வளவு இல்லாவிட்டாலும் பறவா யில்லை மூன்று பரப்புக் காணியுடன் பணமாக பதினைந்து இலட்சம் தந்தால் போதும். தாங்கள் வீட்டைக் கட்டிக் கொள்வதாக ஒரு கோரிக்கையை முன் வைத்தார்கள். சபேசனுக்கு அது மன நிறைவைத் தந்தது. இருந்தாலும் இன்னும் ஐந்து இலட்சம் பணம் தேட வேண்டும். அத்துடன் செங்கமலம் இருப்பில் இருக்கும் முழுப் பணத்தையும் கொடுக்க சம்மதிக்க வேண்டுமே என்ற ஆதங்கம் வேறு அவரது மனதை அரித்தது.

விளைவு... அடுத்த சில நாட்களாக வீட்டில் பூகம்பம் தொடர்ந்து வெடித்துக் கொண்டிருந்தது. இதில் பாதிப்புக்குள்ளாகி யவர்கள் அப்பாவும் பெண்ணும் தான். வீட்டில் அப்பாவுக்கும் சித்திக்குமிடையே நடக்கும் சண்டை சச்சரவுகளைப் பார்த்து இந்துவுக்கு மனத் தாக்கம் அதிகமாகிக் கொண்டே போனது. அப்பாவோ அவள் சொல்வதை கேட்கிறாரில்லை. சித்தியோ அவளை எந்நேரமும் வார்த்தைகளில் வதைத்த படியே இருக்கிறாள்.

ஐந்து இலட்சம் பணத்தை புரட்டுவதற்கு அப்பா எங்கெல்லாமோ நாயாய் அலைகிறார். ஒன்றும் கை கூடிய பாடா யில்லை. செய்வதறியாது இந்து திகைத்து நின்ற வேளையில் அன்று அவளுக்கு வெளிநாட்டு அழைப்பு ஒன்று வந்தது. எடுத்துப் பார்த்தாள் அது மோகன் மாமா.

இருவரும் பரஸ்பரம் சுகம் விசாரித்துக் கொண் டனர். மாமா தான் முதலில் பேச்சை ஆரம்பித்தார்.

“கொப்பருக்கு உன்னை கட்டிக் கொடுக்கிற எண்ணம் இல்லையே வயதும் இருபத்தாறாகி விட்டுது. இன்னும் வைச்சிருந்து உன்னைக் கொண்டு உழைப் பிக்கிற யோசனையோ”

மோகன் மாமாவுக்கு அப்பாமீது எப்போதும் வருத்தம் தான் சித்தியைத் திருமணம் செய்தது அவருக்கு அறவே பிடிக்காத விடயமாகிவிட்டது.

“இல்லை மாமா. இப்ப ஒரு சம்பந்தம் பொருந்தியிருக்கு அவை பதினைந்து இலட்சம் காசாகத் தர வேணும் என்று ஒரே பிடியாக நிக்கினம். அப்பாவிட்ட பத்து இலட்சம் தான் பாங்க்கில் இருக்கு மிகுதிக் காசை ஒழுங்கு பண்ணிக் கொண்டிருக்கிறார்.”

உண்மை நிலையை இந்து விளக்கினாள்.

“இந்து! உதெல்லாத்தையும் உதறித் தள்ளிப் போட்டு நீ லண்டனுக்கு வாறதுக்கு றெடியெண்டால் சொல்லு. உனக்கு நான் இங்கையே மாப்பிள்ளை பாக்கிறன்”

இந்து தயக்கத்துடன் சொன்னாள்.

“இல்லை மாமா. நான் அப்பாவை விட்டிட்டு வர முடியாது. அவரை கடைசி மட்டும் வைச்சுப் பார்க்க வேண்டிய பொறுப்பு எனக்கிருக்குது. ஏனெண்டால் அப்பா எனக்காக எவ்வளவோ கஷ்டத்தை தாங்கினவர். இப்பவும் தாங்கிக் கொண்டிருக்கிறார்.

சிறிது நேரத்துக்குப் பின் மாமாவின் குரல் கேட்டது.

“இஞ்சைபார் இந்து. கொம்மா ... அது தான் எங்கடை சீத்தாக்கா சின்ன வயசில என்னைக் கஷ்டப்பட்டு வளர்த்தவா. அம்மா செத்துப் போனாலும் ஒரு தாயாக இருந்து என்னை வளர்த்தெடுத்தவா. அந்த நன்றிக் கடனுக்காகத் தான் நான் உன்னில் இவ்வளவு கவனம் எடுக்கிறன். விளங்குதோ?”

“ஓம் மாமா எனக்கு விளங்குது.”

“இதென்ன இந்த மனுசன் ஒரே தொண தொணப்பாய்க் கிடக்கு” இந்துவின் மனம் அடித்துக் கொண்டது.

“இந்து! நான் உனக்காக... அதாவது என்ரை அக்காவின்ரை மகளுக்காக... அவவுக்குச் செலுத்தும் நன்றிக்கடனாக ஒரு பதினைஞ்சு இலட்சம் உன்ரை பேரில போட்டு விடுறன். நீ

*உன்னுடைய எக்கவுண்ட் நம்பரை எனக்கு எஸ். எம். எஸ். பண்ணிவிடு என்ன!...”*

*“சரி மாமா தாங்க்ஸ்”*

*இந்துவின் குரல் தளுதளுத்தது அவளது குரலில் இழையோடிய நன்றிக் கடனையும் நெகிழ்வையும் அவரால் உணர முடிந்தது.*

*“இந்து! நான் சொன்னபடி எஸ்.எம்.எஸ் பண்ணிவிடு. நீ நல்லாயிருக்க வேணும். என்ரை அக்கா வின்ரை மகள் சந்தோசமாய் இருக்க வேணும். இது தான் என்னுடைய ஆசை.”*

*மீண்டும் மாமாவுக்கு நன்றி செலுத்தினாள் தொடர்பு அற்றுப் போயிற்று. இந்துவின் மனதில் ஒரே கிளுகிளுப்பு. இந்தத் தகவலை அப்பாவிடம் சொல்ல வேண்டும் என்ற ஆவலுடன் அப்பாவைத் தேடிப் போனாள்.*

*அங்கே... சபேசன் தனது சாய்மனையில் சாய்ந்தவாறு ஆகாயத்தில் தோன்றிய முழுநிலவை வெறித்துக் கொண்டிருந்தார். கருமுகில்களின் ஆக்கிரமிப்பு விலகி வெண்மதி தண்ணொளி பரப்பிக் கொண்டு பவனி வருவதை அவரால் உணர முடிந்தது.*

ஜீவநதி - கார்த்திகை - 2020

# பிணைப்பு

காலை நேரத்து இளவெயில் மேனியைத் தீண்டி வெப்பத்தின் தகிப்பினால் முத்து முத்தாக வியர்வைத் துளிகள் உருவெடுத்து அவள் அணிந்திருந்த ஆடையை தெப்பமாக நனைந்திருப்பதைக் கூட உணர முடியாதவளாய் கிணற்றுக் கட்டில் அமர்ந்திருந்தாள், சிவமலர். அவளுடைய மனத்தில் பெரிய போராட்டமே அரங்கேறிக் கொண்டிருந்தது.

அவள் ஒரு கலைப்பட்டதாரி வேலைவாய்ப்பு இன்னும் கிட்டவில்லை. வேலை வாய்ப்பிற்காக ஏக்கத்துடன் காத்திருப்பவளைத் தேடி திருமண வாய்ப்பு கை கூடி வந்திருக்கிறது. அது அவளுக்கு கிடைத்த அதிட்டம் என அம்மா கருதுகிறாள்.

அம்மாவுக்கு அவள் ஒரே பிள்ளை. ஒருவேளை அப்பா உயிரோடு இருந்திருந்தால் அவளுக்கு ஒரு தம்பியோ... தங்கையோ இருந்திருக்கலாம். ஆனால்... அவள் கைக் குழந்தையாய் இருக்கும் போதே அப்பா வயலில் வேலை செய்து கொண்டிருக்கும் போது எறிகணை வீச்சுக்கு இலக்காகி இறந்து போய்விட்டா ராம். தனியொருவளாக அம்மா குடும்ப பாரத்தைச் சுமந்து அவளை வளர்த்து ஆளாக்கி விட்டிருக்கிறாள்.

அவளுக்கு எல்லாமே அம்மாதான். தான் படித்து முடித்ததும் வேலையாகி சம்பாதித்து அம்மாவை ஒரு கஷ்டமுமில்லாமல் நன்றாக வைத் திருக்க வேண்டும் என்பதுதான் சிவமலரின் இலட்சி யம். அதற்கு இடையூறாக பக்கத்து வீட்டு காந்திமதி அக்கா ஒரு வெளிநாட்டு சம்மந்தத்தை கொண்டு

வந்தது மட்டுமல்லாமல் அம்மாவின் மனத்தில் ஆசை என்னும் தீயையும் மூட்டிவிட்டிருக்கிறாள்.

எந்தவொரு தாயும் தன்பிள்ளை நல்வாழ்வு வாழவேண்டு மென்று விரும்புவது சகஜம் தானே. அம்மாவின் மனத்திலும் அந்த நெருப்பு மூண்டு கொழுந்து விட்டெரிய ஆரம்பித்து விட்டது.

"இஞ்சை பார் சரசு! உன்ரை பிள்ளைக்கு சீதனமாய் குடுத்து கட்டி வைக்க நீ என்னத்தத் தான் தேடி வைச்சிருக்கிறாய். அவங்கள் சீதனம் ஒண்டும் வேண்டாமாம். பெண்ணை மட்டும் தந்தால் போதும். மற்றதெல்லாம் நாங்கள் பாத்துக் கொள்ளுவம் எண்டு சொல்றாங்கள். இப்பிடி ஒரு சம்மந்தம் வலிய வந்து அமைய நீ குடுத்து வைச்சிருக்க வேணும் கண்டியோ! பேசாமல் சரியெண்டு சொல்லிவிடு."

காந்திமதியின் பிடியிலிருந்து தப்பிக்க வேறு வழியில்லாமல் சரசு அவளைச் சமாளிக்க வேண்டியதாயிற்று.

"பொறுங்கோ அக்கா. நான் மலரோடையும் ஆறுதலாய் கதைச்சுப் போட்டு என்ரை முடிவைச்சொல்லுறன்."

காந்தி மதி அவளை விடவில்லை.

"இதிலை என்ன யோசிக்கக் கிடக்குது. வலிய வாறதை உதறித் தள்ளிப் போட்டு பேந்து நீதான் கிடந்து அலைவாய்."

"எல்லாம் எனக்கு விளங்குது."

சரசு ஒருவாறு தப்பித்துக் கொண்டாள். ஆனால் அவளது மனமோ நிலைகொள்ள மறுத்து தத்தளிக்கத் தொடங்கிவிட்டது. மகளது மனத்தை சலவை போட முற்பட்டாள்.

"இஞ்சார் பிள்ளை மலர்! நாங்கள் கனவில கூட நினைச்சுப் பாத்திராத சம்மந்தம் எங்களைத் தேடி வந்திருக்குது. நாலுபேரைப் போல நீயும் சொகுசாய் வாழலாம். நீயும் பிறந்ததிலயிலிருந்து இந்த வறுமையைத் தானே வாழ்க்கையில அனுபவிச்சிருக்கிறாய்."

தாயை பேசவிடாமல் இடைமறித்தாள், மலர்.

"அப்பிடிச் சொல்லாதையுங்கோ அம்மா. கஞ்சியோ... கூழோ... அதை உங்களோடு சேர்ந்து பகிர்ந்து குடிக்கிறலதான் எனக்கு திருப்தி இருக்கு. தவிர உங்களைத் தனிய விட்டுட்டு நான் எங்கையுமே போகமாட்டன். எனக்கு அப்பிடியொரு ஆடம்பர வாழ்க்கை வேண்டவே வேண்டாம்."

மலர் தன்னுடைய முடிவில் உறுதியாய் இருப்பது தாய்க்கு நன்கு புரிந்தது. ஆனால் மலரின் மன உறுதி ஆட்டம் காண

ஆரம்பித்திருப்பதை அவள் உணர்ந்தாளில்லை.

இரண்டு மாதங்களுக்கு முன் அவளுடன் பயின்ற மிதுனா அவுஸ்திரேலியாவிலிருந்து ஊருக்கு வந்திருந்தாள். தற்செயலாக அவளை கோயிலில் சந்திக்க நேர்ந்தது. செல்வச் செழிப்பினால் உரு மாறிப் போயிருந்த மிதுனாவை அவளால் அடையாளம் காண முடிய வில்லை. ஆனால் அவள் சிவமலரை இனங்கண்டு கொண்டாள்.

“என்னப்பா சிவமலர்! என்னைத் தெரியேல்லையே?”

தனது தோளைத் தொட்டு உலுப்பியவளை, ஒரு கணம் உன்னிப் பாக கவனித்த பின் தான் அவளை அடையாளங் காண முடிந்தது.

“நீர்… மிதுனா தானே?”

இருவருக்கும் அந்த சந்திப்பு மகிழ்ச்சியைக் கொடுத்தது இறைவணக்கத்தை முடித்துக் கொண்டு வெளியே வந்தவர்கள் நீண்ட நேரம் அவளவளாவிக் கொண்டிருந்தனர். மிதுனா தனது வெளி நாட்டு வாழ்க்கையயைப் பற்றி கதை கதையாக அளந்தாள். அதைக் கேட்டுக் கொண்டிருந்த சிவமலருக்கு அவள் மீது சற்று பொறாமை ஏற்பட்டது என்னவோ உண்மைதான்.

“இஞ்சை மாதிரி அங்கை நாங்கள் பஸ்ஸுக்காக வெயிற் பண்ணுறதில்லை. எங்கட வீட்டில ஆளுக்கொரு கார் இருக்குது. எங்கையும் போறதெண்டால் நான் என்ரை காரை எடுத்துக் கொண்டு போவன்.”

மிதுனா வாங்கிக் கொடுத்த ஐஸ்கிறீமை சுவைத்துக் கொண்டி ருந்த சிவமலரின் மனதிலும் ஒரு ஏக்கம் தோன்றத்தான் செய்தது.

“அப்படியொரு வாழ்க்கை இந்த ஜென்மத்தில் எனக்கும் கிட்டுமா?”

ஒரேயொரு கணம் தான் மறுகணமே தன்னை சுதாகரித்துக் கொண்டு விட்டாள். “சே!” இது என்ன விபரீத ஆசை” மனம் சலித்துக் கொண்டது.

மிதுனா ஊரில் தங்கியிருந்த அந்த ஒருமாத காலத்தில் சிவமலரும் அவளும் அடிக்கடி சந்தித்துக் கொண்டனர். மிதுனா அவளுக்கு விலையுயர்ந்த சாறி ஒன்றை அன்பளிப்பாகக் கொடுத் திருந்தாள். நல்ல வேளை அந்த சாறியை சிவமலர் தனது பட்டமளிப்பு விழாவுக்கு அணிந்து கொள்ள முடிந்தது. அல்லாவிட்டால் அம்மாவைக் கஷ்டப்படுத்தி ஒரு சாறியை வாங்கி உடுப்பதை விட அவள் அந்தவிழாவையே தவிர்த்திருப்பாள். அதற்கு பிராயச்சித்தமாக

சிவலமலரும் அம்மாவிடம் சொல்லி சில தின்பண்டங்களைச் செய்து கொண்டு போய் மிதுனாவுக்கு கொடுப்பாள். அதை அவள் ஆவலோடு ரசித்து ருசிக்கும் போது சிவமலரின் உள்ளம் குளிர்ந்து போகும்.

ஒரு நாள் சிவமலர் கொடுத்த பனங்காய் பணியாரத்தை சாப்பிட்டவள், ஒரு குட்டிப் பிரசங்கமே நடத்தி விட்டாள்.

"இந்தப் பனங்காய் இருக்குதே. .. இது எங்கட மண்ணுக்கு இயற்கை தந்த வரம் என்றுதான் சொல்ல வேணும். இதில இருக்கிற வாசம் மட்டுமல்ல. சுவையும் தனிதான். உடன் பனங்காயில் எடுக்கிற களியிலயிருந்து செய்யிற இந்தப் பலகாரத்தின்ர ருசி எதிலும் வராது. அங்கை எங்கட சனங்கள் விதம் விதமான "கேக்"குளை செய்து சாப்பிடுகினம். ஆனால்.. இந்த ருசி வித்தியாசமானது அங்கையும் பனங்களியை போத்தலில அடைச்சுக்கொண்டு வந்து விற்கினம். நானும் வாங்கி பலகாரம் செய்யிற நான். ஆனால் அது இந்த ருசிக்கு ஈடாகாது."

"கேக்"கைப் பற்றி மிதுனா கூறியதும் சிவமலருக்கு அவற்றை சுவைக்க வேண்டுமென்ற தாபம் மேலிட்டது. நாவில் சுரந்த உமிழ்நீரை வெகு சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

இறுதியாக மிதுனா அவுஸ்திரேலியாவுக்கு புறப்படும் போது சிவமலர் அவளைச் சந்தித்து பனாட்டு, ஒடியல் மா போன்ற பனம் பண்டங்களை அவளுக்கு கொடுத்து விட்டாள். முகம் மலர மிதுனா அவற்றை வாங்கி பக்குவப்படுத்தியது அவளுக்கு மனமகிழ்ச்சியையும் நிறைவையும் தந்தது.

பாடசாலை நாட்களில் அவர்கள் இருவரும் ஒரே வகுப்பில் பயின்ற அறிமுகம் தான் இருந்தது. ஆனால் இப்போது இருவருக்குமிடையிலான நெருக்கம் அதிகரித்திருந்தது. மிதுனா அவளுக்கு ஒரு அலைபேசியையும் வாங்கிக் கொடுத்துவிட்டுப் போயிருந்தாள். இப்போதெல்லாம் மிதுனாவுக்கு நேரம் கிடைக்கும் போது அலைபேசியில் தொடர்பு கொண்டு அவளுடன் அளவளாவுவாள்.

அலைபேசியை பாவிக்கும் போது சிவமலரின் மனத்தில் ஒரு உறுத்தல் தோன்றிக் கொண்டேயிருக்கும். அவள் தன்னைத் தானே சமாதானப் படுத்திக் கொள்வாள்.

"எப்பிடியும் எனக்கு இந்த வருசத்துக்குள்ள வேலை கிடைச்சிடும். நான் உழைக்கத் தொடங்கினால் எங்கட கஷ்ட மெல்லாம் பறந்து போயிடும். அடுத்த கிறிஸ்மஸ் லீவுக்கு மிதுனா வரும் போது நான் அவளுக்கு பெறுமதியான அன்பளிப்பொன்றை வாங்கிக்குடுப்பன்."

"டிரிங்! டிரிங்!! டிரிங்!!!"

*திடீரென ஒலித்த அலைபேசியின் ஒலி அலை பாய்ந்து கொண்டிருந்த அவளது மனதை ஒருநிலைப்படுத்தி திடுக்கிட்டு விழிக்க வைத்தது. அருகிலிருந்த அலைபேசியை எடுத்து தொடர்பு கொண்டாள்.*

*"ஹலோ சிவமலர்! நாளைக்கு மீற்றிங் இருக்குது. நினைவில இருக்குதோ?"*

*"ஓமோம். நான் கட்டாயம் வருவன். நீரும் வருவீர் தானே?"*

*"ஓமப்பா. போகேக்க நான் வந்து உம்மை "பிக்அப்" பண்ணுறன். நீர் வெளிக்கிட்டு றெடியாய் இரும். அதைச் சொல்லத் தான் இப்ப எடுத்த நான்."*

*சிவமலரின் சிநேகிதியான ரம்யா கூறிவிட்டு போனை வைத்து விட்டாள். சிவமலரின் மனதில் விரக்தி தோன்றியிருந்தது.*

*"ரம்யாவும் என்னைப் போல ஒரு வேலை தேடும் பட்டதாரி தான். ஆனால் ஒன்று அவள் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவள். சகல வசதியுடனும் வாழ்ந்து கொண்டிருக்கிறாள். எனக்கு வாழ்வா தாரத்துக்காக ஒரு வேலை தேவைப்படுகிறது. அவளுக்கோ வேலை என்பது ஒரு பொழுது போக்கு"*

*ம்!... அவளையறிாமலே நீண்டதொரு பெருமூச்சு வெளியேறி அவளை ஆசுவாசப்படுத்தியது.*

*எத்தனை கலந்துரையாடல்கள் ... எத்தனை போராட்டங் கள்... பட்டப்படிப்பு முடிந்து மூன்று வருடங்களாகி விட்டன. இன்னமும் வேலை தேடி அலைய வேண்டியிருக்கிறது.*

*மனம் சலித்துக் கொள்கிறது.*

*"இந்தக் கலியாணத்தைச் செய்து கொண்டு அவுஸ்திரேலி யாவுக்கே போய்விட்டால் அங்கு தானே மிதுனாவும் இருக்கிறாள். அம்மாவையும் அங்கு அழைத்துக் கொள்ளலாம்.*

*மனதில் ஒரு சிறு சபலம் தோன்றுகிறது.*

*ம்பா! ...ம்பா!!...*

*மாட்டுக் கொட்டிலில் கட்டியிருந்த பசுவின் குரல் அவளது கவனத்தை திசை திருப்புகிறது. நிமிர்ந்து பார்க்கிறாள். வாலை உயர்த்தியவாறு வளவுக்குள் ஓடித்திரிந்த கன்றுக்குட்டி தாயின் குரல் கேட்டு ஓடி வந்து மடியை இடித்து பாலைக் குடிக்கிறது. கன்றின் வாயிலிருந்து நுரை வழிகிறது. இந்த இயற்கையான காட்சி அவளது*

உள்ளத்தில் தோன்றிய சபலத்தை துடைத்துவிட, அவள் எழுந்து வீடு நோக்கி நடக்கிறாள்.

முகத்தில் கேள்விக் குறியுடன் அவளை நோக்கிய அம்மாவைப் பார்த்து அவள் முறுவலிக்கிறாள்.

"பிள்ளை மலர்! என்ன முடிவெடுத்திருக்கிறாய்?"

நிதானமாக அவள் பதிலிறுக்கிறாள்.

"அம்மா! நாளைக்கு எங்களுக்கு "மீற்றிங்" நடக்கப் போகுது. அதிலை ஒரு நல்ல முடிவு கிட்டும் என்று எதிர்பார்க்கிறன்.

"எனக்கெண்டால் நம்பிக்கையில்லை"

சட்டென இடைமறித்துச் சொன்னாள் அம்மா. சிவமலருக்கு தலையில குட்டிவிட்டாற் போல ஆத்திரம் ஏற்பட்டது. மளமள வென்று பொரிந்து தள்ளினாள்.

"நம்பிக்கைதானம்மா வாழ்க்கை. முதல்ல நம்பிக்கையோடு வாழப் பழகிக் கொள்ளுங்கோ. எங்கட மண்ணிலையெ இருந்து கொண்டு போராடி எங்கட தேவைகளைப் பெற்றுக்கொள்ளுறதை விட்டிட்டு , அந்நிய மண்ணில போய் ஆடம்பர வாழ்க்கை வாழ நான் விரும்பேல்ல. சொந்த மண்ணில் சுயமாக உழைச்சு வாழுற வாழ்க்கை தான் மேலானது. எவ்வளவு காலம் போனாலும் பறவாயில்ல நான் காத்திருப்பன்."

அம்மாவின் மகம் சுருங்கிப் போனது. அதே சமயம் போனிலிருந்து அழைப்பும் வந்தது. போனை எடுத்துப் பார்த்தாள். மிதுனா தான் அழைத்திருந்தாள். அம்மாவின் கவனத்தை திசை திருப்புவதற்காக போனை ஒன் பண்ணி ஸ்பீக்கரில் போட்டாள். மிதுனாவின் குரல் தெளிவாக ஒலித்தது.

"சிவமலர்! நீர் சொன்ன முகவரியிலுள்ள வரைப் பற்றி விசாரிச்ச நான். அவர் ஒரு பெரிய கார் கம்பனி வைச்சிருக்கிறார். நல்ல வசதியானவர் ஆனால்…"

"என்னப்பா மிதுனா! ஆனால் எண்டிட்டு சொல்லத் தயங்குறீர்?"

"அது வந்து… என்னெண்டால் அவர் ஒரு வெள்ளை இனப் பெண்ணை திருமணம் செய்து இரண்டு குழந்தைகளோட .. இப்ப "டிவொர்ஸ்" வாங்கிட்டார் என்று அறிஞ்சன்."

கேட்டுக்கொண்டிருந்த அம்மாவுக்கு மனம் "பகீர்" என்றது. சிவமலரின் முகத்தில் எதுவித மாற்றமுமில்லை. அவளுக்கு… தனது வளவில் சுயமாக ஓடித்திரிந்த கன்றுக்குட்டியின் நினைவு வந்தது.

# கருகிய கனவுப் பூக்கள்

*மென்மையான ரோஜாப்பூக்களைப் போன்ற இதயம் அவளுக்கு அன்பும் கருணையும் அவளுடன் ஒன்றிணைந்த குணவியல்பு. அப்பேர்ப்பட்ட பொறுமையின் சின்னமாய் விளங்கும் அவளையே சில வேளைகளில் நோயாளர்கள் சோதனைக் குட்படுத்தி விடுவார்கள். இத்தனைக்கும் அவள் ஒரு மருத்துவத் தாதி. கடமையே கண் என செயற்பட்டுக் கொண்டிருப்பவள்.*

*மேசையின் முன் அமர்ந்திருந்த வாணி, தன் முன்னால் கிடந்த மருத்துவக் குறிப்பேடுகளை ஒரு தரம் நோட்டம் விட்டவள், அருகில் நின்றிருந்த தாதிய பயிற்சியாளரிடம் உத்தரவிட்டாள்.*

*"இந்த ரிக்கற்றுக்களையெல்லாம் எடுத்துக் கொண்டு போய் அவரவர் "பெட்"களில் மாட்டி விடுங்கோ."*

*வாணி எழுந்து நடக்க, அவளது உதவியாளர் மருந்துகள் நிறைந்த வண்டியை உருட்டி வந்து முதலாவது கட்டிலின் முன் நிறுத்தினாள். வாணி மருத்துவக் குறிப்பேட்டை ஒரு தரம் நோட்டமிட்டாள். அதில் எழுதியிருந்த மருந்துக் குளிகைகளை எடுத்துக்கொடுக்க, உதவியாளர் அதை கையில் வாங்கி நோயாளரிடம் கொடுத்தாள்.*

*கையில் வாங்கிய குளிகையை நோயாளி பெரும் சிரமப்பட்டு தண்ணீருடன் விழுங்குவதைக் கண்ணுற்ற வாணிக்கு சிரிப்பாக வந்தது.*

*“மருந்தை வேளை தவறாமல் குடித்தால் தான் நோய் குணமாகும்.”*

*செல்லமாக கண்டித்தவளை நிமிர்ந்து பார்த்த நோயாளி , சிரித்தார். அடுத்த கட்டிலை நோக்கி அவளது கால்கள் முன்னேறின. கூடவே மருந்து வண்டியும் நகர்ந்தது.*

*மருத்துவக் குறிப்பேட்டை எடுத்துப் பார்த்தவளது கைகள், ஊசி மருந்தை “சிறிஞ்”சில் நிரப்ப முற்பட்ட போது தான் அவள் நிமிர்ந்து நோயாளியைப் பார்த்தாள். என்ன ஆச்சரியம் . நோயாளி தலையை இழுத்து மூடியவாறு படுத்தருந்ததை அவதானித்தவளுக்கு “திக்“ என்றது.*

*“இதென்ன கூத்து. நியூமோனியா பேஷன்ற் முகத்தை மூடி வைச்சிருந்தா... மூச்சுத் திணறல் வரப் போகுது.”*

*இப்போது நோயாளியின் பராமரிப்பாளர் வாய் திறந்தார்.*

*“சிஸ்டர்! நீங்கள் ஊசிப் போடப்போறியள் என்ற பயத்தில தான் அவர் போர்வையால மூடிக் கொண்டிருக்கிறார்.”*

*அவனது போர்வையை இழுத்து விலத்தியவாறே, வாணி கேட்டாள்.*

*“ஆர் சொன்னது நான் ஊசிப் போடப் போறனெண்டு”*

*“டொக்டர் தான்சொன்னவர் மிஸ். பிளீஸ் எனக்கு என்ன மருந் தென்றாலும் தாங்கோ. ஆனால்... ஊசி மட்டும் போடாதை யுங்கோ.”*

*கெஞ்சியவனது முகத்தைப் பார்த்தாள், வாணி. அவனுக்கு அவளது மகள் பிரணவனது வயது தானிருக்கும். அதே சமயம் மற்றுமொரு நினைவுச் சுழலில் அவள் ஒரு கணம் சிக்கி தவித்துப் போனாள். அவளது உடன் பிறப்பான காந்தன் இந்தப் பையனை ஒத்த வயதினில்த்தான் தன் மேனியில் வெடி சுமந்து போய்க் காவியமாகி யவன். அவன்போகும் போது அம்மாவிடம் சொன்ன கடைசி வார்த்தைகள்இப்போதும் அவள் நெஞ்சில் பசுமரத்தாணியாகப் பதிந்து போய்க்கிடக்கிறது. அப்போது அவளுக்கு வயது மூன்று, புரிந்தும் புரியாத வயசு.*

*“அம்மா! நான் பெரிய படிப்பு படிக்க வேணுமென்று ஆசைப் பட்டியள். அதை நிறைவேற்ற என்னால முடியாமல் போயிற்று. அம்மா! உங்கட ஆசையை இவள் வாணி நிறைவேற்றுவாள் என்று நம்புறன். அல்லது உங்கட பேரப்பிள்ளைகளாவது நிறைவு*

செய்வினம். நீங்கள் அதுவரைக்கும் உயிரோட இருந்து எல்லா வற்றையும் கண்டு களிக்க வேணும்."

அண்ணாவின் ஆசைப்படி அவளால் ஒரு மருத்துவராய் வரமுடியவில்லை. மருத்துவத் தாதியாக மக்களுக்கு சேவை செய்யக் கிடைத்ததே அவளுக்கு மன நிறைவாக இருந்தது. தன் மகன் பிரணவனை ஒரு டாக்டராக்கிப் பார்க்க வேண்டுமென்ற இலட்சியம் மட்டும் அவளது இதயத்தை நிறைத்திருந்தது.

ஒரே நொடியில் தன் மனதை அலைக்கழித்த அந்த நினைவு களைத் துடைத்தெறிந்துவிட்டு தனது கடமைகளில் ஈடுபட்டாள்.

மாலை நேரம் நான்கு மணி. வாணிக்கு கடமைநேரம் முடிவடைந்ததும் தனது உந்துருளியில் வீட்டுக்குப் புறப்பட்டாள். இத்தனை நேரமும் நோயாளர்களைப் பற்றிய பதிவுகள் மனத்தை நிறைத்திருந்தது. அந்த எண்ணங்கள் இப்போது மனதைவிட்டு அகல, அவள் வீடு, குடும்பம் என்ற நினைவலைகளில் மூழ்கிப் போனாள்.

மகன் பிரணவனுக்கு வரும் ஒக்டோபரில ஏ.எல் பரீட்சை நடக்கப் போகிறது. அதுவும் இது மூன்றாவது முறை. இந்தப் பரீட்சையைக் கோட்டைவிட்டால் அவனுக்கு பரீட்சை எழுத இன்னுமொரு சந்தர்ப்பம் கிடைக்காது. முதல் இரண்டு தடவைகள் பரீட்சை எழுதிய போதும் அவனுக்கு சிறந்த பெறுபேறு கிடைக்க வில்லை. இந்த தடவையாவது அவன் சிறப்பாக பரீட்சை எழுதி சிறந்த பெறுபேறுகளைப் பெற்று மருத்துவப் பீடத்துக்குத் தெரிவாக வேண்டும் என அவள் வேண்டாத தெய்வங்கள் இல்லை. பிடிக்காத விரதங்கள் இல்லை.

வைத்தியசாலையில் மருத்துவபீட மாணவர்கள், வெள்ளை கோட் அணிந்து நோயாளர்களிடம் மருத்துவக் குறிப்பு எடுக்க வரும் போது அவளது மனதில் இனம் புரியாத ஒரு தவிப்பு ஏற்படுவதுண்டு. என்னுடைய மகனும் ஒரு நாள் இதே மாதிரி மருத்துவக் குறிப்பு எடுப்பதற்காக நான் கடமையாற்றும் வார்ட்டுக்கு வரமாட்டானா... என மனம் ஏங்கித் தவிக்கும்.! "கடவுளே! எனது கனவை நிறைவேற்று" என இறைஞ்சி மனதுக்குள் வேண்டிக் கொள்வாள்.

வாணியின் உந்துருளி வாசிகசாலையைக் கடந்து அவர்களது வீட்டுக்கு திரும்பும் ஒழுங்கை முகப்பில் நெருங்கிய போது யாரோ அவளைப் பெயர் சொல்லி அழைப்பதாகப் பட்டது. உந்துருளியை நிறுத்தியவள், திரும்பிப் பார்த்தாள்.

அது பிரணவனது நண்பனான ரகுவின் அப்பா குணசேகரன்

என அடையாளங் கண்டு கொண்டாள். அவரும் அவளை நெருங்கி வந்து பேச்சுக்கொடுத்தார்.

“மிஸ்! டியூட்டி முடிஞ்சு இப்பதான் வாறியளாக்கும்?”

“ஓம் சேர்! என்ன விசயம் சொல்லுங்கோ.”

“அது வந்து... ஒன்றுமில்லை. ரகுவுக்கு நான் பேர்சனல் கிளாஸ் ஒழுங்கு பண்ணப் போறன். ஒரு வேளை நீங்களும் பிரணவனையும் சேர்த்து விடுற எண்ணம்இருந்தா சொல்லுங்கோ. இரண்டு பேரையும் எங்கடவீட்டில இருந்தே படிக்க விடலாம்.”

“ஓ... எனக்கும்அப்பிடி ஒரு ஐடியா இருந்ததுதான். இப்ப நீங்க கேட்டது நல்லதாய்ப் போச்சு. ஆனா... பீஸ் கொஞ்சம் கூடவாய் இருக்கும். இதுதான் யோசிக்க வேண்டியிருக்கு.”

“என்ன பீஸ், ஒரு மணித்தியாலத்துக்கு ஐந்நூறு ரூபாய் வரும்”

வாணிக்கு பக்கென்றது. மூன்று பாடங்களுக்கும் இருபது மணித்தியால கிளாஸ் என்றாலும் முப்பதினாயிரம் வேணும். பட்டென மனதில் பட்டதைச்சொல்லி விட்டாள்.

“சேர்! குறை நினைக்காதையுங்கோ. என்னுடைய தகுதிக்கு மிஞ்சி என்னால செலவழிக்க முடியாது. நான் ஒரு பொம்பிளைப் பிள்ளையையும் வைச்சிருக்கிறன். அவர் உயிரோட இருந்திருந்தால் பறவாயில்லை.”

குணசேகரனுக்கு அவளுடைய கஷ்டநிலை புரிந்தது. அத்துடன் அவர் உரையாடலை நிறுத்திக்கொண்டு போய்விட்டார். வாணிக்கு தனது கையாலாகத்தனத்தை எண்ணி வருந்துவதை த்த விர வேறு வழி தெரியவில்லை.

வழமைபோல் பிரணவன் தனியார் கல்வி நிறுவனத்தில் பகல் நேர வகுப்புக்களுக்குப் போய் வந்தான். இரவு வேளைகளில் அவன் அக்கறையுடன் படிப்பதாகத் தெரியவில்லை. வாணிக்கு அது மனக்கஷ்டத்தைக் கொடுத்தது.

“ஏன் தம்பி படிப்பில கவனமில்லாமல் இருக்கிறாய். கொப்பரும் உன்னை ஒரு டாக்டராக்கிப் பார்க்க வேணுமென்று கனவு கண்டவர். கடைசியாய் அந்த ஷெல் மழைக்குள்ள உயிரைக் காவு கொடுத்தவருக்கு... ஆண்பிள்ளையாய்ப் பிறந்த நீ கொள்ளி கூட வைக்க கொடுப்பனவில்லாமல் போயிட்டுது. அவருடைய கனவையாவது நனவாக்க மாட்டாயா”

சொல்லி முடித்தவளின் கண்களிலிருந்து சொரிந்த நீரைப் பார்த்ததும் பிரணவனுக்கு கவலையாய் போய்விட்டது.

“நான் என்னால முடிஞ்ச வரைக்கும் படிக்கிறன். அதுக்கு மேல நான் என்ன செய்யிறது.”

ஆற்றாமையுடன் சொன்ன மகனை அரவணைத்து இறுகத் தழுவிக் கொண்டாள், வாணி. பிரணவனுக்கும் அப்பாவின் ஆசையை நிறைவேற்ற வேண்டுமென்பதுதான் விருப்பம். ஆனால்… பாழாய் போன பரீட்சைப் பெறுபேறு 2பி சி ஐத் தாண்ட மறுக்கிறதே. மீண்டும் மீண்டும் படித்த பாடங்களைத் திரும்பவும் படிப்பதற்கு அலுப்புத் தட்டுகிறது. சோம்பல் தான் அவனை ஆட்கொள்கிறது. தவிர உற்சாகம் வருவதாயில்லை.

அவனுடைய இந்த இயலாமைப் போக்குக்கு ஒரு நாள் சக வகுப்பு மாணவன் ஒருவன் ஒரு யுக்தி சொன்னான்.

“மச்சான்! உற்சாக மூட்டுவதற்கு ஒரு வழிஇருக்குது. அதுக்கு நீ விருப்பப்பட்டால் எங்களோட கலந்துகொள்ளலாம்.”

அவனை நம்பிய பிரணவன் அந்தக் கும்பலோடு கூட்டுச் சேர்ந்தான். முதலில் சிறிது சங்கடமாயிருந்த போதும் நாளடைவில் மனமும் உடலும் தந்த உற்சாகம் அவனை அந்தப் பழக்கத்திற்கு அடிமையாக்கி விட்டது. படிப்பை மறந்து அவன் உற்சாக வெள்ளத்தில் நீந்தத் தொடங்கினான். டியூசன் வகுப்புக்களுக்கு மட்டம் போட்டான். எனினும் ஒரு புதுப்பிரச்சினை தலை தூக்கியது. அடிக்கடி பணம் தேவைப்பட்டது. பொய்களைச் சொல்லி பணம் வாங்கத் தொடங்கினான்.

வாணிக்கு மகன் மீது சிறிது சந்தேகம் ஏற்பட்ட போதிலும் அவன் படிப்புத் தேவையை காரணம் காட்டித் தானே பணம் கேட்கிறான். இன்னும் இரண்டு மாதங்களுக்கு தானே… பிறகு பரீட்சையை எழுதி முடித்து விடுவான் என எண்ணி தன்னைச் சமாதானப்படுத்திக் கொள்ளுவாள்.

ஆனால்.. வீட்டில் பிரச்சினைகள் வேறு விதமாக முளைக்கத் தொடங்கியது. மாலை வேளைகளில் பிரணவன் வீட்டில் தங்குவ தில்லை. நண்பர்களுடன் சேர்ந்து படிக்கத் போவதாகக் கூறி வெளியே கிளம்பி விடுவான். இரவு ஒன்பது ,பத்து மணியளவில்த் தான் வீடு திரும்புவான். உணவு அருந்திவிட்டு படுக்கைக்குப் போனால் விடிந்து வெகுநேரமாகியும் எழும்ப மாட்டான். நாளடை வில் அம்மாவுடனும் வாக்கு வாதம் பண்ணத் தொடங்கிவிட்டான்.

வாணிக்கு மனதில் ஒரே குழப்பம். பிரணவனது போக்கு அவளுக்கு அவன் மீது சந்தேகத்தை எழுப்பி விட்டது. நயமாக அவள் ஏதும் புத்தி கூற முற்பட்டால் அவன் சீறுமளவிற்கு நிலைமை மோசமாகி விட்டது. வாணி என்ன செய்வதென்றறியாமல் அனலிடைப் புழுவாக துடித்தாள்.

ஒரு நாள் இரவு வெகு நேரம் கழித்து வீட்டிற்கு வந்த மகனை வாணி வார்த்தைகளால் கண்டித்தாள். பிரணவனுக்கோ கோபம் உச்ச நிலையை அடைய அவன் தனது பாடக்குறிப்புக்களையெல்லாம் அள்ளி வந்து முற்றத்தில் போட்டான்.

"இதெல்லாம் வீட்டில இருந்தால்த் தானே பிரச்சினை. இதுக்கு நான் இன்னைக்கே ஒரு முடிவ கட்டுறன்" என்று ஆவேசமாகக் கத்தியவன் தீக்குச்சியைத்தட்டி அவற்றை எரிக்க முயன்றான். வாணியும், சாருவும் வந்து அவனைத் தடுத்த போது அவர்களைத் தள்ளி விட்டான். விழுந்தவர்கள் எழும்பி வந்து பார்த்தால் … வீட்டு வாசலில் அவன் குப்புற விழுந்து கிடந்தான் அவனைப் புரட்டி விட்ட போது ஆழ்ந்த நித்திரையில் அவன் இருப்பது தெரிய வந்தது. குறட்டைச் சத்தம் இடையிடையே ஒலித்துக் கொண்டிருப்பது அதனை உறுதிப்படுத்தியது.

வாணிக்கு இப்போது எல்லாமே புரிந்து விட்டது. முற்றத்தில் கருகிச் சாம்பலாய்க் கிடந்தது அவனுடைய கல்வி மட்டுமல்ல, இறந்து போன தனது கணவன், அண்ணா மற்றும் தனது கனவும் கூடத்தான் என்று, அவளுடைய மனம் இப்போது எதிர்காலத்தைப் பற்றிய ஏக்கத்தைச் சுமந்து நின்றதுடன் அதற்கான பரிகாரத்தையும் தேட விளைந்தது. "நாளைக்கே அவனை மனநல வைத்தியரிடம் அழைத்துப் போக வேண்டும். அவன் மருத்துவனாக வராவிட்டாலும் பறவாயில்லை அவன் ஒரு மனிதம் நிறைந்த மனிதனாக இந்தப் பூமியில் உலா வர வேண்டும்."

கனத்துக் கிடந்த அவளது நெஞ்சம் வலித்தது.

# பாறாங்கல்

*மாலைப்பொழுது சூரியன் தன் பொற்கிரணங் களுடன் அந்தி வானத்தில் மெதுமெதுவாக மறைந்து கொண்டிருந்தான். செவ்வானத்தினுள் தகதக வென புதைந்து கொண்டிருந்த கதிரவனை... அந்தக் கண் கொள்ளாக் காட்சியை கண்டு களிக்கும் மனப்பக்கு வத்துடன் எவரும் இருப்பதாகத் தோன்றவில்லை. மாந்தரெல்லாம் தத்தமது சுய கருமங்களை பூர்த்தி செய்வதில் முனைப்பாய் இருந்தனர்.*

*கதிரேசன் என்ற நாமத்துடன் இந்த மண்ணில் உலா வந்து தன் கடின உழைப்பினால் ஐம்பது பரப்புக் காணியைச் சொந்தமாக்கிக் கொண்ட அந்த நலிந்த உருவம் இன்று நாதியற்று அந்த மாட்டுக் கொட்டிலில் தன் இறுதி மூச்சை விடுவதற்காக காலம் வரும் வரை காத்திருக்கிறது.*

*கதிரேசன் ஒரு கைதேர்ந்த விவசாயி. பத்துப் பரப்பு வயற் காணியுடன் விவசாயத்தை ஆரம்பித்த அவர், தனது விடமுயற்சியினாலும், கடின உழைப்பி னாலும் முன்னேற்றம் கண்டவர். கால போகத்திற்கு நெல் விதைப்பார். நெல் அறுவடை முடிந்ததும் மீண்டும் நிலத்தை பண்படுத்தி பயறு, எள்ளு, குரக்கன் என தானிய வகைகளைப் பயிரிட்டு, அவற்றை கண்ணும் கருத்துமாக பாதுகாத்து பயனடைவார். ஆரம்பத்தில் ஓரணை நாம்பன்களை உழவுக்குப் பயன் படுத்தியவர், நாளடைவில் ஒரு உழவு இயந்திரத்தை கொள்வனவு செய்யுமளவிற்கு முன்னேறியவர். வசதி பெருகப் பெருக வயல்களின் பரப்பளவும் கூடியது.*

அவரது மனைவியான மங்களமும் சளைக்காமல் கணவனுக்கு உறுதுணையாய் இருந்து செயற்பட்டாள். செல்வம் பெருகியது மட்டுமல்லாமல் மழலைச் செல்வங்களும் உருவாகி அவர்களை ஐந்து குழந்தைகளுக்கு பெற்றோர்கள் ஆக்கின.

எவ்விதக் குறையுமின்றி பிள்ளைகள் வளர்ந்து பெரியவர் களாயினர். மூத்தவள் அகிலாவுக்கு மூன்று பரப்புக் காணி வாங்கி அதில், நவீன வசதிகளுடன் கூடிய கல்வீடு ஒன்றைக் கட்டி சீதனமாகக் கொடுத்தார். அவளுக்கு வாய்த்த மாப்பிள்ளை ஒரு பொறியியலாளர். அவர்கள் கொழும்பில் வெள்ளவத்தையில் அமைந்துள்ள தொடர் மாடியில் ஒரு பகுதியை வாடகைக்கு எடுத்து அதில் வசிக்கத் தொடங்கி விட்டனர். காலப் போக்கில் சொந்தமாக ஒரு வீட்டை வாங்கிய போது, கதிரேசன் சீதனமாகக் கொடுத்த வீடும் விலையாகிப் போய் விட்டது.

இரண்டாவது மகள் இந்திராவை தனது அக்காவின் மகனுக்கு திருமணம் செய்து வைத்தார். மாப்பிள்ளை பிரான்ஸ்ஸில் இருப்பதால் அவர்கள் பெருமளவு சீதனத்தை எதிர்பார்க்கவில்லை. சிறுதொகை பணச் செலவுடன் அவளது திருமணம் நடந்தேறியது. இன்று இந்திரா பிரான்ஸ் குடிமகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

மூன்றாவது பிள்ளையான கதிரவன் படித்து ஒரு பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்று ஒரு வருடம் கூட ஆகவில்லை. அதற்குள் அவன்பெற்றோரின் விருப்பத்துக்கு மாறாக ஒரு பெண்ணை மணந்து கொண்டது மட்டுமல்லாமல், வேலைக்கும் மாற்றம் எடுத்துக் கொண்டு போய் திருகோணமலையில் நிரந்தரமாக தங்கி விட்டான்.

மகனது இந்தச் செய்கையினால் மனமுடைந்து போனாள், மங்களம். பெண்கள் இருவரும் தூரஇடத்துக்கு வாழ்க்கைப்பட்டு போய் விட்ட ஏக்கம் ஒரு புறம் அவளது உள்ளத்தைக் குடைந்தது. மனம் சோர்ந்து உடல் தளர்ந்து போனவளாய் வீட்டுக்குள் உலா வந்தாள்.

திடீரென ஒரு நாள் அவளுக்கு வயிற்றில் வலி ஏற்பட்டது. வலி தாங்கமுடியாமல் துடிதுடித்துப் போனவளை கதிரேசன் வைத்தியசாலைக்கு அழைத்துப் போனார். அவளைப் பரிசோதித்த டாக்டர்கள் கூறிய விடயம் அவருக்குத் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போன்ற வேதனையைத் தந்தது, மங்களத்தின் குடலில் புற்று நோய் பரவியிருப்பதாகக் கூறி சிகிச்சையாக அவளை வார்ட்டில் அனுமதித்தனர். முதலில் சத்திரசிகிச்சை செய்யப்பட்டு தொடர்ந்து கதிரியக்கச் சிகிச்சை அளிக்கப்பட்டது. நோயின் தாக்கத்தை விட சிகிச்சையினால் அவள் அனுபவித்த வேதனையைக்

கண்ணுற்ற கதிரேசனுக்கு இதயமே வலித்தது.

மூன்று மாதங்களாக வீட்டுக்கும் வைத்தியசாலைக்கும் என அலைந்த அவருக்கு ஒருநாள் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டு விட்டது. ஆம், அவளது சகதர்மினி மங்களம் அவரை விட்டு நிரந்தரமாகவே பிரிந்து விட்டாள். வேதனையின் விளிம்பில் நின்ற அவர் பதைபதைத்துப் போனார்.

இருந்த போதிலும் மனதைத் தேற்றி செயற்பட வேண்டிய அவசியம் அவருக்கிருந்தது. அவரது கடைக்குட்டி மகள் மாலினியும் முகுந்தனும் அவரது அரவணைப்புக்காக ஏக்கத்துடன் காத்திருந்தது தான் காரணம். துயரிலிருந்து ஒருவாறு மீண்டெழுந்து செயற்படத் தொடங்கினார். கல்வியைத் தொடர பிள்ளைகள் இருவரையும் பாடசாலைக்கு அனுப்பினார்.

உயர்தர வகுப்பில் படித்துக் கொண்டிருந்த மாலினிக்கு படிப்பில் நாட்டம் இருக்கவில்லை. எனவே அவள் வீட்டில் தங்கி சமையல் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கிவிட்டாள். கதிரேசனுக்கு அதில் இஷ்டமில்லாவிட்டாலும் மகளைப் படிக்கச் சொல்லி வற்புறுத்த முடியவில்லை. அவளாக விருப்பப்படாமல் எப்படி அவளைப் படிக்க வைக்க முடியும். ஒரு காயை கல்லால் அடித்து அதைக் கனிய வைக்க முடியுமா?, அது தானாக கனிய வேண்டும். எனவே, அவர் அவளுக்கு ஒரு வாழ்க்கைத் துணையைத் தேடும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கினார். வெற்றியும் கண்டார்.

வட்டக்கச்சியில் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியராகக் கடமை புரியும் மாதவன், மாலினிக்கு வரனாகக் கிடைத்த போது அவர் நிறைவும் நிம்மதியுமடைந்தார். தாங்கள் வசிக்கும் வீடு, கையிலிருந்த ரொக்கப்பணம், நகை என்பனவற்றை சீதனமாகக் கொடுத்து மாதவனை மருமகனாக்கினார். மாதவனுக்கு வட்டக்கச்சியில் விவசாயநிலங்கள் இருந்ததாலும், தொழில் காரணமாகவும் அவன் மாலினியையும் அங்கேயே அழைத்துப் போய்விட்டான்.

கதிரேசனும் முகுந்தனும் அந்த வீட்டில் தனித்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. சமையல் பொறுப்பை கதிரேசன் ஏற்றுக் கொண்டு முகுந்தனை பாடசாலைக்கு அனுப்பினார். முகுந்தனுக்கோ படிப்பில் நாட்டம் இருக்கவில்லை. பரீட்சையில் கோட்டை விட்டவன் நண்பர்கள் சிலரோடு சேர்ந்து ஊர் சுற்றத் தொடங்கினான். வயலையாவது கவனிப்பான் என கதிரேசன் நினைத்தார். அவன் அதற்கும் மசியவில்லை. மனைவி மங்களத்தை நினைத்து அழுவதைத் தவிர அவரால் எதுவும் செய்ய முடியாத நிலை.

நீண்ட நாள் யோசனையின் பின் அவர் ஒரு முடிவுக்கு வந்தார். உழவு இயந்திரத்தையும் விற்று அத்துடன் தனது கையிருப்பில் இருந்த மீதிப்பணத்தையெல்லாம் திரட்டி ஒரு கடையை வைத்து முகுந்தனிடம் ஒப்படைத்தார். அவருடைய கணிப்பு வீண்போக வில்லை. முகுந்தனும் வியாபாரத்தின் தெளிவு கழிவுகளை நன்கறிந்து பிழைக்கக் கற்றுக்கொண்டான். மகனின் முன்னேற்றமான செயற் பாட்டைக் கண்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டார், கதிரேசன்.

காலச் சக்கரம் மெதுவாக உருண்டு கொண்டிருக்க, கதிரேச னுடைய உடல் நிலை பாதிக்கப்பட்டுவிட்டது. இப்பொழு தெல்லாம் அவரால் வயலைப் பராமரித்து அறுவடை செய்ய முடிவ தில்லை. எனவே, குத்தகைக்கு கொடுத்து விட்டார். மனித வாழ்க்கை யில் இளமையும் துடிப்பும் தொடர்ந்து நீடிக்க வாய்ப்பில்லை. முதுமை எனும் பருவம் மனிதரை ஆட்கொள்ளும் போது தள்ளாமை யும் இயலாமையும் அவர்களை முற்றாக ஆக்கிரமித்து விடுகிறது. இதுதான் இயற்கையின் நியதியும் கூட. இதற்கு கதிரேசன் மட்டும் விதிவிலக்கானவரா... என்ன....

முகுந்தனுக்கு வியாபாரத்தைப் பெருக்க வேண்டும் என்ற எண்ணம் தலைதூக்கிய போது அப்பாவிடம் வந்தான்.

“அப்பா! கடையை பெருப்பிக்க வேணும். அதுக்கு நிறைய முதல் போட வேண்டி இருக்கு. நீங்கள் இப்ப வயலையும் விதைக்கிற தில்லை. அதை வித்துப் போட்டு காசைத் தந்தியளெண்டால் கடையில நிறைய சாமான்களைப் போட்டு நல்ல வருமானத்தைத் தேடலாம்.”

கேட்ட மாத்திரத்திலேயே கதிரேசன் துள்ளியெழுந்தார்.

“என்ன சொன்னாய். வயல் காணியை விற்கிறதோ அது மட்டும் நான் உயிரோடு இருக்குமட்டும் நடக்காது. அந்த வயல் பூமி மாதா தான் என்ரை குடும்பத்தை வாழ வைத்த தெய்வம்.”

தனது எண்ணம் பலிக்காது என்று கண்ட முகுந்தன் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு போய்விட்டான்.

கதிரேசன் மகனுக்கு வசதியான ஒரு இடத்தில் பெண் பார்த்து வைத்திருந்த போதுதான் அந்தச் சம்பவம் நடந்து. முகுந்தன் தனது கடையில் விற்பனையாளராக இருந்த பெண்ணை வீட்டிற்குக் கூட்டி வந்துவிட்டான். எதுவும் செய்யமுடியாத நிலையில் கதிரேசன் அவர் களுக்கு அருகில் இருந்த கோயிலில் திருமணம் செய்து வைத்தார்.

மருமகள் வந்தபின் அவருக்கு சமைக்கும் வேலைப்பளு

குறைந்தது. அவள் தரும் உணவைச் சாப்பிட்டு விட்டு காலம் கழித்தார். எனினும் முதுமை அவரை மிகவும் நலிவடைய வைத்து விட்டது. ஊன்று கோலின் உதவியுடன் வீட்டுக்குள் உலவி வந்தவருக்கு இப்போது நடக்கமுடியவில்லை. படுத்த படுக்கைக்கு தள்ளப்பட்டு விட்டார். மலம் சலம் கழிப்பதற்குக் கூட எழும்ப முடியாத நிலை அவரது இக்கட்டான நிலை கண்டு மகனும் மருமகளும் அவரைத் தூக்கி வந்து மாட்டுக் கொட்டிலுக்குள் படுக்க வைத்து விட்டனர்.

கதிரேசன் பாசத்துடன் வளர்த்த வெள்ளையன், கட்டியன் ஆகிய ஓரணை நாம்பன்களுக்காக அவர் அந்த மாட்டுக் கொட்டிலை சீமெந்தினால் கட்டி வைத்திருந்தார். அந்த நாம்பன்களுக்கு வயது போன பிறகும் அவற்றை விற்க மனமில்லாமல் கடைசி வரை வைத்து பராமரித்தவர். அந்த ஜீவகாருண்ணியம் மிக்க சீவனுடைய கதி இன்று இப்படியாகி விட்டது.

முகுந்தனுக்கோ தந்தைமீது அளவு கடந்த வெறுப்பு உருவாகியிருந்தது. வயலை விற்று பணத்தை தனது கடைக்கு முதலீடு செய்ய மறுத்த விவகாரம் அவனுக்கு தந்தை மீது தீராப் பகையையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது. அவரைத் திரும்பியும் பார்ப்பதில்லை. மருமகள் தான் வேளாவேலைக்கு உணவு தண்ணீர் என கொண்டு வந்து வைத்து விட்டுப் போவாள். அவருக்கோ வயிற்றுப் பசி ஏற்பட்டாலும், வெந்து நொறுங்கிய மனம் உணவை உட்கொள்ள இடமளிப்பதில்லை.

திடசங்கற்பத்துடன் அவர் மரணத்தை நோக்கி பயணிக்கத் தொடங்கினார். மனம் மட்டும் கட்டுக்கடங்காது வாழ்க்கைப் பயணத்தின் முற்பகுதியை அசை போட்ட வண்ணமிருந்தது. உடல் சோர்ந்து நாவறண்டு அவர் மயக்கநிலையை அடைந்த போது... மனைவி மூலம் செய்தியறிந்த முகுந்தன், “அந்தாள் இருந்தாலென்ன... போனாலென்ன...” என்று சொல்ல உதாசீனம் செய்யுமளவிற்கு அவனது மனம் பாறாங்கல்லாய் இறுகியிருந்தது. ஆனால் ... கதிரேசன் தனக்குப் பின்னால் வயற்காணி முகுந்தனுக்கு என உயில் எழுதி வைத்திருந்ததை அவன் அறிந்தானில்லை.

பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல் என்பார்கள். அதுவும் முகுந்தனது மனமோ பாறாங்கல். அதுவும் ஒரு நாள் கசியும். எப்போது தெரியுமா? காலச் சுழற்சியில் முதுமையும் இயலாமையும் அவனைத் தீண்டும் பொழுது அத்துடன் அவனது பிள்ளை அவனை உதாசீனம் செய்யும் போது நிச்சயமாய் அவன் உணரத்தான் போகிறான். இதுவே அவனுக்கு காலம் கூறும் பதிலும் கூட.

# இதம்

மடிக்கணனியிலிருந்து கணித ஆசிரியரின் குரல் ஒலித்துக் கொண்டிருந்தது.

"இன்றைய வகுப்பில யாராவது புதிதாக இணைந்து கொண்டிருக்கிறீர்களா?"

அருகிலிருந்த லவனை ஓரக்கண்ணால் பார்த்தான், வருண். லவன் பதிலேதும் சொல்லாமல் அவனையே பார்த்து விழித்துக் கொண்டிருந்தான் வருண் வாய் திறந்தான்.

"ஓம் சேர். இன்றைக்கு லவன் வந்திருக்கிறார்"

"அப்படியா? லவன் ஏன் வாய் திறக்காமல் இருக்கிறான். நான் வரவேட்டில பதிவு செய்ய வேணும். வேறை யாரும் இருக்கிறீங்களா பிள்ளையள்?"

நிசப்பத்தைத் தொடர்ந்து ஆசிரியர் அன்றைய பாடத்தில் கவனம் செலுத்தத் தொடங்கினார். மாணவர்களும் பாடங்களில் மூழ்கிப்போயினரர். வருண் மட்டும் அருகில் தயக்கத்துடன் வீற்றிருந்த லவனை உற்சாகப் படுத்திக் கொண்டிருந்தான்.

சரியாக ஒரு மணித்தியாலத்தில் வகுப்பு நிறைவுற்றது. வருணும் லவனும் ஆசிரியர் கற்பித்த கணக்குகளை ஒருதரம் இரை மீட்டு தமது சந்தேகங் களை தெளிவு படுத்திக் கொண்டனர். லவன் தனது வீட்டுக்கு புறப்படும் போது வருண் அவனை வற்புறுத்தி விடையளித்தான்.

"பின்னேரம் நாலுமணிக்கு விஞ்ஞான கிளாஸ்

இருக்குது. கட்டாயம் வந்திடு. என்ன!"

"என்மேல நீ காட்டுற கரிசனைக்கு தாங்க்ஸ்டா வருண்"

சொல்லிவிட்டுப் போன லவனையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றான் வருண்.

"பாவம்! தகப்பனில்லாப்பிள்ளை"

மனம் அடித்துக் கொண்டது. கூடவே லவனைப் பற்றிய சிந்தனையும் வந்து மனதை உலுப்பியது. இறுதிப்போரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பட்டியலில் லவனின் தந்தையின் பெயரும் பதிவாகி இருப்பதாகக் கேள்வி. லவனுக்கும் அதற்குமேல் எதுவும் தெரியாதாம். ஏனெனில் அப்போது அவனுக்கு மூன்று வயதுதா னாம். அவனுடைய அம்மாதான் அவனுக்கு எல்லாமாகவும் இருக்கிறாள். நலன்புரி நிலையமொன்றின் உதவியால் கிடைத்த தையல் மெசின் தான் அவளது உழைப்புக்கு மூலதனம். லவனை நல்லபடியாக வளர்த்து ஆளாக்கிவிட வேண்டுமென்பது தான் அவளது உயிர்மூச்சு.

வருணும் லவனும் ஒரே வகுப்பில்த்தான் படித்துக் கொண்டிருக்கிறார்கள். நாட்டில் வேகமாகப் பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்றினால் அமுல்படுத்தப்பட்டிருக்கும் பயணத்தடை காரணமாக பாடசாலைகள் இயங்கமுடியாத நிலை. எனவே பாடசாலை ஆசிரியர்கள் நடத்தும் "சூம்" வகுப்புகளை அவதானித்து கல்வியில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஆனால்... எல்லா மாணவர்களிடமும் மடிக்கணணி போன் வசதி என வைத்திருக்கும் வாய்ப்புக்கள் இல்லை வசதியுள்ள பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு சலுகைகளை ஏற்படுத்திக் கொடுத்த போதிலும் அன்றாடக் காய்ச்சியான லவனின் அம்மாவால் அது முடியவில்லை.

விரக்தியின் விளிம்பில் லவன் நின்றிருந்த வேளை, வருன் அவனைத்தேடி வந்தான். தன்னிடம் மடிக்கணனி இருப்பதால் இருவரும் இணைந்து அதன் மூலம் பாடகர்களைக் கற்கலாம் எனக்கூறி உற்சாகப்படுத்தி, சிறு தொலைவில் இருக்கும் அவனது வீட்டிற்கு அழைத்து வந்தான், இன்று தான் லவன் முதலாவது வகுப்பில் பங்கு பற்றியிருக்கிறான்.

திடீரென வருணுக்கு தனது மாமாவின் நினைப்பு வந்து மனதில் மோதியது. அவர்தான் போனமுறை ஊருக்கு வந்திருந்த போது அவனுக்கு இந்த மடிக்கணனியை அன்பளிப்பாகக் கொடுத்திருந்தார். அம்மாவின் குடும்பத்தில் அவர் தான் மூத்தபிள்ளை யாம்.

அவருக்குக் கீழே அம்மாவுடன் சேர்ந்து மூன்று பெண்பிள்ளைகளாம். வறுமையில் உழன்ற அவர்களது குடும்பச் சுமையைத் தாங்கும் பொறுப்பு மாமாவின் தலையில் பொறிந்த போது... அம்மம்மா தாங்கள் வாழ்ந்திருந்த வீடுவளவை அடமானம் வைத்து மாமாவை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தாராம்.

ஏ.எல்.வகுப்பில் படித்துக் கொண்டிருந்த மாமாவுக்கு தனது படிப்பு பாதியில் குழம்பிப்போன மனத்தாக்கம் இற்றைவரை தீர வில்லை. அவரது பேச்சிலிருந்து வருண் அதை ஊகித்துக் கொண்டிருக்கிறான்.

“வருண்” வறுமையால படிக்க முடியாமல் கஷ்டப்படுகிற பிள்ளைகளுக்கு கட்டாயம் நாங்கள் உதவி செய்ய வேணும். ஏனென்றால் ஆர்வத்தோட படிக்கிற பிள்ளையின்ரை படிப்பு தடைப்பட்டால் அந்த மனம் எப்பிடி நெருங்கிப்போகும் என்ற சுய அனுபவம் என்னுடையது. நான் தொடர்ந்து படிச்சிருந்தால் இப்ப சமூகத்தில் பெரிய டொக்டராய் இருந்து மக்களுக்கு சேவை செய்திருப்பன் அது எனக்குக் கிடைக்கேல்ல. ஆனால்... என்ரை தங்கச்சிமாரை நல்லா வாழவைச்சிருக்கிறன். அது தான் எனக்குக் கிடைச்ச ஆறுதல்”

சொல்லிவிட்டு பெருமூச்சொன்றை உதிர்ப்பார்.

அவரது மனக்குமுறலை வருண் ஆதங்கத் துடன் உணர்ந்து கொள்வான். காலம் கடுகதியில் நகர்ந்து கொண்டிருக்க, மாதம் ஒன்று உருண்டோடி யது. இந்த ஒரு மாத காலத்தில் வருண் லவனுடன் படிப்பைத் தொடர்ந்ததைவிட அம்மாவின் நச்சரிப்பை அனுபவித்து தான் அவனது உணர்வில் ஓங்கி நின்றது. அம்மாவுக்கு லவன் வந்து படிப்பது பிடிக்கவில்லை. எதற்கெடுத்தாலும் அவன் மீது குறை பிடிப்பாள். அவனோ பயபக்தியுடன் ஒதுங்கியிருந்து பாடத்தைக் கவனிப்பதுடன் சரி. பாடம் முடிந்ததும் புறப்பட்டு விடுவான்.

அன்று அவர்களுக்கு விஞ்ஞான பாடத்தில் ஒரு பரீட்சை நடந்தது. இருவரும் பதில்களை எழுதி முடித்தனர். வருண் இருவருடைய பதில்களையும் ஒவ்வொன்றாக பிரதியெடுத்து ஆசிரியரின் பார்வைக்கு அனுப்பி வைத்தான். அந்தப் பரீட்சையில் லவனுக்கு நூறு புள்ளிகளும், வருணுக்கு எண்பது புள்ளிகளும் கிடைத்திருந்தன. இதைக் கவனித்த அம்மாவுக்கு வந்ததே ஆத்திரம். கண்மண் தெரியாமல் லவனைத் திட்டித் தீர்த்து விட்டாள்.

“என்ரை பிள்ளை தானும் தன் படிப்பும் என்று கவனமாய்

இருந்தவன். நீ வந்து கதை குடுத்து அவன்ரை கவனத்தைச் சிதைச்சுப் போட்டாய். அதனால தான் அவனுக்கு மார்க்ஸ் குறைஞ்சு போச்சுது. இனிமேலும் அவனை வந்து குழப்பாமல் இருக்கப்பார்"

அம்மாவின் பேச்சைக் கேட்க வருணுக்கு "திக்"கென்றது. அம்மாவைச் சமாளிக்க முயன்றவன் தோற்றுப்போனான். லவனுக்கு என்ன சொல்லி அவனைச் சமாதானப்படுத்துவதென்று முடியாமல் திக்குமுக்காடிப்போய் விட்டான். லவனும் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு போய் விட்டான். வருணால் அந்தக் காட்சியை தாங்கிக் கொள்ள முடிய வில்லை. மனம் நொந்து போனவனாய் படுக்கையில் சுருண்டு கொண்டான்.

அந்தச் சமயம் பார்த்து அலைபேசி மணி ஒலித்தது. எரிச்சலுடன் எழுந்து அழைப்பை ஏற்றவனது முகத்தில் ஒரு மலர்ச்சி தோன்றியது. அவுஸ்திரேலியாவிலிருந்து மாமாதான் எடுத்திருந்தார். சுகநல விசாரிப்பு முடிவுற்ற தும் அவனது படிப்பைப் பற்றி விசாரிக்கத் தொடங் கினார். அது தான் சமயம் என உணர்ந்த வருண் வீட்டில் நடந்த விடயங்களையெல்லாம் ஆதியோடு அந்தமாக விபரித்து ஓய்ந்தான். மருகனது மனக்குறு குறுப்பையும் ஆதங்கத்தையும் மாமா நன்கு விளங்கிக் கொண்டார்.

"கொம்மாவுக்கு ஏன் இந்த கீழ்த்தரமான புத்தி. போனை ஒருக்கா அம்மாவிட்டக்குடு. நான் விசாரிக்கிறன்"

"மாமா! நீங்கள் என்ன சொன்னாலும் அவ வின்ரை இயல்பு மாறப்போறதில்லை. அவ அப்பிடித்தான். அவவுக்கு வசதியில்லா தவை என்றால் கிள்ளுக்கீரை மாதிரி"

ஆத்திரத்தில் வருண் வாயில் வந்ததை உளறி னான். மருமகனின் உள்ளக் கொதிப்பு மாமாவின் நாடித் துடிப்பில் பதிந்தது. மருமகனை ஆசுவாசப்படுத்தினார்.

"தம்பி வருண்! நீ கவலைப்படாதை. நான் கொம்மாவைச் சமாளிக்கிறன்"

"இல்லை மாமா. லவன் உண்மையிலேயே வலு கெட்டிக் காரன். நல்லாய் படிக்கக் கூடியவன். அவன்ரை படிப்பு பாழாகக் கூடாது. அம்மாவின்ரை பேச்சைக் கேட்டு அவனுடைய மனம் என்ன பாடுபட்டிருக்கும். நீங்களே ஒருக்கா யோசிச்சுப் பாருங்கோ"

மாமாவின் மனதில் மருமகனின் வார்த்தைகள் உறைத்தன. சட்டென அவர் இறங்கி வந்தார்.

*"வருண்! நீ சொல்லுறதும் சரிதான். நான் இண்டைக்கே கொப்பரின்ர பேரில காசு போட்டு விடுறன். நீ அப்பாவோட போய் அவனுக்கு ஒரு நல்ல போனாய் வாங்கி அன்பளிப்பு செய்து விடு. அவனைப் படிக்க வைச்ச புண்ணியத்தில எனக்கும் பங்கு கிடைக்கட்டும்."*

*மாமாவின் வார்த்தைகள் அவனை இதமாக வருடியபோது கொந்தளித்துக் கொண்டிருந்த மனம் குளிர்ச்சியடையத் தொடங்கியது.*

*மறுநாளே வருண் கையில் போனுடன் லவன் வீட்டுக்குப் போயிருந்தான். லவன் அவனை இன்முகத் துடன் வரவேற்றான். இதனை சற்றும் எதிர்பார்த்திராத வருண், அவனிடம் மன்னிப்புக் கோரினான். சாதாரண மாக லவன் பதிலளித்தான்.*

*"இதிலை என்னடா இருக்குது. எந்த அம்மாவும் தன்னுடைய பிள்ளை நல்லாய்ப்படிக்க வேணும் என்பதில அக்கறையாய்த்தான் இருப்பா. அன்றைக்கு நீ கவனயீனத்தால பிழை விட்டிட்டாய் அதால தான்..."*

*வார்த்தையை அவன் முடிக்குமுன் வருண் தனது கையில் பின்புறமாக மறைத்து வைத்திருந்த போனை எடுத்து லவனது கைகளில் திணித்தான். மளமளவென்று மாமாவின் விருப்பத்தைப் பற்றி ஒன்றுவிடாமல் எடுத்துரைத்தான்.*

*முதலில் சற்றுத் தயங்கிய லவன் ஆர்வத்துடன் கையை நீட்டி அந்த போனை வாங்கிக் கொண்டான்.*

*"தாங்க்ஸ்டா வருண் நீங்கள் என்னுடைய படிப்பில காட்டுற அக்கறைக்கு நான் என்றைக்கும் கடமைப்பட்டிருப்பன்" அவனது கண்களில் கண்ணீர் மின்னியது அதற்குள் தெரிந்த பிரகாசம் வருணது இதயத்தை இதமாகத் தழுவியது.*

ஜீவநதி - சித்திரை - 2021

# அருமை உடைய செயல்

*யாழ் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு. அதன் முன் புறத்தில் போடப் பட்டிருந்த வாங்கொன்றில் தமிழ்மாறன் அமர்ந்திருந் தான். அவன் அணிந்திருந்த வெள்ளைச் சீருடையில் ஆங்காங்கே இரத்தக் கறைகள் படிந்திருந்தன. சலன முற்றிருந்த அவனது முகத்தை ஏறிட்டுப் பார்த்துவிட்டு அருகில் அமர்ந்திருந்த முதியவர் அவனிடம் பேச்சுக் கொடுத்தார்.*

*"தம்பி அது உம்முடைய பிள்ளையே? என்ன நடந்தது?"*

*எங்கேயோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த அவனது செவிகளில் முதியவரது கேள்வி நுழையவில்லை.*

*"அவனுடைய பிள்ளையாகத்தான் இருக்க வேண்டும் பாவம்"*

*ஊகித்தறிந்த அவரது மனம் அவனுக்காக பரிதாபப்பட்டது.*

*"இரத்தத்தால தோய்ஞ்சு போய்க்கிடந்த பிள்ளை. தப்புமோ..."*

*அதுவும் அந்த முதியவருடைய மன ஊகம் தான். அவருடைய மனைவிக்கு "ஹார்ட் அற்றாக்" வந்து உள்ளேதான் சிகிச்சை நடந்து கொண்டிருக் கிறது. அதனால்த்தான் அவர் வெளியே காவலிருக் கிறார்.*

*அவசர சிகிச்சைப் பிரிவின் கதவைத் திறந்து கொண்டு ஒரு நர்ஸ் வெளியே வந்தாள். மாறன்*

அவசரமாக எழுந்து சென்று அவளிடம் விசாரித்தான்.

"சிஸ்டர்! அக்சிடெண்ட் கேஸ் சீரியஸ்ஸோ?"

கவலை தோய்ந்த அவனது முகத்தைப் பார்த்தவள், அவனை ஆசுவாசப் படுத்தினாள்.

"மாறன்! பயப்படாதையும், தலையில அடி படயில்ல. உடம்பிலதான் காயங்கள். நிறைய இரத்தம் போயிட்டுது. அதனால இரத்தம் ஏற்றிக் கொண்டிருக்கினம்."

"தாங்ஸ் சிஸ்டர்"

சொல்லிவிட்டு வந்து அமர்ந்து கொண்டான். இதனை அவதானித்துக் கொண்டிருந்த அந்த முதியவரும் நர்ஸ்ஸை அணுகினார்.

"பிள்ளை! என்னுடைய மனுசிக்கு இப்ப எப்பிடி இருக்கு?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் என்னுடைய வேலையை பார்க்க வேணும். வழியை விடுங்கோ."

"வெடுக்"கென வார்த்தைகளை உதிர்த்துவிட்டுச் சென்ற வளை, வெறுப்புடன் அவரது கண்கள் நோட்டமிட்டன. வெண் சிட்டொன்று தத்தித்திரியும் தன் நடையை மறந்து தடைதாண்டிப் போட்டியில் பங்குகொள்வது போலிருந்தது அவளது நடை. மாறன் அந்த வைத்தியசாலையில் பணிபுரியும் ஒரு ஊழியன் என்ற விடயம் அவருக்குத் தெரிந்திருக்க முடியாது.

அதே சமயம் அந்த நர்ஸ் மீது எந்தத் தவறும் இல்லை. கடமை நேரத்தில் அவள் தனது கடமையைச் செய்து தானே ஆக வேண்டும். அதை விடுத்து ஒவ்வொரு நோயாளியின் உறவினர் களுக்கும் நோயாளியின் உடல்நிலை பற்றி விளக்கம் சொல்லிக் கொண்டிருக்க முடியுமா? இந்த யதார்த்தமான நிலைப்பாட்டை எம்மவர்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

மீண்டும் அதே நர்ஸ் கையில் சில மருத்துவ உபகரணங் களுடன் அவசர சிகிச்சைப் பிரிவின் கதவைத்திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள். அந்த முதியவரோ அவளைத் தன் பார்வை யாலே எரித்துவிடுபவர் போல் முறைத்தார். கடைக்கண்ணால் இதனை அவதானித்த மாறன்கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டான். இத்தகைய அனுபவங்கள் ஒன்றும் அவனுக்குப் புதிதல்ல. ஒரு பெருமூச்சை உதிர்த்துவிட்டு கைகளிரண்டையும் மார்புக்குக் குறுக்காக கட்டியவாறு கண்களை மூடிக்கொண்டான். கடந்த

ஒன்றரை மணி நேரத்துக்குள் நடந்து முடிந்த சம்பவங்கள் அவன் கண்முன்னே நிழலாடத் தொடங்கின.

அன்று மாலை ஐந்து மணியுடன் அவனது கடமை நேரம் முடிவடைந்து விட்டது. தனது உந்துருளியில் வீடு நோக்கிப் போய்க் கொண்டிருந்தவனை ஆலடிச் சந்தியில் கூடியிருந்த கூட்டம் சுண்டி யிழுத்தது. மெதுவாக தெருவின் கரையோரத்தில் உந்துருளியை நிறுத்திவிட்டு இறங்கியவன் கூட்டத்தை விலத்தி முன்னேறினான். அங்கு அவன் கண்ட காட்சி...

சிறுவன் ஒருவன் காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் கிடந்தான். மாறனது மனம் குறுகுறுக்கத் தொடங்கியது. பதற்றத் துடன் என்ன நடந்தது? என அங்கு கூடியிருந்தவர்களிடம் வினவினான். எவரும் வாய் திறக்கவில்லை.

"என்ன பார்த்துக் கொண்டிருக்கிறியள். பிள்ளையை உடன ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக வேணும்"

கூறியவன் அப்படியே சிறுவனை வாரியணைத்துத் தூக்கினான். ஒரு பெரியவர் முணுமுணுத்தார்.

"தம்பி இது அக்சிடெண்ட். பேந்து பொலிஸ் கேஸ் என்று அலைய வேண்டி வரும்"

மாறனுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்ததது.

"அதெல்லாம் பிறகு பாத்துக் கொள்ளலாம். இப்ப.... மனிதம் உள்ள மனிதனாய் நடந்து கொள்ளுவம். யாராவது தெருவால போற ஒரு ஆட்டோவை மறியுங்கோ."

இரண்டு இளைஞர்கள் அவனுக்கு உதவ முன்வந்த போதும், ஆட்டோ ஓட்டுநர்கள் அவனுக்கு உதவத் தயாராயில்லை.

"தம்பியவை உது சரிவராது. யாராவது ஒருத்தர் மோட்டர் பைக்கை எடுங்கோ. நான் பிள்ளையை மடியில வைச்சிருக்கிறன். சுணங்கினால் பிள்ளையின்ர உயிருக்குத்தான் ஆபத்து."

மனிதப் பண்பு நிறைந்த ஒரு இளைஞன் அவனுக்கு உதவ முன் வந்தான். உந்துருளி வைத்தியசாலையை நோக்கி விரைந்தது. இவர்களது செய்கையை அவதானித்த ஒருவர் வாய்க்குள் முணு முணுத்தார்.

"இதுகளிரண்டும் வம்பை விலைக்கு வாங்கப் போகுதுகள்."

ஏனோ எமது மக்கள் சுயநலம் மிக்கவர்களாகவே

காணப்படுகின்றனர். பொதுநலம் பேணி நடப்பவர்களை அவர்களால் ஆதரிக்க முடிவதில்லை. இதனால்த் தான் எமது சமூகத்தில் ஒற்றுமை குறைந்து காணப்படுகிறது. ஆபத்து ஏற்படும் சமயங்களில் உதவவேண்டியது மனிதம் நிறைந்த மனிதனின் கட்டாய செயற்பாடு என்பதை எம்மில் பலர் மறந்துவிட்டனர்.

அரம் போலும் கூர்மையரேனு மரம் போல்வர்

மக்கட் பண்பு இல்லாதவர்.

என்ற இந்த வள்ளுவரின் கூற்றுக்கிணங்க நற்பண்புகளைத் தொலைத்து விட்டு இவர்கள் சுயநலத்துக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை காயமுற்றுக் கிடந்த அந்த சிறுவன் அவருடைய பேரனாக இருந்திருந்தால்....

தக்க சமயத்தில் மாறன் அந்தச் சிறுவனை வைத்தியசாலைக்கு கொண்டு வந்து சேர்த்துவிட்டான். அவனும் அங்கு பணியாற்றுவ தால் அங்கு கடமையாற்றுபவர்கள் அவனுக்கு சட்டென உதவ முன்வந்தனர். முதலில் கடமையில் இருந்த டாக்டர் சிறுவனைப் பரிசோதித்து விட்டு, அவனை உடனடியாக அவசர சிகிச்சைப் பிரிவுக்கு அனுப்பி வைத்தார். உடனடியாக அவனுக்கு குருதி, உயிர்வாயு செலுத்தப்பட்டது. அவனுடைய வயிற்றுப் பகுதியில் ஆழமாக ஏற்பட்டிருந்த காயத்துக்கு சிகிச்சையளிக்கும் முகமாக அவனை சத்திரசிகிச்சைக் கூடத்துக்கு மாற்றினார்கள்.

அங்கு கடமையிலிருந்த மருத்துவர் அப்போது தான் ஒரு சத்திர சிகிச்சையை முடித்துவிட்டு புறப்படுவதற்கு தயாரானார். நோயாளியைக் கண்டதும் அவருக்கு எரிச்சலாக வந்தது.

"எனக்கு ஆறுமணிக்கு பிறைவேற் நேர்ஸிங் ஹோமில அப்பொயின்ற்மென்ற இருக்குது. நான் அவசரமாகப் போக வேணும். அங்கை பேஷன்ற்ஸ் வெயிற் பண்ணிக் கொண்டிருப்பினம்."

புறு புறுத்த அவரை அவரது உதவியாளர் சமாதானப்படுத் தினார். மனித நேயத்தைவிட பணம் சம்பாதிப்பது தான் அவருடைய குறிக்கோள் என்பதை நற்குணர்ந்திருந்தார், அவர்.

"சேர்! நீங்கள் சேர்ஜரியை மட்டும் முடிச்சுவிட்டு புறப்படுங்கோ மிகுதித் தேவைகைளையெல்லாம் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்."

உதவியாளர்கள் கடுகதியில் இயங்க, சத்திரசிகிச்சை நிபுணர் சிகிச்சையை சுறுசுறுப்பாக செய்து முடித்தார். சிறுவனது சிறுநீரகப்

பகுதி நசியுண்டிருந்த போதும் தெய்வ செயலாக பாதிப்பு ஏற்படவில்லை. மீண்டும் சிறுவனை தீவீர கண்காணிப்பு பிரிவுக்கு அனுப்பி வைத்தார்கள்.

சம்பவம் நடந்து ஒன்றரை மணித்தியால நேரமாகியும் சிறுவனைத் தேடி உறவுகளோ, விசாரணைக்காக காவல் துறை யினரோ வந்து சேரவில்லை. அவர்களை எதிர்பார்த்து மாறன் காத்திருக்கிறான்.

அவசர சிகிச்சைப் பிரிவின் கதவு திறக்கும் சத்தம் கேட்டு மாறன் நிமிர்ந்து பார்த்தான். சசிகுமார் டாக்டர் அங்கு நின்றிருந்தார். மாறனது இரத்தம் தோய்ந்திருந்த உடையைக் கவனித்த அவரால் ஓரளவு நிலைமையை ஊகிக்க முடிந்தது.

"மாறன்! உம்முடைய பிள்ளைக்கு ஆபத்தொன்றுமில்லை. இருபத்திநாலு மணிநேரம் கண்காணிப்பு பிரிவில வைத்திருந்து விட்டு நாளைக்கே வார்ட்டுக்கு மாற்றிவிடலாம்."

அவனை ஆசுவாசப்படுத்தும் நோக்கத்தோடு அவர் கூறினார். சிறிது தயங்கிய மாறன் வாய் திறந்தான்.

"சேர்! அது என்னுடைய பிள்ளையில்லை. நான் வேலையால வீட்டை போகேக்க வழியில ஒரு அக்சிடெண்ற். காயப்பட்டுக் கிடந்த பிள்ளையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தினமே தவிர காப்பாற்ற ஒருத்தரும் முன்வரவில்லை. அதனால நானே கொண்டு வந்து இஞ்சை அட்மிற் பண்ணி நான்."

"உம்முடைய பொதுநலப் போக்கு எனக்குத் தெரிஞ்சது தானே. இரத்த தான முகாமில உம்மை நான் பலதடவை கண்டிருக்கிறன். ஒரு தரம் இரத்த தானம் செய்யவே எங்கட ஆக்கள் பின் நிற்பினம். உம்மைப் போன்ற மனநிலையில எல்லாரும் இருந்தால் இந்த நாடு உருப்பட்டுவிடும்"

அவர் சொல்லி முடிப்பதற்குள் காவல்துறையினர் அங்கு வந்துவிட்டனர். அவர்கள் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று விசாரணைணை முடித்த பின்னர் அங்கு வந்திருந்தனர். வைத்தியசாலை வளாகத்தினுள் கடமையாற்றும் காவல்துறை யினரிடம் முன்னரே மாறன் முறைப்பாடு கொடுத்திருந்தான். விசாரணை சுலபமாக முடிந்தது. ஏற்கனவே குழந்தையை தட்டி விட்டுப் போன வாகனத்தை தாங்கள் பிடித்துவிட்டதாகவும், அதன் சாரதியை கைது செய்திருப்பதாகவும் காவற்துறையினர் கூறினர். எது எவ்வாறாயினும் குற்றவாளி தண்டிக்கப்பட வேண்டும் என்பதே

மாறனின் நிலைப்பாடு. குழந்தை குறுக்கே வந்ததால்த் தான் அடிபட்டிருந்தாலும் சாரதி வாகனத்தை நிறுத்தி குழந்தைமீது கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

மாறன் இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருந்த வேளையில், அவர்களை நோக்கி மாணிக்கவாசகர் என்ற நாமமுடைய அவர்களது ஊர் பெரியவரும் இன்னும் சிலரும் பதறியடித்துக் கொண்டு ஓடிவந்தனர்.

"என்ரை பேரக்குஞ்சுக்கு என்னாச்சுது?"

அங்கு நின்றிருந்த டாக்டர் சசிகுமாரை நோக்கி வினாவினார்.

மாறனைச் சுட்டிக் காட்டினார், டாக்டர்.

"இவர் தக்க சமயத்தில் பிள்ளையைக் கொண்டு வந்து சேர்த்ததால தான் பிள்ளை உயிர் பிழைச்சிருக்கு. இவருக்குத் தான் நீங்கள் நன்றி சொல்ல வேணும்."

மாறனைப் பார்த்து கை கூப்பினார்.அவர் உள்ளே போய் பிள்ளையைப் பார்க்க அனுமதி கிடைக்கவில்லை. காவல் துறையினர் அனைவரது வாக்கு மூலங்களையும் பதிவு செய்து கொண்டு புறப்பட்டுவிட்டனர்.

"அப்பாடா! இனியாவது வீட்டிற்குப் புறப்படலாம்"

மனம் ஏவிய போது தான் அவனுக்கு தங்கையின் நினைவு வந்தது. காலையில புறப்படும் போது அவள் அவனிடம் வற்புறுத்தி சொல்லிவிட்டிருந்தாள்.

"அண்ணா! நாளைக்குத் தான் கடைசிநாள். பரீட்சைக்கான கட்டணம் கட்ட வேணும்."

"சரி நிலா. நான் சாயங்காலம் வரும் போது கொண்டு வந்து தாறன்."

போர் அனர்த்தத்தினால் தந்தையை இழந்து விட்டஅவன், ஒரு கையை இழந்துவிட்ட அம்மாவையும் தங்கை நிலாவையும் வைத்துக் காப்பாற்ற வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியவன். அவனுடைய சம்பளம் அவர்களது வாழ்க்கைச் செலவுக்கு மட்டு மட்டாகத் தான் இருந்தது. அன்று அவனிடம் பணம்கையில இருக்க வில்லை. எனவே, நண்பன் ஒருவனிடம் கைமாறா வாங்கி வைத்திருந்தான்.

"சரி ஐயா! பிள்ளையைப் பார்த்துக் கொள்ளுங்கோ. நான்

வாறன்.”

புறப்பட்ட மாறனது கைக்குள் மாணிக்க வாசகர் எதையோ வைத்து பொத்தினார். கையை உதறியவாறு பதைத்துப் போனான், மாறன்.

“ஐயா! ஆபத்தில ஒருவருக்கு உதவுவது மனிதாபிமானம். என்னுடைய மனிதநேய உணர்வுக்கு விலை பேசாதையுங்கோ.”

சொல்லிவிட்டு பதிலை எதிர்பார்க்காது மாறன் அவசர சிகிச்சைப் பிரிவிலிருந்து விலகி நீண்ட நடைபாதையில் நடக்கத் தொடங்கினான். அவனது மனத்தில் ஆழமாகப் புதைந்திருந்த ஒரு சம்பவம் நிழலாடியது.

சுமார் பத்து வருடங்களின் முன் இதே மாணிக்க வாசகர் வெளிநாட்டிலிருந்து கிராமத்துக்கு வந்திருந்தார். கை நிறைய சமபாத்தியத்தைக் கொண்டு வந்தவர், அவர்களது ஊரிலுள்ள முருகன் ஆலயத்திற்கு ஒரு கல்யாண மண்டபத்தைக் கட்டிக்கொடுத்தார். மண்டபத்தின் முகப்பிலுள்ள அவரது பெயரையும் உபயம் என்ற பதத்துடன் பொறிப்பித்திருந்தார். கிராமமே அவரைப் பெரும் செல்வந்தர் என்று கொண்டாடியது.

அந்தக் கால பகுதியில் தான் மாறன் குடும்பத்தினரும் இடைத்தாங்கல் முகாமிலிருந்து ஊருக்கு வந்து சேர்ந்தனர். கல்விப் பொதுத்தராதரப் பரீட்டைசயில் மாறன் சிறந்த பெறுபேறுகளை எடுத்திருந்தான். மேலே அவனைப் படிக்க வைக்க வேண்டுமென அம்மா விரும்பினாள். ஆனால் என்ன செய்வது. அவள் தான் சொத்து சுகத்தைஎல்லாம் இழந்து வெறும் ஒற்றைக் கையோடு வந்து நிற்கிறாளே. ஊரிலுள்ள சில நலன் விரும்பிகள் அவளை மாணிக்க வாசகரிடம் போய் மகனதுகல்விக்கு உதவி கேட்கச் சொல்லி அறிவுறித்தினர். அவளும் தயக்கத்தோடு அவரிடம் போனாள்.

தன்நிலையை விளக்கி அவள் அவரிடம் உதவி கோரிய போது அவரது உண்மை ரூபம் தெரிய வந்தது.

“உங்களுக்குத் தான் அரசாங்கமும் பல நிறுவனங்களும் உதவிக்கு மேல உதவியாய்ச் செய்கினம். பிறகென்ன ஏன் என்னட்டை வந்து தொந்தரவு குடுக்கிறியள். நான் உழைச்சுக் கொண்டு வந்த காசெல்லாம் மண்டபத்துக்குள்ள கொட்டிப் போட்டு இப்ப ஓட்டையாண்டியாய் நிக்கிறன்.”

முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு அம்மா வந்த

காட்சி இப்போது மாறனின் கண்முன் நிற்கிறது.

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்

அருமை உடைய செயல்

மாறனுக்கு இப்போது அந்தக் குறள் ஞாபகத்தில் வந்தது. சிந்தனையைச் சிதறவிட்டவாறு அவனது கால்கள் வைத்தியசாலை வளாக வாசல் வரை வந்து விட்டன. ஒரு குரல் அவனைத் தடுத்து நிறுத்தியது.

“அண்ணை! பிள்ளைக்கு எப்பிடி இருக்கு”

நிமிர்ந்து பார்த்தான், மாறன். தன்னையும் பிள்ளையையும் தனது உந்துருளியில் ஏற்றி வந்த இளைஞன் அங்கே நின்றிருந்தான். எம்மவரிடையே மனிதம் இன்னும் மரித்துப் போகவில்லை. என்ற திருப்தியுடன் அவனது உந்துருளியில் தொற்றிக் கொண்டான். ஏதோ நினைத்துக் கொண்டவனாய், தனது சட்டைப் பையில் இருந்த ஆயிரம் ரூபாய் நோட்டை எடுத்துப் பார்த்தான். நல்ல வேளையாக இதில் இரத்தக் கறை ஏதும் படிந்திருக்கவில்லை.

# ஒரு பிடி சாம்பல்

புலர்ந்தும் புலராத காலைப்பொழுது கருக்கொண்டிருந்த கார்காலத்து மேகங்கள் மழையைப் பிரசவிக்கத் தொடங்கிய வேளையது. தென்றல் காற்று சீறியெழுந்து வீசியதால் அதன் ஆக்ரோஷத்தைத் தாங்க முடியாத மழைத்துளிகள் வீட்டின் திறந்திருந்த சாளரத்தினூடாக உட்புகுந்து கட்டிலில் படுத்திருந்த சிவலிங்கத்தின் முகத்தில் பன்னீர் தெளிக்க... அரை குறை நித்திரையில் புரண்டு கொண்டிருந்தவர் திடுக்குற்று கண் விழித்தார். எழுந்தவர், எட்டி நின்று சாளரத்தின் கதவுகளை இழுத்து சாத்த முற்பட்ட போது பின்னால் குரல் கேட்டது.

“அப்பா! இந்த மழைக் குளிருக்குள்ளை ஏன் வெள்ளன எழும்பினநீங்கள். கொஞ்ச நேரம் படுத்திருக்கலாமே?”

மகன் சரவணனை திரும்பிப் பார்த்த சிவலிங்கம் சொன்னார்.

“இல்லை ராசா, தூவாணம் வந்து நனைச்சுப் போட்டுது. அது தான்... இழுத்தவாறே தோளில் போட்டிருந்த துண்டினால் தலையையும் முகத்தையும் அழுந்தத் துடைத்தார். அவர் தனது கண்களில் கசிந்த நீரையும் சேர்த்து துடைத்ததை நல்ல வேளையாக சரவணன் அவதானிக்கவில்லை.

“அப்பா! முகத்தைக் கழுவிப்போட்டு வாங்கோ. கோப்பி குடிப்பம்”

சொல்லி விட்டு சரவணன் வெளியேறினான். மகன் தன்னை வார்த்தைகளால் அரவணைப்பது

அவரது உள்ளுணர்வுகளுக்குப் புரிந்தது. உள்ளத்தால் நெகிழ்ந்து போனவராய் மெதுவாக அருகிலிருந்த குளியலறையை நோக்கி நடந்தார். உள்ளே போனதும் கதவைத் தாளிட்டுக் கொண்டார். இத்தனை நேரமும் வலுக்கட்டாயமாய் அடைத்து வைக்கப் பட்டிருந்த கண்ணீர் மடைதிறந்த வெள்ளமாய் பாயத் தொடங்கி யது. ஒரு குழந்தையைப் போல் விக்கி விக்கி அழுதவரது வாய் முணுமுணுத்தது.

"கோமு!... என்ரை செல்வதியே! ஏனம்மா என்னை இங்கை தவிக்க விட்டிட்டு போன நீ?"

கண்ணீர் வெளியேறி நெஞ்சின் பாரம் சற்றுக் குறையவே அவர் நிதானமடைந்தவராய் சுயநிலைக்குத் திரும்பினார். துரித கதியில் காலைக் கடன்களை முடித்து விட்டு வந்தவரிடம் மருமகள் சூடான கோப்பியை நீட்டினாள்.

அவர் சாய்மனையில் சாய்ந்தவாறே கோப்பியை வாங்கிப் பருகத் தொடங்கினார். ஒரு வாய் பருகியதும் மூக்கைச் சுளிப்பதைக் கவனித்து விட்ட சரவணன் கூறினான்.

"என்னப்பா! இனிப்பு கம்மியாக இருக்குதா... நான் தான் தர்சினியிட்ட சொன்ன நான். அம்மாவுக்கும் டயபெற்றிக் கொன்றோலில இல்லாத படியால தான் நோய் அவவைத் தாக்கினது. நீங்கள் கொஞ்சம் கவனமாய்த்தான் இருக்க வேணும்"

"நான் யாருக்காக வாழ வேணும்?"

மனதுக்குள் கேட்டுக் கொண்டவராய் சரவணன் கொடுத்த நாளேட்டில் தனது கவனத்தை நிலைக்க வைக்க முயன்றார். "கொரோனா வைரஸ்" பற்றிய செய்திகளே முன்பக்கத்தை அலங்கரித்து கொண்டிருந்தன. பத்திரிகைச் செய்தியில் மூழ்கிப் போனவரை பேர்த்தி யின் குரல் திசை திருப்பியது.

"அப்பம்மா ஊட்டி விட்டாத்தான் நான் சாப்பிடுவன். எனக்கு சாப்பாடு வேண்டாம"

அடம் பிடித்த குழந்தையை அம்மா ஆசுவாசப்படுத்தினாள்.

"இஞ்சை பாருங்கோ நிலாக்குஞ்சு. அப்பம்மா சாமி கும்பிடப் போயிருக்கிறா. அவ வந்ததும் உங்களுக்கு ஊட்டி விடுவா. இப்போதைக்கு அம்மாட்ட வேண்டிச் சாப்பிடுவீங்களாம். எங்கை ஆ... காட்டுங்கோ."

"ஊஹூம்!... நான் மாட்டன். நீங்கள் பொய் சொல்லி

என்னை ஏமாத்தப் பாக்கிறியள். அப்பம்மா இனி வரவே மாட்டா எனக்குத் தெரியும்"

"என்ரை அச்சா நிலாக்குஞ்செல்லே. அம்மா சொன்னா கேக்க மாட்டியளே. பிள்ளைக்கு நான் "கிண்டர்ஜோய்" வாங்கித் தருவன். இப்ப ஆவெண்டு ஒரு வாய் வாங்குங்கோ செல்லம்"

கெஞ்சினாள் அம்மா. மிஞ்சினாள் நிலா.

"எனக்கு எதுவும் வேண்டாம். என்ரை அப்பம்மாதான் வேணும்"

குழந்தையின் அட்டகாசத்தைத் தாங்க முடி யாமல், பொறுமையிழந்த தர்சினி அவளை அறைந்து விட்டாள் போலும். குழந்தை வீறிட்டு அலறியது.

இவற்றைச் செவி மடுத்த சிவலிங்கம் நெஞ்சைப் பொத்திப் பிடித்துக் கொண்டார். மனம் கடவுளிடம் இறைஞ்சியது.

"கடவுளே! இந்த நெஞ்சுவலியோடயாவது இந்த உலகத்தை மறக்க வைத்து என்னைக் காவு கொண்டு விடு. என்ரை கோமதி யின்ரை பிரிவுத் துயரை என்னால தாங்க முடியாமல் தவித்துத் துடிக்கிறதை நீதானே அறிவாய்."

கண்களைத் துடைத்துக் கொண்டவராய் எழுந்து தனது அறையை நோக்கி நடந்தார். அங்கிருந்த கட்டிலில் "பொத்" தென விழுந்தார். கண்களை இறுக மூடிக் கொண்டவரின் சிந்தனையை கோமதி முற்றிலு மாக ஆக்கிரமித்துக் கொண்டு விட்டாள்.

இருபது வயதான இளங்குமரியாய் அவளை அவர் தாலிகட்டி தன்னுடையவளாக்கி அழைத்து வந்த அந்த நாள் நினைவுகள் சோகத்தால் நிறைந்திருந்த அவரது நெஞ்சத்திலும் சிறு கிளுகிளுப்பை ஏற்படுத்தி யது. ஆரம்பத்தில் அவள் ஒரு வெகுளியாக இருந்த போதும், நாளடைவில் நல்ல பொறுப்பான ஒரு குடும்பத்தலைவியாக மாறி விட்டாள். இரண்டு பெண்கள், ஒரு பையன் என மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்து சீராக வளர்த்து அவர்களை மேன் நிலைக்கு கொண்டு வந்ததில் அவளுடைய முயற்சி தான் மேலோங்கி இருந்தது. சிவலிங்கம் தானுண்டு தனது தொழிலுண்டு என காலத்தைக் கழித்தவர். ஒரு ஆசிரியராகக் கடமை புரிந்தவர், கிடைக்கும் ஊதியத்தை மனைவியிடம் கையளித்து விட்டால் போதும். தனது கடமை தீர்ந்தது என நினைத்து பொதுப்பணிகளில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு வாழ்ந்தவர். அதை நினைக்கும்போது மனத்தில் ஓர் குடைச்சல். "கோமு" உனக்கு நான்

நிறையப் பொறுப்பு களைத் தந்து விட்டேன். இருந்தாலும் பிள்ளைகளை நன்றாகப் படிக்க வைத்து மேல் நிலைக்கு கொண்டு வந்தது மட்டுமல்லாமல் பொருத்தமான வரன்களையும் தேடி விட்டாய். நான் வெறும் பொம்மையாகவே வாழ்ந்திருக்கிறேன்.

உறுத்தும் உணர்வுகளால் நெஞ்சம் கனத்தது. தொண்டைக் குள் ஏதோ தொக்கலாய் திரண்டு வந்து அடைத்தது. மீண்டும் அவரது நினைவுகளில் கோமதியின் செயல்கள் பல வந்து மோதத் தொடங்கின.

அவரது விருப்பு வெறுப்புகளை நன்கறிந்து செயற்படுவ துடன் அவரை ஒரு குழந்தையாகவே கருத்திற் கொண்டு செயற்படு வாள். ஏன் கடைசி நேரத் தில் காய்ச்சலால் அவஸ்தைப்பட்டவளுக்கு கொரோனாத் தொற்றின் அறிகுறிகள் தென்படுவதாகச் சொல்லி அவர்கள் அவளை "அம்புலன்ஸ்" வண்டியில் அழைத்துச் சென்ற போதும் அவள் கூறிய வார்த்தைகள் இப்போதும் அவரது காதுகளில் வந்து மோதி ஒலிக் கின்றன.

"இஞ்சாருங்கோப்பா! ஆகாததைச் சாப்பிடாதையுங்கோ உடம்பைப் பாத்துக் கொள்ளுங்கோ."

அதுதான் அவளது கடைசிச் சம்பாஷணை என அவர் இம்மியும் கருதவில்லை. அவளுக்கு அதுதான் தனது இறுதி விடைபெறுதல் என்று நினைத்திருப் பாளா... எல்லாமே கனவாகிப் போய்விட்டது.

ம்!...

ஆழ்ந்த பெருமூச்சொன்று அடிவயிற்றிலிருந்து புரண்டெழுந்து வந்து வெளியேறி ஊதல்காற்றுடன் சங்கமமாகியது. களைத்துப் போயிருந்த உடல் சோர்ந்து துவள நித்திராதேவி அவர் மீது கருணைகாட்டி தன்னுடன் அணைத்துக் கொண்டாள்.

திடீரென வீட்டுக்குள் கேட்ட அலறல் சத்தம் அவரது உறக்கத்தைக் கலைத்து விடவே, காதுகளைக் கூர்மையாக்கி உன்னிப்பாக அவதானித்தார். இது அவருடைய பிள்ளைகளான ராதிகா, ரேணுகாவின் குரல்களே தான். அம்மாவின் செய்தியறிந்து கலங்கிப் போய்க் கிடந்தவர்கள் நாட்டின் முடக்கநிலை கலைக்கப் பட்ட தும் நேரில் புறப்பட்டு வந்திருக்கிறார்கள் போலும்.

அம்மா! அம்மா!! என்று கதறியவர்களிடம் மருமகள் தர்சினி தாழ்ந்த குரலில் கூறுவது அவரது காதுகளுக்கு தெளிவாகக் கேட்டது.

*“அண்ணி! அப்பா இப்பவே சரியாய்க் குழம்பிப் போய் இருக்கிறார். அவரை மேலும் குழப்பிப் போடாதை யுங்கோ”*

*“இல்லை தர்சினி. அழுது தீர்க்கிறதுதான் கவலைக்கு ஒரே மருந்து. இருந்தாலும் நான் பார்த்துக் கொள்ளுறன்.”*

*கூறியவாறே ராதிகா அவரது அறைக்குள் நுழைந்தாள். கூடவே ரேணுகாவும் வந்து அப்பாவைக் கட்டிப்பிடித்துக் கொண்டார்கள். மூவரின் அழுகை ஒலியும் பேரோசையாக எழுந்து காற்றுடன் சங்கமமாகி யது. சில கணங்களில் அனைவரும் ஓய்ந்து போயினர்.*

*“அம்மாவின்ர பொடி”யைக் கூட பார்க்கக் கிடைக் கேல்லையே அவவுக்கு செய்யிற இறுதிக் கடன் களைக்கூட செய்யேலாமல் போன பாவிகளாய் போயிட்டம்”*

*கூறிய ரேணுகா விம்மினாள்.*

*“நாங்கள் மட்டும் என்ன, அவளுடைய உயிரற்ற உடலைப் பாக்க எவருக்குமே குடுப்பனவில்லாமல் போயிட்டுது. என்ரை செல்வதி நாலுநாளாய் “மோச்சரி” யில கிடந்து பிறகுதான் மின்சாரத் தகனம் செய்தவை. தனிமைப்படுத்தல் என்ற போர்வையில நாங்கள் வீட்டுக்குள் அடைபட்டுப் போனம்.”*

*“எப்பிடியப்பா. அம்மாவுக்கு மட்டும் இந்த நோய்த்தொற்று வந்தது?”*

*கையிலிருந்த துவாயினால் தனது முகத்தை ஒருதரம் அழுந்தத் துடைத்துக் கொண்டவராய் சிவலிங்கம் கூறினார்.*

*“கொம்மா வெள்ளிக்கிழமைகளில பூமாலை கட்டிக் கொண்டு கோயிலுக்குப் போய் வாறவ. அங்கை கோயிலில தொண்டு செய்யிற சில பேருக்கு கொரோனத் தொற்று ஏற்பட்டிருப்பதாக அறிஞ்ச நாங்கள். எது எப்படியோ அவளுக்கு நோயும் வந்து அவளுடைய வாழ்நாளும் முடிஞ்சு போச்சுது.”*

*பிள்ளைகளுடன் நேரில் துன்பத்தைப் பகிர்ந்து கொண்டபின் மனப்பாரம் சற்றுக் குறைந்திருப்பதை அவரால் உணர முடிந்தது. நிதானமாக மக்களுடன் அளவளாவத் தொடங்கினார்.*

*“சரவணனுக்கும் சரியான மனவருத்தம். கொம்மா இருக்கேக்க அடிக்கடி சொல்லிக் கொள்ளுவா, “என்ன இருந்தாலும் எங்களுக்குக் கொள்ளி வைக்கப்போற பிள்ளை மூத்தது இரண்டும் பெண்ணாய்ப் பிறந்ததில அந்தப்பேறு எங்களுக்குக் கிடைக் காமல்*

போயிடுமோ என்று ஏங்கிக் கொண்டிருந்தன். அந்தக் கடவுள் இரங்கி எங்கள் மீது கருணை காட்டீட்டார்" என்று. அது சாத்தியமில்லாமல் போயிட்டுது. நாங்கள் தனிமைப்படுத்தலில வீட்டில கிடந்து தவிச்சம். அவை அறிவித்த நேரத்துக்கு சித்தி யின்ர மகன் அரவிந்தனும் சரவணனுடைய சிநேகிதப் பெடியள் இரண்டு பேரும் தான் போனவை."

"அவை பொடியைப் பார்த்தவையாமோ அப்பா?"

"இல்லையடி பிள்ளையள். பெட்டிக்குள்ள இருந்த உடலுக்கு சும்மா வெளியால கற்பூரம் கொறுத்த விட்டவையாம். எல்லாம் எரிச்சப்பிறகு ஒரு கலசத்தில சாம்பலைக் குடுத்தவர்களாம்"

சொல்லும் போது குரல் தளுதளுத்தது.

"விடுங்கோப்பா. எல்லாம் சுகாதார விதி முறைக்கேற்றவாறு தானே நடந்திருக்குது. காலத் தின்ரை கோலத்துக்கேற்றவாறு நாங்கள் அனுசரிச்சுத் தானே போகவேணும். நாங்கள் குடுத்து வைச்சது அவ்வளவு தான்."

ராதிகாவின் மனதில் நிறைந்திருந்த ஆற்றாமை நெடிய பெருமூச்சாக வெளியேறியது.

நாட்கள் சில நகர்ந்து போயின. நிலா இப் பொழுதெல்லாம் அப்பம்மாவைத் தேடி அழுவ தில்லை. காலம் அந்தப் பிஞ்சு நெஞ்சத்தில் தோன்றி யிருந்த காயத்தை மாற்றியதா அல்லது ராதிகா, ரேணுகாவின் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடி பொழுதைக் கழிப்பதால் அது அவளது மனக் காயத் துக்கு ஒத்தடமாக அமைந்து விட்டதா?... எதுவென்று சொல்லத் தெரியவில்லை.

கோமதி இவ்வுலகை விட்டுப் பிரிந்து மாதம் ஒன்று ஆகப் போகிறது. நாளை அந்தியேட்டிக் கிரியை களை கீரிமலையிலும், அதற்கு மறுநாள் வீட்டுக்கிருத்தி யத்தையும் செய்து அவளுடைய ஆத்மா சாந்தியடையப் பிராத்திப்பதுடன் மதிய போசனமும் அளிக்கலா மென அனைவரும் கூடி முடிவெடுத்தனர். அதற்கான ஆயத்தங்களிலும் மும்முரமாக ஈடுபட்டனர்.

மதிய நேரம் பேரக் குழந்தைகளின் கலகலப்பி னால் அந்த வீடே நிறைந்திருந்தது. சாய்மனையில் சரிந்திருந்த சிவலிங்கத்தினது மனதை முற்றிலுமாக கோமதி நிறைத்திருந்தாள். "இப்பிடி பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் என்று வீடு நிறைஞ்சிருக்கிறதைப் பார்த்தால் கோமதி எவ்வளவு மகிழ்ச்சியடைவாள். பம்பரமாய்ச் சுழன்று அவர்களுக்கு வேண்டியதைக் கவனிப்பாள். பேரப்

*பிள்ளைகளுக்கு ஏற்றவாறு இதமான இனிய கதைகளைச் சொல்லி தானும் அவர்களுடன் ஒரு குழந்தையாகவே மாறிவிடுவாள். சிந்தனைக்குதிரையின் அடியோசை அவரைத் தாலாட்ட கண்ணயர்ந்து போனார், சிவலிங்கம்.*

***

*அன்றைய பொழுது அமர்க்களமாக விடிந்தது. அன்று கோமதியின் அஸ்தி கீரிமலைக் கடலுடன் சங்க மிக்கப் போகும் நாள். ராதிகா, ரேணுகாவின் விருப்பப் படி குடும்பத்தவர் அனைவருமே கீரிமலையில் நடக்க விருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்கெடுக்க ஏற்பாடாகியிருந்தது. ராதிகா தான் பிடிவாதமாக நின்று அந்தக் கோரிக்கையை முன் வைத்திருந்தாள்.*

*"அம்மாவுக்கு நாங்கள் ஒரு கடமையும் செய்ய வில்லை. அந்தியேட்டிக் கிரியையிலையாவது கலந்து கொண்டு எங்களால் முடிஞ்சதைச் செய்வம்"*

*சிவலிங்கத்துக்கு அதில் இஷ்டமில்லை. சரவணன் அவரை சமாதானப் படுத்தினான்.*

*"அப்பா! இப்ப உதெல்லாம் சகஜம். பெண்கள், குழந்தைகள் என்று பேதமில்லாமல் அனைவருமே வந்து அந்தியேட்டி காரியங் களில் பங்கு பற்றுகினம். உந்த எண்ணத்தை விட்டுத் தள்ளுங்கோ"*

*"நீ என்னதான் சொன்னாலும் காலம் நல்லாத் தான் மாறிப் போச்சு"*

*மனக்குறையை அவரால் வெளிப்படுத்தாமல் இருக்க முடியவில்லை.*

*சரியாக 6.30 மணிக்கு வீட்டு வாசலில் வான் வந்து நின்றது. குழந்தைகள் அவசரமாக ஓடிப்போய் வானில் ஏறிக் கொண்டார்கள் ஏற்கெனவே வீட்டு முற்றத்தில் எடுத்து வைத்திருந்த பொருட்களை சரவணனும் அவனது மைத்துனர் இருவருமாக வண்டிக் குள் ஏற்றினர். ராதிகாவின் கணவன் சிவலிங்கத்தை கைத்தாங்கலாக பிடித்து வந்து வாகனத்துக்குள் ஏற்றி ஒரு இருக்கையில் வசதியாக இருக்க வைத்து விட்டுப் போனான். பெண்கள் மூவரும் அழுத விழிகளோடு வந்து ஏறிக் கொண்டனர். அம்மாவின் கண்ணீரைக் கண்ட ராதிகாவின் மகன் வினவினான்.*

*"ஏனம்மா அழுகிறீங்கள்?"*

*"பிள்ளையின்ரை அம்மம்மாவுக்கு காரியம் செய்யப் போறம்.*

*விம்மி வெடித்தாள் ராதிகா. தர்சினி, நிலாவை அழைத்து தனது மடியில் இருத்திக் கொண்டாள். சிவலிங்கம் தனது தோளில் கிடந்த சால்வையை எடுத்து கண்களை ஒற்றிக் கொண்டார்.*

*"கோமதி! நீ என்ரை நெஞ்சுக்குள்ளை இருக்கிறாய்" அவரது மனம் நினைத்துக் கொண்டது.*

*சாரதி வந்து தனது இருக்கையில் ஏறி அமர, வெளியில் நின்றிருந்த ஆண்கள் அவசரமாக ஏறிக் கொண்டனர். சாரதி வாகனத்தை செலுத்த முற்பட தர்சினி குரல் கொடுத்தாள்.*

*"அண்ணை! வாகனத்தை எடுத்துப் போடாதை யுங்கோ அவர் வரவேணும்"*

*வாகனம் உறுமியவாறே காத்திருந்தது.*

*சரவணன் கையில் ஒரு பொதியுடன் ஒட்டமும் நடையுமாக வந்து வாகனத்தின் முன்புறமாக ஏறினான். அவன் இருக்கையில் சீராக அமர்ந்து கொண்டதும் புறப்பட்டது வாகனம். சிவலிங்கம் குடும்பத்தினர் அனைவரும் அதில் பயணித்துக் கொண்டிருந்தனர். கோமதியும் கூடத்தான். ஒரு பிடி சாம்பலாக.*

ஜீவநதி - 2021 - மலரன்னை சிறப்பிதழ்

# உளப்பசி

*வீட்டின் முன்கூடத்தில் சாய்மனையில் சரிந் திருந்தார், சிவப்பிரகாசம். கார்த்திகை மாதத்திற்கே உரிய கூதல் காற்று அவரது மேனியைத் தழுவி நிலை தடுமாற வைத்த போது ... அவர் தன்னையறியாமலே தோளிலிருந்த துவாயை எடுத்து மார்புப் பகுதியை மூடிக் கொண்டார். முதுமையின் தள்ளாமையை குரல் அனுக்கமாக வெளிப்படுத்தியது. "ம்!...."*

*"ஏனப்பா இந்தக் குளிருக்குள்ள வெளியால இருக்கிறியள். போய் வீட்டுக்குள்ள இருக்கலாமே?"*

*குரல் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்தவர், அப்போது தான் வாசற்படியில் கால் பதித்துக் கொண்டிருந்த மகள் மாதவியையும், பேரன் விதுரனையும் கண்ணுற்றார்.*

*"நீ இந்த வெள்ளனக் காத்தால என்னத்தில வந்தநீ?"*

*"அப்பா! வேலைக்குப் போகேக்குள்ள இவர் கொண்டு வந்து இறக்கிவிட்டிட்டுப் போறார். அது சரி அம்மாஎங்கை?"*

*கேட்டுக்கொண்டே வீட்டுக்குள் நுழைந்தாள், மாதவி. பேரன் விதுரன் அவரண்டை வந்து தயங்கி நின்றான்.*

*"தாத்தா! இண்டைக்கு மாமா துயிலெழும்பி வருவாராம். அம்மா சொன்னா"*

*"ஓமப்பு. இஞ்சை வெளியில குளிருக்கை நில் லாம... நீ போய் வீட்டுக்குள்ள இருந்து விளையாடு"*

சொன்னவர், பேரனைக் கட்டியணைத்து உச்சியில் முத்தமிட்டு விட்டு உள்ளே அனுப்பி வைத்தார். மகனது நினைவு வந்தததும், உணர்வுகளின் கொந்தளிப்பினால் கண்கள் குளமாகி பார்வையை மறைத்தது. மனமோ… தட்டிவிட்ட குதிரையாக கடந்த காலத்தை நோக்கி பாயத்தொடங்கி விட்டது.

அவருடைய இளமைப் பருவம் கண்முன் விரிந்தது. அவருக்கு வாழ்க்கைத் துணைவியாக வாய்த்த மங்கை அடுத்தடுத்து மூன்று பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். பெற்ற பிள்ளைகளைச் சீராட்டி மகிழ்ந்த போதும் தங்களுக்கு ஈமக்கடன் செய்ய ஓர் ஆண் பிள்ளை இல்லையே என்ற ஏக்கம் மேலோங்கியிருந்தது. அவர் களிருவரும் இறைவரம் வேண்டி விரதமிருந்து ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்த போது … அந்தக் குடும்பமே மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிப் போனது. அவர் தனது அருமைப் புதல்வனுக்கு தவச்செல்வன் என நாமமிட்டார். குழந்தைகளின் வளர்ச்சியையும் அவர்கள் செய்யும் குறும்புகளையும் கண்டு பெற்றோர் இறுமாந்திருந்தனர். சுருங்கச் சொல்லப் போனால் அது அவர்களுடைய வாழ்க்கையின் பொற் காலம் என்றே சொல்லலாம்.

நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக பிள்ளைகள் வளர்ந்து வருவதைக் கண்டு பெற்றோர்கள் பூரித்துப் போயினர். அதிலும் தவச்செல்வனது கல்வித் திறமையைப் பற்றி சக ஆசிரியர்கள் புகழ்ந்து பேசும் போது சிவப்பிரகாசம் மெய் மறந்து போய் காற்றில் மிதப்பார்.

அந்தக் காலப்பகுதியில் தான் யாழ்.குடா நாட்டை போர் மேகங்கள் சூழத் தொடங்கின. அதன் விளைவாக பாடசாலைகள் இழுத்து மூடப்பட்டன. கல்விச் செயற்பாடு ஸ்தம்பிதமடைந்தது. ஆர்வத்துடன் கற்று வந்த தவச் செல்வனுக்கு இந்தத் தடை பெரும் மனத்தளர்ச்சியை ஏற்படுத்தி விடவே, கிளர்தெழுந்த மனத்தின் வழியே அவன் செயற்படத் தொடங்கினான்.

மகனது முடிவு கண்டு சிவப்பிரகாசம், மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாதவராய் பரிதவித்துப் போனார். பெற்றவளான மங்கை புத்தி பேதலித்துப் போனாள்.. எனினும் தவச்செல்வன் இடையிடையே வந்து பெற்றோரை ஆசுவாசப்படுத்தி போனான்.

காலம் கடுகதியில் நகர, தவச்செல்வன் ஒரு கருகிய மாலைப் பொழுதினில் விதைகுழிக்குள், தஞ்சமானான். பெற்றோரும்

சசோகதரிகளும் கண்ணீர் வெள்ளத்துக்குள் அமிழ்ந்து போயினர்.

அந்தச் சோகத்திலிருந்து முதலில் விழித்தெழுந்தவள், மங்கை தான். குடும்பத்தின் தலைவியாய் தனக்கிருக்கும் பொறுப்புக்களை உணர்நது கொண்டவளாய் கணவனையும் உஷார்ப்படுத்தினாள். விளைவு... புத்திர சோகத்தை மனதில் ஒரு மூலையில் புதைத்துவிட்டு பெண் பிள்ளைகளின் நலத்தில் நாட்டம் காட்டத் தொடங்கினர்.

"தாத்தா!"

பேரனின் குரல் கேட்டு சிந்தனையிலிருந்து விடுபட்டவராய் நிமிர்ந்து பார்த்தார், சிவப்பிரகாசம்.

"தாத்தா! நானெல்லே மாமாவைப் போல இருக்கிறன்."

இது மூத்த மகள் வயிற்றுப் பேரன் இனியன்.

அவனை இடைமறித்தான், இளையவளின் மகன்.

"தத்தா! இவர் சொல்லுறது பொய். நான்தான் மாமாவைப் போல. அம்மா சொன்னவ."

"இப்ப... இதில என்ன பிரச்சினை. நான் சொல்லுறன். இனியனின்ரை முகம் மாமாவைப் போலத்தான். ஆனால்... விதுரனின்ரை குணம் அப்பிடியே மாமாவை ஒத்திருக்குது."

குழந்தைகளை சமயோசிதமாக சமாளித்துவிட்ட திருப்தி யுடன் அவர்கள் இருவரையும் இழுத்து தன் கரங்களுக்குள் சிறை பிடித்துக் கொண்டார். குனிந்து அவர்களது உச்சியை முத்தமிட்டார். அப்போது தான் கவனித்தார், இனியனின் சட்டையில் முன்புறமாக கறை படிந்திருந்தது.

"இனியா! இதென்ன உன்னுடைய சட்டையெல்லாம் கறையாய் கிடக்கு?"

"அதுவா... அது வந்து தாத்தா.. அம்மா, மாமாவுக்கு விருப்பமெண்டு சொல்லி நாவல் பழம் வாங்கிக் கொண்டு வந்தவ. நான் அதில கொஞ்சத்தை எடுத்து "பொக்கற்"றுக்குள்ளை வைச்சு சாப்பிட்டு விட்டன். அதில இருந்து தான் ஊத்தை பிரண்டிருக்குது. அம்மா தோய்ச்சுத் தருவா."

"சரி சரி. நீங்கள் போய் விளையாடுங்கோ."

முதுகில் தட்டிக் கொடுத்து அவர்களை அனுப்பினார். அவரது மனதில் இனம் புரியாத ஒரு தவிப்பு. மீண்டும் சாய்மனையில் சாய்ந்து கண்களை இறுக மூடிக் கொண்டார். நினைவுகள் பின்

நோக்கிப் பாய்ந்தன.

அது ஒரு புரட்டாதி மாதத்து கடைசிச் சனிக்கிழமை. வீட்டில் அனைவருமே விரதமிருந்து சனிபகவானை வழிபட வேண்டுமென்பது மனைவி மங்கையின் வேண்டுகோள். மங்கையும், மூத்த பெண்கள் இருவருமாய் சமையலில் மூழ்கியிருந்த வேளை, இளையவள் அவலக்குரலுடன் ஓடி வந்தாள்.

“அப்பா ! தம்பியைக் காணேல்ல.”

“உங்கை தான் எங்கையும் விளையாடிக் கொண்டிருப்பான்.” கூறியவர் தானும்இணைந்து அவனைத் தேடத் தொடங்கினார். அவனைக் காணவில்லை. அவர் உரத்துக் குரல் கொடுக்க.. மங்கையும் பிள்ளைகளும் ஓடி வர, அனைவரும் பதற்றத்துக்குள்ளாகி நின்று விழிக்க... தவச் செல்வன் மெதுவாக வந்து அவர்கள் முன் நின்றான்.

“எங்கை ராசா இருந்த நீ?”

ஏக குரலில் அனைவரும் வினவ, அவன்மெதுவாக வாய் திறந்தான். அதற்கிடையில் அவனது நாக்கில் படிந்திருந்த நாவற்பழக் கறையை சின்னக்காவின் கழுகுக் கண்கள் அவதானித்து விடவே, அவள் புலம்பத் தொடங்கினாள்.

“அம்மா! இஞ்சை பாருங்கோ தம்பி ஒளிச்சிருந்து நாவற்பழம் சாப்பிட்டிருக்கிறான். எனக்குத் தெரியாது. இண்டைக்கு காகம் சோறு சாப்பிடாது. நாங்களும் சிவபட்டினிதான்..”

அவர்களைப் பார்த்து தவச்செல்வன் சிணுங்கத் தொடங்கினான்.

“இல்லைஅக்கா . நான் கட்டிலுக்குக் கீழே ஒளிச்சிருந்து தான் சாப்பிட்டநான். காகத்துக்குத் தெரியாது,”

குழந்தையின் அறியாமையை எண்ணி அனைவரும் மனதுக்குள் சிரித்துக் கொண்டனர்.

அந்தச் சம்பவத்தின் நினைவாக வருடந்தோறும் சின்னக்கா நாவற்பழம் தேடிவந்து அவனுக்குப் படைத்து விடுவாள். முன் பெல்லாம் அவர்களதுவிதைகள் பாவிய இடத்தில் தான் படையிலிட்டு நெய்விளக்கேற்றி , துயிலெழுப்பி உணர்வு பூர்வமாக அஞ்சலிப்பார்கள். ஆனால்.. இப்போது அது சாத்தியமில்லாமல் போய்விட்டது. அதற்காக அவர்களது தியாகத்தை மறந்துவிட முடியமா... என்ன...

மாலைப் பொழுது கருகும் நேரம் வந்துவிட்டது. வீட்டின் உள்மாடத்தில் தவச் செல்வனது உருவப்படம் மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அவனுக்கு மல்லிகைப் பூ மீது இருந்த நாட்டத்தை உணர்ந்த அக்காமார் மூவரும் மல்லிகை மாலைகளால் அவனை அலங்கரித்திருந்தனர். மல்லிகையின் நறுமணம் மாடத்தை நிறைந்திருக்க, அம்மா மகனுக்காக பிரத்தியேகமாக தயாரித்து வைத்திருந்த உணவுப் பதார்த்தங்களின் வாசனை வேறு மூக்கைத் துளைத்தது,

வீட்டில் அனைவரும் மாடத்தில் ஒன்று கூடி துயிலெழுப்பக் காத்திருந்த வேளையில் சிவப்பிரகாசம் அவசரம் அவசரமாக கையில் இரண்டு பனங்கிழங்குடன் உள்ளே வந்தார்.

“இஞ்சாரும் இந்தக் கிழங்குகளை ஒருக்கா அடுப்புக்குள்ள வைச்சு சுட்டுக்கொண்டு வாரும்.பிள்ளைக்கு கிழங்கெண்டால் நல்ல விருப்பம்.”

மனைவி மங்கையிடம் அவர் கிழங்கை நீட்ட, மூத்தவள் அதை வாங்கிக்கொண்டு சமையலறைக்குப் போனாள்.

சிவப்பிரகாசத்தின் இளைய பேரன் விதுரனுக்கு மட்டும் சந்தேகம் தீர்ந்த பாடாயில்லை.

“மாமா இப்ப எழும்பி விடுவாரோ?”

எவரும் அதற்குப் பதிலளிக்கவில்லை. மாறாக ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

கோயில்களில் மணி ஒலிக்கத் தொடங்கியது. அனைவரும் வாசலுக்கு விரைந்து அங்கு தயாராக வைக்கப்பட்டிருந்த நெய்ப் பந்தத்தை ஒளிர விட்டனர். சின்னக்கா அலைபேசியில் துயிலெழுப் பும் பாடலை ஒலிக்க விட்டாள். தவச்செல்வனின் முகத்தையே பார்த்தவாறு அவனைவரும் அஞ்சலிக்கத் தொடங்கினர். அவர்களது கண்களை மறைத்திருந்த நீர்த்திரைக்குள் மானசீகமாக தவச்செல்வன் தோன்றினான்.

சிவப்பிரகாசம் தனது தோளில் போடப்பட்டிருந்த துண்டை எடுத்து கண்களை ஒற்றிக் கொண்டவர், மகனது கண்களை உற்றுப் பார்த்தார்.

“அப்பா! ஏனிந்தப் படைலெல்லாம் . நான் ஒன்றும் வயிற்றுப் பசியோடு இங்கு வரவில்லையே“

மகனது குரல் காதில் ஒலிப்பது போன்றதோர் பிரமையில்

மீண்டும் அவனது கண்களை ஊடுருவிப்பார்த்தார். ஆம் அவர்களது உள்ளத்துப் பசி இன்னும் தீரவில்லை. என்பது அவருக்குப் புலனாகி யது. மெதுவாக அவ்விடத்தை விட்டு நழுவி வெளியே போனார்.

திரும்பி வந்தவரது கையில் ஒரு தட்டு. உணர்வுகள் கொந்தளிக்க நின்றிருந்தவர்களின் பார்வை அதில் திரும்பியது. உற்றுப் பார்த்தனர். அந்தத் தட்டில் மண் நிரம்பியிருந்தது.

"உங்களது உள்ளத்துப் பசிதீரும்" மனதுக்குள் சொல்லிக் கொண்டவர், கண்களை இறுக மூடி பிரார்த்திக்கத் தொடங்கினார்.

# பனித்துகள்

வைத்தியசாலையிலிருந்து வீட்டுக்குத் திரும்பிய மாலதி, தளர் நடையுடன் தனது அறைக்குள் போனவள், அங்கு கிடந்த கட்டிலில், "தொப்" பென விழுந்து தனது உடலைச் சரித்துக் கொண்டாள்.

மகளின் வரவுக்காக காத்திருந்த மகேஸ்வரி, மகளின் இச்செய்கையைக் கண்டு விசனத்துடன் விரைந்து சென்று மகளை உலுப்பினாள்.

"என்னடி பிள்ளை மாலா பிள்ளைக்கு இப்ப எப்பிடியிருக்கு?"

"ம்... !ம்...!.ம்...! அவன் அப்படியே தான் கிடக்கிறான்."

சுரத்தில்லாமல் அனுக்கத்துடன் வந்தது பதில்.

ஒரு ஈருருளி மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்குண்ட அவளது மகன் ஆதவன் நான்கு நாட்களாக பேச்சு மூச்சின்றி யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் கிடக்கிறான்.

மகள் மாலதி சுருண்டு சோர்ந்து போய்க்கிடப பதை அவதானித்த மகேஸ்வரிக்கு நெஞ்சு வலித்தது. மெதுவாகப் போய் மகளைத் தொட்டு தடவி அவளுக்கு ஆறுதலாக இரண்டு வார்த்தை சொல் என மனம் உந்தித் தள்ளியது.

மகளது அருகில் போய் அமர்ந்து அவளது மேனி யைத் தொட்டவள், திடுக்கிட்டுப் போனாள். அவளது உடல் நெருப்பாகக் கொதித்தது தான் காரணம்.

"என்ன பிள்ளை இது. மேல் நெருப்பாய்

சுடுகுது. நீ பாட்டுக்கு பேசாமல் கிடக்கிறாய்"

பெற்ற மனம் துடித்தது.

"அது ஒன்றுமில்லையம்மா. ஆஸ்பத்திரிக்கு போட்டு வரயுக்கை மழையிலை நனைஞ்சிட்டன். அதுதான் அலுப்பாய்க் கிடக்குது."

முனகியவள், கை கால்களை நீட்டி அலுப்பு முறித்துக் கொண்டாள்.

"பொறு வாறன்" என்று சொல்லிவிட்டுப் போன அம்மா, இரண்டே நிமிடத்தில் கையில் மல்லித்தண்ணீருடன் வந்து அவள் முன்நின்றாள்.

"இந்தா பிள்ளை இதைக் குடி"

குவளையை கையில் வேண்டியவள், தாயின் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அம்மாவின் கண்களில் தெரிந்த தாய்ப்பாசத்தை பார்க்கவிடாமல் அவளது கண்களை நீர் மறைத்தது. அம்மா அத்துடன் விடவில்லை. இரண்டு "பனடோல்" வில்லைகளையும் அவளது வாய்க்குள் திணித்து அவளை விழுங்க வைத்தாள்.

"அம்மா! என்னை சரியாய் பதினொரு மணிக்கு எழுப்பி விடுங்கோ. நான் ஆஸ்பத்திரிக்குப் போக வேணும்."

"ஏன் பிள்ளை காய்ச்சலோடு நீ அலைக்கழியிறாய். பின்னேரமாய் போய்ப்பாரன். வேணுமெண்டால் நான் மத்தியானம் போய் பார்த்துக் கொண்டு வாறன்."

தாய் மனம் மகளுக்காக அங்கலாய்த்தது.

"இல்லையம்மா, மூன்று நேரமும் போய் பிள்ளையைப் பாக்கிறது தான் இப்ப எனக்கிருக்கிற ஒரே ஆறுதல்."

மகளின் ஆதங்கத்தைப் புரிந்து கொண்ட தாய், மௌனத்தைத் தழுவியவளாய் தனது வேலைகளைக் கவனிக்கப் போய் விட்டாள்.

மீண்டும் படுக்கையில் சுருண்டு கொண்டு மாலதியின் மனம் அனலிடைப் புழுவாக துடிக்க ஆரம்பித்தது. வலைப்பின்னலாக நடந்து முடிந்து போன சில சம்பவங்கள் அவளது மனதை நெருடத் தொடங்கியது.

அவளது அருமைப்புதல்வன் ஆதவனுக்கு திடீரென ஏற்பட்ட ஆசைதான் இத்தனை விபரீதத்துக்கும் காரணமாகி விட்டது.

அம்மா! என்ரை பிரண்ட்ஸ் எல்லாரும் சைக்கிள்

ஓடித்திரியினம். எனக்கும் ஒன்று வேண்டித்தாங்கோ."

மகனது கெஞ்சும் முகம் தாயினது மனத்தில் பச்சாதாபத்தை ஏற்படுத்த அவள் கணவன் சிவரூபனை அணுகினாள். அவதானம் நிறைந்த சிவரூபனுக்கு அது அறவே பிடிக்கவில்லை.

"ஆதவனுக்கு இப்பதானே பத்து வயதாகுது. அதுக்குள்ள இப்ப சைக்கிளுக்கு என்ன அவசரம். அவனுடைய தேவைகளுக் கெல்லாம் நான்தானே கொண்டு திரியுறன். பிறகென்ன... அவன் சின்னப்பிள்ளை. விபரீதம் தெரியாமல் கேக்கிறான் என்றால் உமக்கு அறிவு எங்கை போயிட்டுது."

பொரிந்து தள்ளிய கணவனை எப்படியோ சம்மதிக்க வைத்து ஒரு சின்ன சைக்கிளை ஆதவனுக்கு வாங்கிக் கொடுத்ததில் முக்கிய பங்கு அவளுடையது தான்.

இப்போது குற்றவுணர்வு மாலதியின் மனதைத் குடைந்தது.

"அவர் சொன்ன புத்திமதியை நான் கேட்டிருக்கலாம். பிள்ளையின் சந்தோசம் தான் பெரிது என்று நினைச்சன்." பெண் புத்தி பின்புத்தி" என்று சொல்லுறது சரிதான் போலகிடக்கு. என்னுடைய வறட்டு பிடிவாதம் இப்ப பிள்ளையை உயிருக்குப் போராடுற நிலைமையில் கொண்டு வந்து விட்டிட்டுது."

வெதும்பிய இதயம் ஒரு கணம் விம்மித் தணிய, அடிவயிற்றிலிருந்து புரண்டெழுந்த பெருமூச்சொன்று வாயினூடு வெளியேறி காற்றுடன் கலந்தது.

ஆதவன் தனதுசைக்கிளில் ரியூசனுக்கு போய் வரத் தொடங்கினான். அந்த சின்ன சைக்கிளில் மகன் கம்பீரமாகப் போய் வருவதைப் பார்த்து தாய்மனம் பெருமிதமடைந்தது. ஆனால்... சிவரூபன் மட்டும் மகனை எச்சரித்தவாறே இருந்தான்.

"ஆதவன்! நீ ஒழுங்கையால போய் றோட்டில ஏறும் போது வலுகவனமாய் இருக்க வேணும். சைக்கிளால இறங்கி உருட்டிக் கொண்டு போய் தான் ஏற வேணும். கண்டபாட்டுக்கு தெருவில வாகனம் வரும். எக்கணம் இடிச்சுத் தள்ளிய போட்டுப் போயிடுவங்கள்."

அவனுடைய வாய்ச்சொல் ஒரு நாள் பலித்து விட்டது. வேகமாக வந்த மோட்டர் சைக்கிள் ஒன்று அவனை மோதித் தூக்கியெறிய அவன் அருகிலிருந்த மின் கம்பத்தில் பிடரி அடிபட்டு மூர்ச்சித்துப் போனான். விபரீதம் நடந்து இன்றுடன் ஐந்து

நாட்களாகி விட்டன. இன்னும் அவன் கண் திறக்கவில்லை.

அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அவன் மயங்கிய நிலையில் கிடக்க, சிவரூபனோ நடைப்பிணமாக அந்த வைத்தியசாலையே கதி என கதிகலங்கிப் போய் இருக்கிறான். மாலதி மட்டும் மூவ்வேளையும் தவறாமல் வந்து மகனைப் பார்த்து மனக்கலக்கத்தை கண்ணீராக வெளிப்படுத்தி விட்டுப் போகிறாள். அவள் கணவனது முகத்தை ஏறெடுத்துப் பார்ப்பதில்லை. குற்றவுணர்வினால் புழுங்கித் தவிக்கும் அவளிடம் பேச்சுக்கொடுக்க அவனும் முன்வருவதில்லை.

திடீரென காதுக்குள் கேட்ட அலைபேசி அழைப்பு அவளது சிந்தனையைச் சிதறடிக்க, நடுங்கும் கரங்களால் அலைபேசியை எடுத்தாள். கணவன் சிவரூபன் தான் அழைத்திருந்தான்.

தாறுமாறாக துடித்த இதயத்தைக் கையொன்றினால் பொத்திப்பிடித்தவாறு வாய் குழறியது.

“என்னப்பா சொல்லுங்கோ....”

“பிள்ளைக்கு சீரியஸ் போல கிடக்கு. பெரிய டொக்டர்ஸ் எல்லாம் வந்து போகினம். சொல்ல வேண்டிய கடமைக்காக எடுத்துச் சொல்லுறன். இதுக்குத்தானே ஆசைப்பட்டனீர்”

மனக்கிடக்கையை கொட்டி விட்டதுடன் நிறுத்தி விட்டான். மாலதிக்கு தலையெல்லாம் விறைத்துக் கொண்டு வந்தது. அரவம் கேட்டு அம்மா ஓடி வந்தாள். விஷயமறிந்து ஆட்டோவைப் பிடித்து மகளையும் அழைத்துக் கொண்டு வைத்தியசாலைக்கு விரைந்தாள். மாலதியின் மனமோ.... கணவனது குத்திக் காட்டிய வார்த்தைகளின் வீரியத்தினால் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சப்பட்ட ரணத்தின் வேதனையில் துடியாய் துடித்தது. பிள்ளையை இழந்து விடுவமோ என பெற்ற வயிறு புகைந்தது.

அந்த இக்கட்டான உணர்வுகளின் கொந்தளிப்பிலும் அவளது மனதில் மின்னலென ஒரு எண்ணம் தோன்றி மறைந்தது. “பிள்ளை யில்லாத உலகத்தில் நான் வாழக்கூடாது” மனம் திடங்கொண்டது.

அவர்களைக் கண்டதும் முதன் முறையாக சிவரூபன் வாய்விட்டு அழுதான். மாலதி பிரமை பிடித்தவள் போல் இருந்தாள். மாலதியின் அம்மா தான் மருமகனிடம் விசாரித்தாள்.

“பிள்ளையின்ர “பல்ஸ் ரேற்” குறைஞ்சு கொண்டு வருகுதாம். என்னவோ “ட்ரீட்மென்ற்” எல்லாம் நடக்குது. வெவ்வேறை டொக்டர்ஸ் எல்லாம் வந்து போகினம்.”

இப்போது மாலதி “ஓ” வென்று பெரிதாக விம்மினவள், சேலையின் தலைப்பை எடுத்து வாயை பொத்திக் கொண்டாள். மனமோ... இஷ்ட தெய்வங்களிடம் போய் சரணடைந்தது.

சுமார் இரண்டு மணி நேரம் அவர்கள் மூவரும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவிற்கு முன்னால் போடப்பட்டிருந்த வாங்கிலில் காத்திருந்தனர். மாலதி, மனதுக்குள் கந்தசஷ்டி கவசம் படித்தாள். பின்னர் கௌரி தோத்திரம் என வழிபாடு விரிவடைந்தது. மூவருக்கும் அந்த நேரத்தில் கடவுளிடம் இறைஞ்சுவதைத்தவிர வேறு வழி தெரியவில்லை.

திடீரென கதவு திறந்தது. மருத்துவர்கள் தீவிர சிகிச்சைப் பிரிவிலிருந்து ஒவ்வொருவராக வெளியேறினர். அவர்களது முகத்தை உன்னிப்பாக அவதானித்த சிவரூபனுக்கு மனதில் சிறிது தென்பு வந்தது.

“இற் இஸ் த மெடிக்கல் மிறாக்கில் என்னால நம்பவே முடியயில்லை”

இது பெரிய டாக்டரின் வாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகள்.

படபடக்கும் இதயத்துடன் அவர்களையே அந்த மூன்று முகங்களும் உற்று நோக்கிக் கொண்டிருக்க... அவர்கள் பின்னால் வந்த நர்ஸ் அவர்களிடம் வந்தாள்.

“அம்மா! உங்கட பிள்ளைக்கு நினைவு திரும்பி விட்டுது. பார்க்கிற தெண்டால் ஒவ்வொருவராய் போய் பார்த்து வரலாம். ஆனால் ஒன்று கனக்க கதைகேட்டு பிள்ளையை “டிஸ்டேர்ப்” பண்ணக் கூடாது.”

மாலதிக்கு வயிற்றில் பால் வார்த்தது போல் இருந்தது. மற்றவர்களை முந்திக்கொண்டு உள்ளே ஓடினாள். மகனது கட்டிலின் முன் போய் நின்றவள், அவனது தலையைத் தடவினாள்.

கண்களை மூடி சோர்ந்து போய்க்கிடந்த ஆதவன், மெதுவாக கண்களைத் திறந்தான்.

அ...ம்....மா!

காதுக்குள்ளிலிருந்து ஈனமாக குரல் ஒலிப்பது போலிருந்தது. ஆதவனின் குரல் கேட்ட மாத்திரத்தில் இதயத்தை கவ்விப் பிடித்திருந்த சோகமெல்லாம் பனித்துகளாய்ச் சிதறி மறைய விழிநீர் சொரிந்து விக்கித்து நின்றாள், மாலதி.

# மனக்கண்

*கார்த்திகை மாதத்து காலைப்பொழுது. இதமான குளிர்காற்று தழுவிச் சென்றதால் அனைத்து மாந்தரதும் மேனிகள் ஒரு தரம் புல்லரித்துச் சிலிர்த்தன. இதற்கு ஆனந்த லட்சுமியின் மேனிமட்டும் விதிவிலக்கா. . . . என்ன!*

*"சரசு! சரியாய்க் குளிருது."*

*பற்கள் கிடுகிடுக்க, தன்னைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்த சரசுவிடம் முறையிட்டான்.*

*"குளிருரத்துக்கு நான் என்னம்மா செய்ய அளவான சுடுதண்ணியிலதான் வார்க்கிறன்."*

*சரசு சொன்ன சமாதானம் ஆனந்தலட்சுமிக்கு பிடிக்கவில்லை.*

*"நீ மளமளவென்று வார்த்துப் போட்டு ஈரத்தை துடைச்சு விடு."*

*அதிகார தோரணையில் கூறினாலும் அதில் அன்பு கலந்திருந்தது. சரசு அவளைக் குளிப்பாட்டி, உடை மாற்றி விட்டு , சக்கர நாற்காலியில் வைத்து அவனது அறைக்கு அழைத்து வந்தான்.*

*நான்கு மாதங்களுக்கு முன்னர் வரை ஆனந்த லட்சுமியும் மற்றவர்களைப் போல் நன்றாக நடமாடித் திரிந்தவள் தான். எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் அவளுக்கும் சோதனை வந்தது. திடீரென மயக்கம் போட்டு விழுந்தவளை, வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அங்கே... அவளை தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்து வைத்திய நிபுணர்களின் கண்காணிப்பில் சிகிச்சை அளித்தனர்.*

*"மாமி நல்லாய்த்தானே இருந்தவ. திடீரென்று அவவுக்கு ஏன் இப்பிடி வந்தது?"*

*மருமகள் சொல்லி அங்கலாய்த்தாள். பேயறைந்த முகத்துடன் மகன்சிகிச்சைப் பிரிவுக்கு வெளியில போட்டிருந்த வாங்கில் அமர்ந்திருந்தான். குழம்பிடக்கிடந்த அவனது மனமோ நிலை கொள்ளாமல் தவித்தது.*

*கோமா நிலையிலிருந்து ஆனந்தலட்சுமி மீண்ட போது அவளது வலது கையும், காலும் இயக்கமின்றிக்கிடந்தன. அனைவரும் அவளது நிலை கண்டு மனம் நொந்தனர். சிகிச்சை தொடர்ந்து நடைபெற்று, ஒரு வாரத்தின் பின் அவள் வீட்டிற்கு வந்தாள். அவளால் நடமாட முடியாததால் அவள் தனது அறையினுள் உள்ள கட்டிலில் சிறைப்பட்டு வாழவேண்டிய அவலநிலை ஏற்பட்டு விட்டது. அவளது மகன் சந்திரன் அவளைப் பராமரிப்பதெற்கென சரசுவை ஒழுங்கு பண்ணியிருந்தான். படுக்கையே தஞ்சமென்றிருப்ப வளுக்கு யாராவது அலைபேசியில் தொடர்பு கொண்டு கதைத்தால் சரி மற்றும் வேளைகளில் ஏதாவது கதைப்புத்தகம், சஞ்சிகைகள் கைக்குக் கிடைத்தால் வாசிப்பான். அவ்வளவுதான் அவளது பொழுதுபோக்கு.*

*இரவு வேளைகளில் அவளுடைய அருமைப் பேரன் குமரன் அலைபேசி மூலம் தொடர்பு கொண்டு சுமார் அரை மணித்தியாலம் வரை கதைப்பான். அவனுடைய அந்த அழைப்பிற்காக நாளெல்லாம் காத்துக் கிடப்பாள், ஆனந்த லட்சுமி. இருவருக்குமே பரஸ்பரம் ஒருவர் மீது மற்றவருக்கு அத்தனை பாசம். டாக்டரான குமரன் முன்பு இங்குதான் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றினான். இப்போது அவன் மேற்படிப்பு விடயமாக கொழும்பிற்கு மாற்ற மெடுத்துக் கொண்டு போயிருக்கிறான். அவன் மட்டும் பக்கதி லிருந்தால் போதும்,அவளுக்கு எந்தவித மனக்குறையும் இருக்காது.*

*ஆனந்தலட்சுமியின் இளமைக்கால வாழ்க்கை ஆனந்தமய மானதுதான். கண் நிறைந்த கணவர். ஆணொன்றும், பெண்ணொன்றுமாக இரு குழந்தைகள். மகன் சந்திரன் ஒரு பொறியியிலாளர். மகள் மீனா தனது கணவருடன் ஆஸ்திரேலியா சிட்னியில் போய் அங்கு குடியேறிவிட்டான். ஆனந்தலட்சுமியும் கணவரும் தனித்தே வாழ்ந்து வந்தனர். நான்கு வருடங்களின் முன் கணவர் காலமாகிய பின் அவள் மகனுடன் தங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. மகன் வழி பேரப்பிள்ளைகளான குமரன், லவன், சிந்து மூவரும் அப்பம்மா மீது அளவு கடந்த பாசம் வைத்திருந்*

தார்கள். அவற்றுள் குமரன் தன் உயிராகவே அப்பம்மாவைக் கருதினான்.

"அம்மா! சாப்பாடு எடுத்துக் கொண்டு வரட்டுமா?"

சரசு கேட்ட போது ஆனந்தலட்சுமி சொன்னாள்.

"சரசு! நான் கொஞ்சம் பொறுத்துச் சாப்பிடுறன். அதுக்கிடையில் நீ போய் என்னுடைய உடுப்புகளை அலசிப் போட்டிட்டு வந்திடலாம். என்ன!...."

சரசு போய்விட்டாள். ஆனந்தலட்சுமி கண்களை இறுக மூடிக்கொண்டு மனதுக்குள் கந்தசஷ்டி கவசத்தை சொல்லத் தொடங்கினாள். முருகப் பெருமானுடன் மனதால் ஒன்றிப் போனவளுக்கு நேரம் போனதே தெரியவில்லை. கவசத்தைச் சொல்லி முடிந்ததும் கண்களைத் திறந்தாள். சரசு இன்னும் வரவில்லை. வந்திருந்தாலும் அவளது நிஷ்டையைக் குழப்பும் வழக்கம் அவளுக்கில்லை.

திடீரென வீட்டில் பெரிய ஆரவாரம் கேட்டது. என்னவென்று அறிய அவளுக்கும் பெரும் ஆர்வம் தான். ஆனாலும் என்ன செய்வது. அவளால் தான் எழுந்து நடக்க முடியாதே. அவளது மன அங்கலாய்ப்பபைப் புரிந்து கொண்டவள் போல் பேத்தி சிந்து அவளது அறைவாசலில் வந்து எட்டிப் பார்த்து, "அப்பம்மா பெரியண்ணா வந்திருக்கிறான்." என்று சொல்லி விட்டுப் போனாள்.

ஆனந்தலட்சுமிக்கு உள்ளம் குளிர்ந்தது. உடனேயே பேரனைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் உந்தித் தள்ளியது. எனினும் அவனாகவே என்னைத் தேடி வரட்டும் என நினைத்தவள் தனது மனதைக் கட்டுப்படுத்தி அவனது வரவுக்காகக் காத்திருந்தாள். நிமிடங்கள் கரைந்தனவே தவிர குமரனைக் காணவில்லை. அவளது மனமோ புழுங்கித் தவித்துக்கொண்டிருந்தது. இதற்கிடையில் சரசு உணவுத்தட்டுடன் வந்து விட்டாள்.

"சரசு! உதை மேசையில வைச்சு மூடிவிடு. குமரன் வந்திருக்கிறானாம். அவனைப் பாத்திட்டுச் சாப்பிடுறன்."

"சரியம்மா" என்று சொல்லிவிட்டு சரசு அப்பால் நகர்ந்தாள். நிமிடங்கள் கரைந்தனவே தவிர குமரனைக் காணவில்லை. ஆனந்தலட்சுமியின் மனதில் விரக்தி உருவானது.

"ஓ... முன்பு போல் நான் நடமாடித் திரிஞ்சால் குமரனை வாசலிலேயே போய் வரவேற்றிருப்பன். இப்ப தான் நான்

நடக்கேலாத முடமாகிப் போயிட்டனே. இனி எனக்கு இவ்வளவு தான் மரியாதை."

ஆற்றாமையின் வெளிப்பாடாக அடிவயிற்றிலிருந்து பெருமூச்சொன்று உருவாகி வாயினூடு வெளியாகி காற்றுடன் கலந்து சங்கமமாகியது.

"அப்பம்மா..."

ஆரவாரத்துடன் அவளை அழைத்தவாறே வந்த குமரன் இறுகக்கட்டி தழுவிக் கொண்டான்.

"என்ரை ராசா! என்ரை குஞ்சு!"

அவளும் உணர்ச்சி வசப்பட்டவளாய் அவனை உச்சி மோந்து தனது பாசத்தை வெளிப்படுத்திக் கொண்டாள்.

"அப்பம்மா! நான் உங்களிட்ட எத்தினை தரம் சொன்ன நான். பிறசர் குளிசைகளைத் தவறாமல் போடுங்கோ என்று . பாத்தியளோ பிறசர் கூடித்தானே "ஸ்ரோக்" வந்தது. என்ரை பேச்சைக் கேட்டிருந்தால் இப்பிடி வந்திருக்குமே"

"சரி ராசா அதைவிடு. அங்கத்தை சாப்பாடு உனக்கு ஒத்துக் கொள்ளேல்லையே. ஏன் இப்பிடி மெலிஞ்சு போயிருக்கிறாய்."

கலகலவென்று சிரித்தான் குமரன்.

"கவலைப் படாதையுங்கோ அப்பம்மா. அதுக்காகத் தானே அம்மா எனக்கு அவசரமாய்க் கலியாணம் செய்து வைக்கிறா. பிறகு பாருங்கோவன் ஐயா எப்பிடிக் கொழுத்து வாறனெண்டு."

இருவரும் வாய்விட்டுச் சிரித்தனர்.

"அப்பு சாப்பிட்டிட்டியே ராசா?"

"இல்லை அப்பம்மா. நான் வந்த உடன குளிக்கப் போயிட்டான். குளிச்சாத் தானே உங்களடிக்கு வரலாம். நானே ஒரு வைரஸ் காவியாகவிருந்து உங்களுக்கு கொரோனாவை த் தந் திட்டால் ... பேந்து நீங்கள் என்ர கலியாணத்தையும் பாக்காமல்...."

"மண்டையைப் போட்டிடுவன் என்று சொல்லுறியோ.. நீ ஒண்டுக்கும் பயப்பிடாதை. நான் உன்ரை குழந்தை குஞ்சுகளைப் பாக்காமல் லேசில சாகமாட்டன்."

பேரனின் வார்த்தையைக் குறுக்கறுத்து தன் மனதிலுள்ள ஆசையைக் கொட்டினாள், ஆனந்தலட்சுமி.

அவர்களுக்கிடையில் சரசு வந்து நின்றாள்.

“தம்பி! உங்களை சாப்பிட வரச் சொல்லி அம்மா சொல்லி விட்டாங்க.”

சொன்னவள் ஆனந்தலட்சுமி பக்கம் திரும்பி,

“அம்மா! உங்களுக்கும் ஊட்டி விடட்டுங்களா. நேரம் ஒன்பது மணியாகப் போகுது.” என்றாள். இதைக் கவனித்த குமரன், சரசுவிடம்இருந்து உணவுத்தட்டை வாங்கிக் கொண்டான்.

“இன்றைக்கு நான்தான் அப்பம்மாவுக்கு ஊட்டி விடுவன். எத்தனை நாள் நீங்கள் எங்களுக்கு ஊட்டி வளர்த்த நீங்கள்.”

குமரன் உணவை ஊட்ட ஆனந்தலட்சுமி வாயை “ஆ” வென்று காட்டி வாங்கிச் சாப்பிட்டாள். அவளுக்கு உள்ளம் குளிர்ந்தது.

“அப்பம்மா! நாங்கள் சின்னனாயிருக்கேக்க நீங்கள் நிறையக் கதைகளெல்லாம். சொல்லித்தான் உணவு ஊட்டுறனீங்கள். இப்ப... நான் என்ன கதையைச் சொல்லுறது?”

உள்ளத்தின் உவகைச் சிரிப்பாக வெளிப்பட்டது.

வழமையாக இரண்டு தோசைகளைச் சாப்பிடும் ஆனந்த லட்சுமி அன்று பேரனின் கையால் மூன்று தோசைகளை வாங்கிச் சாப்பிட்டுவிட்டாள். இருவருக்குமே அதில் மனநிறைவு.

கலகலப்பான பொழுதுகளாக நாட்கள் நகர்ந்தன. அன்று குமரனுக்கு திருமண நாள். வீட்டில் அனைவரும் கல்யாண மண்ட பத்துக்குபுறப்பட்டு விட்டனர். குமரன் புறப்படுமுன் அப்பம்மாவின் காலில் வீழ்ந்து ஆசி வாங்கினான். ஆனந்தலட்சுமியும் சரசுவும் வீட்டில் தனித்து விடப்பட்டனர். புறப்படும் போது குமரன் சொல்லிச் சென்றது மட்டும் அவளது காதுகளில் ஒலித்துக் கோண்டேயிருந்தது.

“அப்பம்மா! நானும் சாருவும் திருமணக் கோலத்திலேயே வந்து உங்களிட்டை ஆசீர்வாதம் வாங்குவம் நீங்கள் கவலைப் படாமல் இருங்கோ.”

ஆனந்தலட்சுமியின் மனமோ கட்டுக்கடங்காமல் அலை பாய்ந்து கொண்டிருந்தது. கண்களை மூடியவாறு படுத்திருந்தாள், அவள் அடிக்கடி அருகில் கிடந்த அலைபேசியை எடுத்து நேரத்தைப் பார்ப்பதும், பின்னர் கண்களை மூடி மனக்கண்ணில் தோன்றும்

*காட்சிகளை இரசிப்பதுமாக நேரம் போய்க்கொண்டிருந்தது. திடீரென கண்களைத் திறந்து அலைபேசியைப் பார்த்தார்.*

*நேரம் 11.30*

*இப்போதுதான் மணப்பெண்ணை மணவறைக்கு அழைத்து வருவார்கள். அப்போதுதான் சமய சடங்குகளை முடித்து சரியாக 12.30க்கும் 12.54க்கும் இடையில் தாலி கட்ட ஏதுவாக இருக்கும். மனம் கணக்குப் போட்டுக்கொண்டது.*

*சரியாக ஒரு மணிக்கு சரசு வந்து முன்னே நின்றாள். ஆனந்தலட்சுமி கண்களை மூடியவாறு மனத்திரையில் தோன்றிய காட்சிகளில் லயித்திருந்தனர்.*

*"அம்மா!..."*

*"ம்!..."*

*சரசுவின் அழைப்புக்கு செவி சாய்த்தவளிடம் மெதுவாக அவள் கோரிக்கை விடுத்தாள்.*

*"அம்மா! நேரம் ஒரு மணியாகிவிட்டது. சாப்பாடு எடுத்து வரட்டுமா?"*

*அவளிடம் சீறி விழுந்தாள், ஆனந்தலட்சுமி.*

*"இப்பதான் பொம்பிளை மாப்பிள்ளைக்கு அட்சதை போட்டு ஆசீர்வதிக்கத் தொடங்குகினம். இப்ப சாப்பாட்டுக்கு என்ன அவசரம்?"*

*ஆனந்தலட்சுமியின் மனக்கண்ணில் ஓடிக்கொண்டிருக்கும் காட்சிகைள் பற்றிய விபரம் அந்தப் பேதைக்குத் தெரிய நியாய மில்லை. அவள் துணுக்குற்று நின்றாள்.*

# பித்து

*நாளைய பொழுது விடிந்தால் தீபாவளி. அதுவும் ஓய்வுபெற்ற ஆசிரியரான ராமகிருஷ்ண ணனின் இளையமகள் பானுவுக்கு இது தலைதீபாவளி.*

*முப்பத்தைந்து வருடங்களாக ஊரிலுள்ள பிள்ளைகளுக்கெல்லாம் பாடம் சொல்லிக் கொடுத்த வாத்தியாருக்கு முப்பது வருட தாம்பத்திய வாழ்க்கை யில் கிடைத்தது மூன்று பிள்ளைகள் மட்டும் தான். தவிர அவரால் சம்பாதித்த பணத்தை மீதப்படுத்த முடியவில்லை. காரணம் வீட்டு வாடகை போக, உயர்ந்து விட்ட விலைவாசியால் வாழ்க்கைச் செலவும் அதிகரிக்க அவரது சம்பளப்பணம் குடும்ப வண்டியை ஓட்டவே போதாமல் இருந்தது.*

*அவரது மனைவி காமாட்சி ஒரு சாமர்த்திய சாலி. ராமகிருஷ்ணன் குடும்பத்தின் முழுப் பொறுப்பையும் அவளிடமே விட்டுவிட்டார். அவரிடமும் எதுவித தீயபழக்கங்களும் இல்லை. தானுண்டு தனது தொழிலுண்டு என காலத்தைக் கழித்து வந்தவர்.*

*அவர்களது மூத்த மகன் ராகவன். அவனைப் படிக்க வைத்து வங்கியொன்றில் முகாமையாளராக நல்ல உத்தியோகத்தில் இருக்கிறான். மகனுக்கு வேலை கிடைத்ததும் ராமகிருஷ்ணனும் காமாட்சியும் தங்களது பளு குறைந்துவிட்டது மகன் குடும்பச் சுமையைத் தாங்குவான் என பகற்கனவு கண்டதுதான் மிச்சம்... அவனோ.. தனது வங்கியில் வேலை பார்க்கும் மைதிலி என்ற பெண்ணை திருமணம்*

*செய்யப் போவதாக ஒற்றைக்காலில் நின்று பிடிவாதம் பிடித்தான்.*

*அவனது கோரிக்கைக்கு ராமகிருஷ்ணன் இறங்கி வர அடியோடு மறுத்து நின்றார். காமாட்சி அவனுக்கு அனுசரணையாக நின்றாள்.*

*"ஏங்க... அது அவன் வாழப்போற வாழ்க்கைங்க. அவன் விருப்பத்துக்கு நாங்க தடைபோடக் கூடாதுங்க."*

*சுற்றுச் சிந்தித்த ராமகிருஷ்ணன், மனைவியின் கூற்றை ஏற்றுக்கொண்டார். ஒரு சுப முகூர்த்தத்தில் அவர்களது திருமணம் நடந்தேறியது. திருமணமானதும் அவர்கள் தனிக்குடித்தனம் போய்விட்டனர்.*

*பெண்கள் இருவரையும் கரைசேர்க்க வேண்டிய பொறுப்பு அவர்களுடைதாயிற்று. தீவிர முயற்சியின் பயனாய் பெண்களுள் மூத்தவளான மாலதிக்கு ஒருவரன் அமைந்தது. மாப்பிள்ளை ஒரு தனியார் கம்பனியில் குமாஸ்தா. இருந்த போதிலும் பிள்ளையைப் பெற்றவர்களின் கெடுபிடி பெண்வீட்டாரை திணறடித்தது. அதனை சகிக்க முடியாமல் ராமகிருஷ்ணன் தடுமாறிய போது, காமாட்சி அவருக்கு தென்பளித்தாள். கையில் சேமித்து வைத்திருந்த தொகை யுடன் கடன்பட்டு மாலதியை ஒருவாறு கரைசேர்த்து விட்டனர்.*

*ராகவனும் மற்றைய உறவினர்கள் போலவே கல்யாணத்திற்கு வந்து போனான். காமாட்சி அழுத்தக்காரி. அவனிடம் எதுவித உதவியும் கேட்கவில்லை. மகனையும் மருமகளையும் உபசரித்து அனுப்பி வைத்தாள்.*

*ராமகிருஷ்ணன் ரிட்டயர் ஆனபோது கையில் கிடைத்த தொகையை வைத்து, விரயமாக்க காமாட்சி விரும்பவில்லை. "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்" என்ற பழமொழிக் கிணங்க இளையமகன் பானுவுக்கு வரன் தேடத் தொடங்கிவிட்டாள். ராமகிருஷ்ணனுக்கு அதில் அவ்வளவு இஷ்டமில்லை.*

*"ஏன் அவசரப்படுகிறாய் காமாட்சி. பானு இன்னமும் குழந்தை மாதிரியே இருக்கிறாள்."*

*"பானு வேணும்னா உங்களுக்கு குழந்தையாய் இருக்கலாங்க. "பருவத்தே பயிர் செய்" என்பது முதுமொழிங்க. நம்ப கையில பணம் இருக்கும் போது அத வைச்சு வேடிக்கை பாக்கக் கூடாதுங்க. நமக்கு ஏத்த வரனா பாத்துட வேண்டியதுதான்.*

*காமாட்சியின் பேச்சுக்கு மறுபேச்சு பேசத் தெரியாதவர்*

ராமகிருஷ்ணன். மௌனத்தைத் தழுவிக் கொண்டார். பானுவுக்கு அமைந்த வரன் ஒரு ஆசிரியர். மாமனாரைப் போல குணவியல்பு கொண்டவன். முற்போக்குக் கொள்கைகளைப் பின்பற்றுபவன். வரதட்சணை ஏதும் கேட்கவில்லை. "உங்களது பெண்ணுக்கு நீங்கள் விரும்பியதைக் கொடுக்கலாம்" என்று ஒரே வார்த்தையில் சொல்லி விட்டான்.

கடந்த பங்குனி மாதத்தில் அவர்களது திருமணமும் இனிதே நடந்தேறி விட்டது. பானுவும் கணவனது வீட்டுக்கு வாழப் போய் விட்டாள்.

ராமகிருஷண்னனும் காமாட்சியும் பிள்ளைகளைக் கரை சேர்த்துவிட்ட நிம்மதியுடன் தனியாக வாழவேண்டியதாயிற்று. கணவனது பென்ஷன் பணம் அவர்களது சீவியத்துக்கு போதுமான தாக இருந்தது. எனவே, சுமுகமாக காலம் கழிந்து கொண்டிருந்தது.

அந்த சமயத்தில் தான் தீபாவளி பண்டிகைக்கு குடும்பத்தோடு வர இருப்பதாக மாலதி அறிவித்திருந்தாள். பண்டிகை நெருங்கி விட்டதை அப்போது தான் காமாட்சி உணர்ந்தாள்.

இளையவள் பானுவுக்கு இது தலைத்தீபாவளி ஆயிற்றே. மாப்பிள்ளையையும் பெண்ணையும் அழைத்து அவர்களுக்கான சீர் மரியாதை செய்ய வேண்டுமே என மனம் பேதலித்தது. பென்ஷன் பணத்தில் சிறு சேமிப்பு கையிலிருந்தாலும் அது செலவிற்கு இம்மியளவும் போதாது. எவரிடமாறு கடன் பட்டு செலவை ஒப்பேற்றினால் பின்னர் கடனை அடைத்துவிடலாம் என மனம் சொல்லியது.

மகன் ராகவனிடம் அவர்கள் இதுவரை எந்த உதவியையும் கோரியதில்லை. இப்போது மட்டும் என்ன. கடனாக ஒரு இருபத்தையாயிரம் ரூபாயை வாங்கினால் ஒரு வருடத்திற்குள் திருப்பிக் கொடுத்து விடலாம் என எண்ணினான். உடனே கணவரிடம் கலந்து ஆலோசித்தாள்.

"காமாட்சி! இதுவரைக்கும் நீ சொன்னது எதுக்குமே நான் மறுப்பு சொல்லியிருக்கேனா. ராகவன் கிட்ட கேட்டுப்பார்."

மகனிடம் கடன்கேட்கும் பொறுப்பையும் அவர் காமாட்சி யிடமே விட்டுவிட்டார். அன்று மாலையே காமாட்சி மகனிடம் அலைபேசியில் தொடர்பு கொண்டு விடயத்தை வெளியிட்டாள்.

"அம்மா! நான் வேலை விஷயமா நண்பர் ஒருவரை

*சந்திக்கிறதுக்காக போய்க்கொண்டிருக்கிறேன். இரவு வீடு திரும்பிய தும் சாவகசமாக பேசிக்கலாம்.”*

*போனை கட் பண்ணி விட்டான், ராகவன் காமாட்சி நம்பிக்கையுடன் மகனின் அழைப்புக்காக காத்திருந்தாள்.*

*அங்கே….*

*ராகவன் வீட்டில் மைதிலியின் வாய் ஓங்கியிருந்தது.*

*“அம்மா கேட்டுடாங்களேன்னு பணம் தர்றேன்னு சொல் லிடாதீங்க… அவங்க திருப்பி தாறாங்களோ.. என்னவோ… நமக்கு சேரும்படியா உங்க அப்பா என்ன ஆஸ்தி சேர்த்து வச்சிருக்கார்? வீடு, நிலம் ன்னு ஏதாச்சும் இருக்கா?”*

*படபடவென்று பொரிந்து தள்ளிய மைதிலியைப் பார்த்து, “சரிமைதிலி” தலையை ஆட்டினான், ராகவன்.*

*அன்று இரவே அம்மாவுடன் தொடர்பு கொண்டு தன்னிடம் கையில் பணம் இல்லை என்று சொல்லி கையை விரித்துவிட்டான். காமாட்சி ஏமாற்றத்தை வெளியில் காட்டிக் கொள்ளாவிட்டாலும் அவளது ஆழ்மனதில் ஒரு முள் தைத்துவிட்ட வேதனை “சுள்”ளென்று வலிக்கத்தான் செய்தது.*

*எப்படியோ காமாட்சி தான் விரும்பியதை சாதித்து விட்டாள். பிள்ளைகள் மூவரையும் குடும்பத்தோடு அழைத்து பண்டிகையை சிறப்பாக கொண்டாட வேண்டும் என்பது அவளது விருப்பம்.*

*பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் என வீடு நிறைந்திருந்தது. காமாட்சிக்கு நிலை கொள்ளவில்லை. பிள்ளை களுக்குப் பிடித்த பட்சங்களைச் செய்ய முனைந்தவளது மனதில் ஒரு தடுமாற்றம். இம்முறை பானுவின் மாப்பிள்ளை அவர்களது பண்டிகை திருநாளுக்கு புது வரவாயிற்றே. அவருக்கு என்ன பலகாரம் பிடிக்கும் என அறிய முற்பட்டவளாய் பானுவைத் தேடினாள். மாலதி, மைதிலி குழந்தைகள் எல்லோரும் கூடத்தில் அமர்ந்து கலகலப்பாக ஏதோ செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் பானுவைக் காணோம்.*

*வீட்டின் முன்பகுதியை எட்டிப் பார்த்தாள். ஆண்கள் அங்கு கூடியிருந்து அரட்டையடித்துக்கொண்டிருந்தார்கள். காமாட்சி தொல்லைப்புற பக்கமாகப் போய் குரல் கொடுத்தாள்.*

*பானு!… பானு!!…*

“என்னம்மா ! கூப்பிட்டீர்களா?”

கிணற்றுக் கட்டின் மீது அமர்ந்திருந்தவாறே புத்தகம் ஒன்றில் மூழ்கியிருந்தாள், பானு.

“நீ மட்டும் தனியாக இருந்து என்னடி செய்கிறாய்?”

“அது வந்து... அம்மா உன்னுடைய புத்தக அலமாரியைத் திறந்து பார்த்தேனா...” பொன் விலங்கு நாவல் கண்ணில் பட்டது. அதைத்தான் எடுத்து வந்து வாசித்துக் கொண்டிருக்கிறேன்.”

“எத்தனை தரம் தான் இந்த நாவலை வாசிப்பாய்?”

அலுத்துக் கொண்டாள், காமாட்சி.

“என்னைப் பொறுத்தவரையில் நாவல் இல்லையம்மா. உயிரோட்டமான உணர்வுகளால் பின்னி பிணையப்பட்ட பாத்திரங்களின் இதயத்துடிப்பு. காலத்தால் அழியாத படைப்பு”

“சரிடி. புத்தகம் கவனம். ராகவன் , மாலதியோட வாண்டுப் பசங்க கையில் அம்புட்டுத்துன்னா.. .அவ்வளவு தான்.”

“எனக்குத் தெரியாதாம்மா. இந்தப் புத்தகங்கள் எல்லாமே உன்னோட உசிர் நாடின்னு.”

“இல்லடி பானு. எங்கப்பா அந்தக் காலத்தில் தேடி பாது காத்து வைச்ச பொக்கிஷம். இதெல்லாம் தலைமுறை தலைமுறை யாய் போய் சேர வேணும் என்பது அவருடைய ஆசை. சரி அதை விடுடி. நான் பண்டிகைக்கு பலகாரம் பண்ணப் போறேன். உன்னோட மாப்பிள்ளைக்கு பிடித்தமானதைச் சொல்லு. பலகார “லிஸ்ற்“றிலை சேத்துக்குறேன்.”

பானு வாய்விட்டுச் சிரித்தவாறே கூறினாள்.

“அவருக்கு அதிரசம்ன்னா ரொம்பப் பிடிக்கும்மா”

“சரிடி. நான் நிறையவே பண்ணி வைக்கிறேன்.”

சொல்லிக் கொண்டே திரும்பி நடந்தாள், காமாட்சீ அவளுடைய மனதிலும் இப்போது ஒரு குறை தோன்றியது. எனக்குப்பிடிததமான “பொன்னியின் செல்வன்” நாவலை நீண்ட காலமாக வாசிக்கவில்லையே . பண்டிகை கழிந்து ஓய்வாக இருக்கும் போது வாசிக்க வேண்டும் என்பதுதான் அது.

கூடத்தில் குழந்தைகள் ஓடித்திரிந்து விளையாடும் கலகலப்பை விட நெய்யில் வறுத்தெடுத்த முந்திரிப் பருப்பின் வாசனை தான் மேலோங்கியிருந்தது. காமாட்சியும் மருமகள்

*மைதிலியும் மகள் மாலதியும் ஒரு பெரிய சில்வர் பாத்திரத்தின் முன் அமர்ந்திருந்து ரவா கலவையை உருண்டைகளாகப் பிடித்து லட்டுகளாக்கி மற்றொரு பாத்திரத்தில் நிறைத்துக் கொண்டிருந்தனர். பானுவை மட்டும் அங்கு காணவில்லை.*

*“மாலதி! .. மாலதி!”*

*கணவனது அழைப்புக் குரல் கேட்டதும் கையை உதறிக் கொண்டு மாலதி எழுந்து போனாள். காமாட்சி தலைகுனிந்தவாறே தான் செய்யும் காரியத்தில் ஒன்றிப் போயிருந்தாள். மைதிலியின் குரல் அவளை நிமிர்ந்து பார்க்க வைத்தது.*

*“அத்தை! என்ன பலத்த யோசணையில் இருக்கீங்க போல”*

*“ம்!...”*

*பெருமூச்சு ஒன்று உதிர்ந்தது.*

*“அதெல்லாம் ஒண்ணுமில்ல”*

*மழுப்பலாக வந்தது. பதில்.*

*“ஏன் அத்தை! நீங்க பண்டிகை செலவுக்குன்னு பணம் கேட்டப்போ தரல்லைன்னு உங்க புள்ளை மீது வருத்தம் இல்லையே?”*

*“சேச்சே! அதெல்லாம் கிடையாது. ராகவனோட குணம் எனக்குத் தெரியாதா... கையில பணம் இருந்தா தந்திருக்க மாட்டானா.. என்ன!”*

*காமாட்சி கையில் உருட்டிக் கொண்டிருந்த லட்டை பார்த்த வாறு கூறினாள். மைதிலியின் கண்களைப் பார்க்கும் திராணி இல்லாததே காரணம்.*

*“ஆமா அத்தை.. புதுசா வீடு வாங்கினதால கொஞ்சம் பணமுடை இருக்கத்தானே செய்யும்.”*

*காமாட்சி பதிலேதும் சொல்லவில்லை. அவர்கள் செய்து கொண்டிருந்த வேலை முடிந்து விட்டதனால், பட்சணத்தை எடுத்துக்கொண்டு உள்ளே போனாள்.*

*ஒரு வழியாக பலகார வேலைகள் அனைத்தும் முடிந்தன. “கொஞ்சநேரமாவது படுத்து கண்ணயர்ந்தால் தான் காலையில் சீக்கிரம் எழுந்து இருக்கும் வேலைகளைக் கவனிக்கலாம்.“ மனதிற்குள் நினைத்துக் கொண்டவளாய் காமாட்சி கூடத்தில் பாயை விரித்து படுத்துக்கொண்டாள். பட்டாசு வெடிக்கும் சத்தங்கள் அவளது*

செவிக்குள் நுழைந்து தூக்கத்தைக் கெடுத்தது. புரண்டு படுத்தவள் கண்களை மூடிக்கொண்டாள்.

அறைக்குள்ளிலிருந்து ராகவனது குரல் கேட்டது.

"மைதிலி! தூங்கீட்டியா?"

"இல்லைங்க. அத்தை பானுவுக்கு போலவே மாலதிக்கும் எனக்கும் ஒரே மாதிரியான பட்டுப் புடவை குடுத்திருந்தாங்க. அதைப்பத்தி தான் யோசிச்சுட்டிருக்கேன். பானுவுக்குத் தான் இது தலைத்தீபாவளி."

"ஆமா மைதிலி. அம்மா புது மாப்பிள்ளைக்கு எடுத்தது மாதிரியே எனக்கும் மாலதியோட மாப்பிள்ளைக்கும் பட்டு வேட்டி, சட்டை எடுத்திருக்காங்க. அது மட்டுமில்லையே. நம்ப குழந்தை களுக்கு தரமான துணிமணி வேற எடுத்திருக்காங்க. இதுக்கெல்லாம் பணம் ஏதன்னு தான் நானும் யோசிச்சு சிட்டிருக்கேன்."

"ஒருவேளை அவங்க கையில பணத்தை வைச்சுக்கிட்டுத்தான் நம்பளை சோதிச்சுப் பாத்திருப்பாங்களோன்னு சந்தேகமாயிருக்கு துங்க."

அவர்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டவாறே காமாட்சி கண்ணயர்ந்து போனாள்.

மறுநாட் பொழுது மங்களகரமாக விடிந்தது. ஆண்கள், பெண்கள் குழந்தைகள் என பாகுபாடின்றி அனைவரும் புத்தம் புது பட்டுப்புடவை சரசரக்க வீட்டினுள் வளைய வந்து கொண்டிருந் தனர். ராமகிருஷ்ணன் நூல் வேட்டியிலும் காமாட்சி செம்மஞ்சள் நிற நூல்புடவையிலும் காட்சியளித்தனர்.

பூஜையறை தீபங்களால் ஜொலித்துக் கொண்டிருக்க, அங்கு கூடியிருந்தவர்களின் மனங்களிலும் அதன் பிரகாசம் பிரதிபலித்தது. ராகவனால் மட்டும் இயல்பாக இருக்க முடியவில்லை. அவனது மனம் குறுகுறுத்துக் கொண்டிருந்தது. "எங்கள் எல்லோருக்கும் பேதம் ஏதுமில்லாமல் அம்மா மதிப்பளித்து பண்டிகையை சிறப்பாகக் கொண்டாட வழி சமைத்திருக்கிறாள். கேவலம் நான் குடும்பத்தில் மூத்தவனாகப் பிறந்தும் அவள் கைமாறாகக் கேட்ட தொகையை கொடுக்க இஷ்டமில்லாமல் மறுத்திருக்கிறேன். பெற்றமனம் பித்து பிள்ளை மனம் கல் என்பது என் விடயத்தில் உண்மையாகிவிட்டதே!"

பேதலித்த மனத்துடன் அவனும் குடும்பத்தவருடன்

இணைந்து இறைவழிபாட்டில் ஈடுபட்டான். வழிபாடு முடிந்ததும் அனைவரும் பிரசாதம் எடுத்துக் கொண்டனர். காமாட்சி குங்கு மத்தை எடுத்து நடு உச்சியில் வைத்த பின்னர் தனது தாலியை வெளியே எடுத்து அதற்கு குங்குமம் இட்டு விட்டதுடன் கண்களி லிலும் ஒற்றிக் கொண்டாள்.

அப்போது தான் ராகவன் கவனித்தான். அம்மா தாலியைக் கோர்த்து அணிந்திருந்த தங்கச்சங்கிலியைக் காணோம். பதிலுக்கு புது மஞ்சட்கயிறு அவளது கழுத்தை அலங்கரித்திருந்தது.

அவனுக்கு “சுருக்“ கென்றது.

உறுத்தும் உணர்வுகளை அவன் சீரணிக்க முயன்ற போது, அப்பாவும் அம்மாவும் தங்களிடம் ஆசீர்வாதம் பெற்ற பானுவின் மாப்பிள்ளையின் கையில் மோதிரம் போட்டுக்கொண்டிருந்தனர்.

# நதியோரத்து நாணல்கள்

*"விமலா! மாடியில "சுவீற்றி"யின்ரை ரூமில் "மேக் அப்" போடுற அம்மா இருக்கிறா. அவவுக்கு "கூல் டிரிங்க்ஸ்" கொண்டு போய்க் குடும்"*

*இது அட்வகேட் ராஜசுந்தரத்தின் மனைவி யான கமலாவின் உத்தரவு. எஜமானியின் குரல் கேட்டதும் சமையலறையில் சுறு சுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்த விமலா செய்த வேலையை அப்படியே விட்டுவிட்டு எழுந்து போனாள். குளிரூட்டியில் இருந்த மென்பானத்தை கிளாசில் ஊற்றி மாடிக்கு எடுத்துப் போனாள். அங்கே... அழகே உருவான சுவீற்றியின் முகத்தில் எதையோ வெல்லாம் பூசி அவளைப் பார்க்க அலங்கோலமாகவிருந்தது. அதைக் கண்ணுற்ற விமலா வுக்கு அவளையறியாமலே மனதில் ஒரு குமைச்சல்.*

*"இயற்கையான அழகை செயற்கையால் மெரு கூட்டுகிறார்களா... அல்லது சீரழிக்கிறார்களா?.."*

*"எங்களைப் போன்ற அன்றாடங் காய்ச்சி களுக்கு இந்த ஆராய்ச்சி தேவைதானா..."*

*மறுகணமே தன்னைச் சுதாகரித்துக் கொண்ட வளாய் "அம்மா! டிரிங்க்ஸ் எடுத்துக் கொள்ளுங்கோ" பணிவுடன் அவளிடம் நீட்டினாள்.*

*விலையுயர்ந்த காஞ்சீபுரம் சேலையொன்றை சுருக்கெடுத்து அயன் பண்ணிக் கொண்டிருந்தவள் திரும்பி விமலாவைப் பார்த்து "அந்த மேசையில வைச்சிட்டுப் போ" என்று சொன்னாள்.*

படியிறங்கி வந்த விமலாவின் மனதை முற்றிலு மாக அவளது அருமை மகள் வாணி நிறைத்திருந்தாள். சமையலறையை நெருங்கியதும் அவளது கவனமெல் லாம் சமையலிலே நிலைத்து விட்டது.

அன்று பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழா. அட்வகேட் ராஜசுந்தரத்தின் மகளான "சுவீற்றி" என பெற்றோரால் செல்லமாக அழைக்கப்படும் அஞ்சனாவிற்கு அன்று கலைமாணி பட்டம் கிடைக்கப் போகிறது. விழாவில் பங்கேற்பதற்கு அவள் தயாராகிக் கொண்டிருக்கிறாள். அதற்குத்தான் இந்த அலங்கார மெல்லாம்.

மகள் பட்டம் பெறும் மகிழ்ச்சியைக் கொண்டாட அட்வகேட்டின் மனைவி கமலா இன்று மதிய விருந்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறாள். விருந்துக் கான சமையல் பொறுப்பை விமலா விடம் ஒப்படைத்து விட்டு குடும்பத்தினர் அனைவரும் பார்வை யாளர்களாக பல்கலைக்கழக வளாகத்திற்கு செல்ல விருக்கின்றனர்.

விமலாவின் கைகள் கரட் கிழங்குகளைத் துருவிக் கொண்டிருக்கும் அதேவேளை றைஸ்குக்கரில் அரிசி வெந்து கொண்டிருக்கிறது. காஸ் அடுப்பொன்றில் உருளைக்கிழங்கு அவிய மற்றையதில் கத்தரிக்காய் பொரிந்து கொண்டிருக்க விமலா பம்பரமாய்ச் சுழல வேண்டிய அவசியத்தில் தனது மனதை அலைய விடாமல் ஒருநிலைப்படுத்தி துரித கதியில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறாள்.

"விமலா!"

எஜமானி அம்மாவின் குரல் கேட்டு செய் காரியத்தை அப்படியே விட்டுவிட்டு ஓடி வருகிறாள், விமலா.

"நேரமாகுது. நாங்கள் போட்டு வாறம். சமையல் முடிஞ்சதும் சாப்பாடு எடுத்து மேசைக்கு வைச்சு, எல்லாம் நேர்த்தியாய் இருக்க வேணும். விளங்கீச்சுதா?"

"சரி அம்மா"

தலையை ஆட்டினாள், விமலா. சற்று நிதானித்த கமலா மீண்டும் வாய் திறந்தாள்.

"மாமி அறைக்குள்ள படுத்திருக்கிறா. அடிக்கடி போய் அவவைப் பார்த்துக் கொள்ளும். என்ன!"

காரில் ஏறி அனைவரும் போய்விட்டனர். வெளிக்கதவைத் தாளிட்டு விட்டு வந்த விமலா தனது சமையல் வேலைகளில் கவனம்

செலுத்தத் தொடங் கினாள். கைகள் தாமாக இயங்கிக் கொண்டிருக்க மனதை அவளது மகள் வாணி முற்றாக ஆக்கிரமித்துக் கொண்டாள்.

பாவம் வாணி தகப்பன் இல்லாப்பிள்ளை. ஆனால் தகப்பன் உயிரோடு இருந்திருந்தாலும் அவளால் இந்நிலைக்கு வந்திருக்க முடியுமா என்பது சந்தேகம் தான். குடிபோதைக்கு அடிமையாகிய அவன் ஒரு பாரவூர்தியுடன் மோதி துடிதுடித்து உயிரிழந்த போதும் அவனிருந்த போதை நிலையினால் எதுவித தண்டனையுமின்றி அதைச் செலுத்தி வந்த சாரதி தப்பிக்க முடிந்தது. விமலா விதவை யானது தான் மிச்சம். அவன் உயிரோடு இருக்கும் வரை அடி உதை என்று அனுபவித்தது தவிர அவர்களது வாழ்வா தாரத்துக்கு எதையும் அவன் மிச்சம் வைத்து விட்டுப் போகவில்லை.

தாயையும் பிள்ளையையும் வயிற்றுப்பசி வாட்டி எடுத்தது. உறவினர்களும் அவர்களை கைகழுவி விட்டு ஒதுங்கிக் கொண்டனர். விமலா தீவிரமாக யோசித்தாள். இந்தப் பொல்லாத உலகத்தில் வாழ்வதை விட சாவதே மேல் என மனம் தீர்மானித்தது. ஒரே ஒரு கணம் தான். அவளது உள்ளுணர்வு விழித்துக் கொண்டது. ஒன்றுமறியாத இந்தப் பச்சைக்குழந்தை யையும் சாகடித்து நானும் உயிரை மாய்த்துக் கொள்வது கோழைத் தனமான செயல், மாறாக இந்த உலகத்து வாழ்க்கையை எதிர்நீச்சல் போட்டு வாழ்ந்து எனது பிள்ளையை நாலுபேர் போற்றுமளவிற்கு ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வந்து விட வேண்டும். இதை ஒரு சவாலாகவே ஏற்று நான் வாழப்போகிறேன்.

அவளது காதில் ஒரு குச்சுத்தோட்டை மட்டும் அவளது கணவன் விட்டு வைத்திருந்தான். துணிச்ச லுடன் மீண்டெழுந்தவள் அதை விற்றுப் பணமாக்கி னாள். பாடசாலைக்கு அருகில் முத்துலிங்கம் ஒரு தேநீர்க்கடை வைத்திருந்தார். அவரிடம் போய் கெஞ்சிக்கேட்டு சிற்றுண்டி பலகாரங்களைச் செய்து கொடுக்க முடிவெடுத்தாள். முதலில் மறுத்த முத்து லிங்கம், அவளது கையறுநிலை கண்டு சம்மதித்தார். ஆக விமலா ஒரு சிறு தொழிலைத் தொடங்கி விட்டாள். கடைக்குச் செய்யும் சிற்றுண்டியிலேயே அவர்களது வயிறும் வளர்ந்தது.

ஒரு நாள் சாம்பாருக்குத் தேவையான மரக்கறிகளை வாங்கி வர கடைக்குச் சென்றிருந்தாள். போகும் வழியில் ஆலடிச் சந்தியில் நின்றிருந்த ஒருவர் அவளது காதுபடவே கூறிக் கொண்டிருந்தார்.

“புருசன் செத்து ரெண்டு மாசம் கூட ஆகயில்ல. விமலாவைப்

பாத்தியே. மினுக்கிக் கொண்டு காலமை பின்னேரம் எண்டு பாக்காமல் உவர் முத்துலிங்கத் தாரின்ரை தேத்தண்ணிக் கடைக்கு போய் வாறாள். ஏதும் வில்லங்கமான தொடர்பு இருக்குமோ…”

மற்றொருவர் அவரது சந்தேகத்துக்கு துணை போனார்.

“ஓமடாப்பா நீ சொல்லுறதும் சரி தான். எனக்கொரு ஐமிச்சம் இருக்குது கண்டியோ. ஒரு வேளை இவள் தான் புருசனை வேகமாய் வந்த லொறியில தள்ளி விட்டிருப்பாளோ ஆர் கண்டது?”

சாராசமாகக் காதில் விழுந்த வார்த்தைகளால் விமலாவின் மண்டைக்குள் நெருப்பு சுவாலை விட்டு எரிவதுபோல் ஒரு குமைச்சல். மறுகணமே அவள் தன்னை சுதாகரித்துக் கொண்டாள்.

“இந்தப் பொல்லாத சமூகத்தை எதிர்த்து வாழ்ந்து காட்டத் தானே நான் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறேன். இப்படியான பழிச் சொற்களை நான் ஏன் பொருட்படுத்த வேண்டும்”

விமலா எதையும் கண்டு கொள்ளாதவளாய் நடந்து கொண்ட போதிலும் அவளையறியாமலே அவளது மனதில் ஒரு கீறல் விழதத்தான் செய்தது. “வாழ்ந்தாலும் ஏசும் தாழ்ந்தாலும் ஏசும் வையகம் இது தானடா” என்ற வரிகள் அவளது உள்ளுணர்வில் வந்து மோதி அவளது வலிக்கு ஒத்தடமாய் அமையும்.

ஒருவாறு வயிற்றுப் பசியை போக்கிக் கொண்டாலும், வாணியை படிக்க வைப்பதற்கு பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. வாணி ஐந்தாம் தரத்தில் படித்துக் கொண்டிருந் தாள். புலமைப் பரிசில் பரீட்சையை எதிர்கொள்வதற்காக அவளுடன் படித்த பிள்ளைகளின் பெற்றோர் அவர்களை பிரத்தி யேக வகுப்புகளுக்கு அனுப்பி படிக்க வைத்தனர். பாட சாலையில் நடக்கும் வகுப்புகளுக்கு மட்டுமே வாணி யால் போக முடிந்தது. அதற்கும் வந்தது சோதனை.

பரீட்சைக்கு இரண்டு கிழமைகளே இருந்தன. திடீரென்று வாணி காய்ச்சலால் பீடிக்கப்பட்டாள். துடி துடித்த விமலா அவளை அருகிலுள்ள வைத்திய சாலைக்கு அழைத்துக் கொண்டு போனாள். அவளைப் பரிசோதித்த மருத்துவர் அவளுக்கு “டெங்கு” என்று சொல்லி வைத்தியசாலையில் அனுமதிக்க, விமலாவும் அவளுடனேயே ஆறுநாட்கள் தங்க வேண்டியதாயிற்று தொழில் தடைப்பட்டாலும் வாணி குணமாகி வந்தாலே போதும் என விமலா ஏங்தினாள். ஒருவாறு கோயிலிருந்து விடுபட்ட வாணி எலும்பும் தோலுமாக வீடு வந்து சேர்ந்தாள்.

வெளியில் நடமாடத் தென்பில்லாததால் வீட்டில் இருந்த வாறே படித்தாள், வாணி. எப்படியும் தான் பரீட்சையில் சித்தியடைந்திட வேண்டும் என்ற ஓர்மம் அவளுக்கிருந்தது. பரீட்சையன்று மகளை அழைத்துப்போய் பரீட்சையை எழுத விட்டு விட்டு பாடசாலை வாசலில் காத்திருந்தாள், விமலா. பரீட்சை யின் முதற் பகுதி முடிந்ததும் மாணவர்கள் அனைவரும் வெளியே வந்து தம்மை ஆகவாசப்படுத்திக் கொண்டனர் பெற்றோர் சிலர் தமது பிள்ளைகளுக்கு மென்பானம், கேக், பிஸ்கட் என கொண்டு வந்து கொடுத்து அவர்களை உஷார்ப்படுத்தினர். விமலா கொடுத்த நெல்லுப் பொரித் தண்ணீரை வாங்கிக் குடித்த வாணி அப்போது சொன்னது இப்போதும் நினைவில் வருகிறது.

"அம்மா! நெல்லுப் பொரித் தண்ணி குடித்தது நல்ல தென்பாயிருக்குது நான் இரண்டாம் பகுதி சோதினையும் நல்லாய்ச் செய்வன், நீங்கள் கவலைப் படாதையுங்கோ"

கேட்ட விமலாவுக்கு நெஞ்சு வலித்தது. ஆனால்... பரீட்சைப் பெறுபேறு வெளியான போது மகிழ்ச்சி கொப்பளித்தது. எப்படியோ வாணி பரீட்சை யில் தேறி அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் சிறு உதவியைப் பெற முடிந்தது அந்த ஏழைத்தாய்க்கு மனவலிமையைத் தந்தது.

இப்படியாக பல கஷ்டங்களையும் தடைகளை யும் எதிர் நீச்சல் போட்டு சமாளித்துத் தான் இன்று வாணி வளர்ந்து நிற்கிறாள். அதிலும் அவள் ஏ.எல். படித்துக் கொண்டிருந்த போது நடந்த ஒரு சம்பவம் மறக்க முடியாதது.

மின் வசதியற்ற சிறுவீடு அவர்களுடையது. வாணி இரவு பகல் என்று ஓயாமல் படிப்பில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தாள். ஒரு நாள் இரவு அவள் மெழுகுதிரியை தலைமாட்டில் கொளுத்தி வைத்து விட்டு படுக்கையில் இருந்தவாறே படித்திருக்கிறாள். எப்படியோ சோர்வுற்றிருந்த அவளது உடல் நித்திரா தேவியிடம் தஞ்சமடைந்து விட்டது அறையின் மறு மூலையில் கண்ணயர்ந்திருந்த விமலாவின் நாசியில் ஏதோ புகைவாசனை உறுத்தவே திடுக்கிட்டு கண் விழித்தவள் அறையெங்கும் புகையைக் கண்டு வீறிட்டாள்.

அம்மாவின் அலறல் கேட்டு கண் விழித்த வாணி அதிர்ச்சியினால் பிரமை பிடித்து நிற்க, விமலாவே தீப்பிடித்தெரிந்த நோட்டுப் புத்தகங்களை பகீரதப் பிரயத்தனப்பட்டு அணைத்தாள்.

நடந்த அந்தச் சம்பவம் அவர்களை வெகுவா கப் பாதித்து

விட்டது. நம்பிக்கையையும் தளர்த்தி உத்வேகத்தையும் குறைத்து விட்டது. வாணிபுலம்பிக் கொண்டேயிருந்தாள்.

"அம்மா! நான் எவ்வளவோ கஷ்டப்பட்டு ரியூசனுக்குப் போற பிள்ளைகளிட்ட கெஞ்சி நோட்ஸ் வாங்கிக் கொண்டு வந்து படிச்சு குறிப்பெடுத்து வைச் சிருந்த நான். அந்தக் கொப்பிகள் தானம்மா எரிஞ்சது" விம்பிய மகளுக்கு விமலா அறிவுரை சொன் னாள்.

"பிள்ளை வாணி! உதுக் கெல்லாம் நீ சோர்ந்து போகக் கூடாது. என்னைப் பார். கொப்பர் எங்களை அந்தரிக்க விட்டிட்டுப் போகேக்க நாங்கள் அடுத்த வேளை சாப் பாட்டுக்கு வழியில்லாமல்த் தான் இருந்தம். என்னுடைய துணிவால யும் முயற்சியாலயும் நான் கஷ்டங் களை எதிர்த்துச் சமாளித்து இன்றைக்குச் சுமாராய் வாழ்ந்து கொண்டிருக்கிறம் நாங்கள் இன்னும் முன்னேற வேணும் என்ற ஆர்வத்தை நெஞ்சில பதியவை எல்லாம் உன்னால முடியும்"

அதிலிருந்து ஒருவாறு வாணி மீண்டெழுந் தாள்.

"ஸ்..."

சத்தம் கேட்டு நினைவுச் சூழலிலிருந்து விடுபட்டவளாய் விமலா சுறுசுறுப்படைந்தாள். நுரைத் தெழுந்த பருப்பு அடுப்பில் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. சட்டென அடுப்பைத் தணித்தவள் நினைவுகளை அலைபாய விடாமல் தடுத்து நிறுத்தி ஒரு நிலைப்படுத்தினாள். சமையல் மீது கவனம் திரும்பிய தும் நிதானமாகச் சமைக்கத் தொடங்கினாள்.

ஒருவாறு சமையலை முடித்து அடுப்பில் பாயாசத்தைத் துழாவிக் கொண்டிருந்த போது ஆரவாரத்துடன் கமலா குடும்பத்தினரும் அவர்கள் அழைத்திருந்த விருந்தினர்களும் வந்து சேர்ந்தனர். எல்லோருக்கும் மென்பானம் கொண்டு வருமாறு கமலா உத்தரவிட்டாள். விமலாவும் அதை எடுத்து வந்து அனைவருக்கும் பரிமாறினாள். கமலா பெருமையடித் துக் கொண்டிருந்தது விமலாவின் காதுகளில் விழுந்தது.

"பார்த்தீங்களே! இண்டைக்கு "கொன்வகேசன்" னுக்கு வந்திருந்த பொம்பிளைப்பிள்ளையளில எங்கட "சுவீற்றி" யின்ற காஞ்சீபுரம் தான் எடுப்பாய் இருந்தது. இல்லையே?"

"ஓம் அன்ரி நீங்க நல்ல கலர் தான் செலக்ட் பண்ணி இருக்கிறியள்"

*“அது சரி. கடைசியாய் ஒரு பிள்ளை வந்து “கோல்ட் மெடல்” வாங்கினது பாத்தியளே அன்ரி சரி யான சிம்பிளாய் ஒரு சாதாரண சாறி தான் கட்டி யிருந்தது”*

*“ஓ... நானும் கவனிச்சனான்” என்று கூறிய வளாய் விமலா சுவீற்றியிடம் அந்த பிள்ளையைப் பற்றி விசாரித்தாள். அவவோ அவவும் எங்கட “பாச்” தான் அவ்வளவா ஒருத்தரோடையும் சேர மாட்டா. தானும் தன்ரை பாடும், ஆனா... மூன்று வருசமும் அவதான் “பாச் ரொப்” பண்ணினவ. அது தான் அவ வுக்கு கோல்ட் மெடல்” கிடைச்சது.*

*“உண்மையில அந்தப் பிள்ளையைப் பெத்தவை அதிர்ஷ்டக் காரர் தான் குடுத்து வைச்சதுகள். ம்!...”*

*“சரியாய்ச் சொன்னீங்க அன்ரி. சுவீற்றி அந்தப் பிள்ளைக்கு என்ன பெயர்? கூப்பிடும் போது அவ தானிச்ச நான் நல்ல பெயராய் இருந் தது. மறந்து போனன் அதுக்கிடை யில”*

*“கலைவாணி”*

*விமலாவின் காதுகளிலும் அந்தப் பெயர் வந்து மோத,*

*“அது என்னுடைய மகள் தான்” என்ற வார்த்தை தொண்டை வரை வந்து வாய்க்குழிக்குள் அமிழ்ந்து போனது.*

*கண்களில் பனித்த நீர் பார்வையை மறைக்க மெய் மறந்து நின்றாள் விமலா.*

ஜீவநதி - மலரன்னை சிறப்பிதழ் - 2021

# கருமணி

*பங்குனி மாத்தது வெய்யிலின் உக்கிரம் தாங்க முடியாமல் கதிரை ஒன்றை முற்றத்து மாவின் கீழ் போட்டு அதில் அமர்ந்தவாறே அன்றை தினசரியை புரட்டிக்கொண்டிந்தார் ஓய்வுநிலை கணக்காளரான சிப்பிரகாசம்.*

*அவர் முன் பத்திரகாளியாய் உருவெடுத்து வந்து நின்றான், மனைவி பூரணி. அருகில் அரவம் கேட்ட தும், பத்திரிகையில் லயித்திருந்த சிவப்பிரகாசம் மெது வாக பத்திரிகையை விலத்திவிட்டு பார்வையைத் திருப்பினார். அங்கே... அவர் சற்றும் எதிர்பாராத விதத்தில் பூரணி பொரிந்து தள்ளத் தொடங்கினாள்.*

*"உங்களுக்குக் கொஞ்சமாவது சூடு சொறணை இருக்குதே. வீட்டில வாழாவெட்டியாக ஒரு பிள்ளையை வைச்சுக் கொண்டு எந்த நேரமும் ஒரு பேப்பர் படிப்பு. அப்பில அதில என்னத்தைத் தான் படிச்சுத் தள்ளுறியள்."*

*"நான் ஒன்னும் வெட்டியாய் பேப்பர் பாக்கேல்ல மணமகன் தேவை விளம்பரத்தைத் தான் பாத்துக் கொண்டிருந்த நான்."*

*மனைவிக்கு தகுந்த பதிலடி கொடுத்துவிட்ட திருப்தி அவரது வார்த்தையில் தொனித்தது.*

*"ஏற்கனவே பேப்பரில பாத்துச் செய்து ஏமாந்தது காணாதாக்கும், பேசாமல் உந்தப் பேப்பரை எறிஞ்சு போட்டுப் போய் நாலு புரோக்கர் மாரைப் பாத்துக் கதைக்கிறதை விட்டிட்டு..."*

*அவள் கூறி முடிப்பதற்குள் சிவப்பிரகாசத்துக்கு ஆவேசம் வந்துவிட்டது.*

*“அப்பவும் நான் படிச்சுப் படிச்சு சொன்ன நான். உந்தவெளி நாட்டு சம்மந்தம் வேணாம். என்ரை அக்காவின்ரை மகன் முகுந்தனுக்கு பிள்ளையைச் செய்து வைப்பமெண்டு. கேட்ட நீரே. ஒற்றைக்காலில நிண்டு பிடிவாதமாகச் செய்து வைச்சீர்.. இப்ப..”*

*அவரை முடிக்க விடவில்லை, பூரணி.*

*ஓ! .. உங்களுக்கு உங்கட ஆக்களுக்க சம்மந்தம் வைச்சிட்டால் போதும் எண்ட எண்ணம். தவிர பிள்ளை நல்லாய் வாழவேணும் எண்ட எண்ணம் இருக்கேல்லையே.”*

*“சும்மா விசர்க்கதை கதைச்சு என்ரை கோவத்தைக் கிளராதை யும். இப்ப... முகுந்தனுக்கு என்ன குறை. கை நிறையச் சம்பளம் வேலைக்குப் போற மனைவி. அழகான ஆண்குழந்தை வாழ்க்கைக்கு இது போதாதே”*

*“சரி, சரி. உங்கட ஆக்களின்ரை பெருமைகளைப் பீத்திறதை விட்டிட்டு இப்ப எங்களின்ரை பிள்ளைக்கு ஒரு கலியாணஞ் செய்து வைக்கிறதைப் பற்றி யோசிப்பம்.”*

*தணிந்து வந்தாள் பூரணி.*

*“இஞ்சாருங்கோப்பா. உவ கண்மணி அக்காவின்ரை மூத்த பெடியன் இன்னும் கலியாணம் செய்யாமல் தானே இருக்கிறான். அவனை எங்கட கவிதாவுக்கு பேசி முடிச்சா என்ன...”*

*“என்ன விசர்க்கதை கதைக்கிறீர்... பெடியன் வருமானவரித் திணைக்களத்தில நல்ல வேலையில இருக்கிறான். தவிர ஊருக்கை அவனுக்கு நல்ல மரியாதை இருக்கு தங்கச்சிமார் மூன்று பேரைக் கரை சேர்த்தவன் என்று. அருமையான பிள்ளை தான், வயதும் கவிதாவுக்கு தோதாய்த்தான் இருக்கும். இருந்தாலும் ..எங்கட பக்கம் குறை இருக்குதே. என்னென்று போய் கண்மணியிட்டை மாப்பிள்ளை கேக்கிறது.”*

*“கவிதாவுக்கு அப்பிடி என்ன பெரிய குறை”*

*“என்ன ஒன்றும் தெரியாதது மாதிரிக் கேக்கிறீர். புருசனை விட்டிட்டு வந்து வாழாவெட்டியாய் இருக்கிறது உம்முடைய கண்ணுக்கு ஒரு குறையாய்த் தெரியேல்லையே?”*

*“ அந்த பாழ்பட்டுப் போனவன் இப்பிடி என்ரை பிள்ளையை ஏமாத்துவான் என்று யார் கண்டது.”*

குரல் குழைய, கண்களில் தேங்கிய நீரை கைகளால் துடைத்தவாறே அப்பால் நகர்ந்தாள், பூரணி. அவளது சிந்தையில் முன்னோட்டம் ஒரு காணொளியாக விரிந்தது.

லண்டனில் கார்க்கொம்பனி ஒன்றின் சொந்தக்காரரான இளைஞனுக்கு மணமகள் தேடும் விளம்பரத்தைக் கண்ணுற்ற பூரணி, கவிதாவுக்கு அவன் தான் பொருத்தமானவன் எனத் தீர்மானித்தாள். சிவப்பிரகாசத்திற்கு அதில் இம்மியலவும் விருப்பமில்லை. பூரணிக்கோ வெளிநாட்டில சம்மந்தம் செய்தால் தானும் ஒரு தடவை பிளேனில பறந்து போய் அங்கெல்லாம் சுற்றி வரலாம் என்றொரு நப்பாசை அவர்கள் கேட்ட ரொக்கப் பணத்தையும், நகையையும் மட்டுமே சீதனமாகக் கொடுத்து வெகு கம்பீரமாக திருமணத்தை முடித்து வைத்தாள். சிவப்பிரகாசம் ஏனோ தானோவென்ற மனப்போக்குடன் அதில் கலந்து கொண்டார். ஆனால் கவிதாவுக்கு லண்டன் மாப்பிள்ளையின் நாகரீகப் போக்கு பிடித்திருந்தது, நண்பிகளிடம் சொல்லி பெருமையடித்துக் கொண்டாள்.

திருமணம் முடிந்து சில வாரங்கள் ஊரில் தங்கிவிட்டு பெண்ணும் மாப்பிள்ளையும் லண்டனுக்கு பறந்து போய் விட்டனர். மகளுக்கு குழந்தைப்பேறு விரைவில் கிட்ட வேண்டுமென்று பூரணி வேண்டிக் கொண்டிருந்தாள். அப்போது தான் மகளுக்கு குழந்தைப் பேறு பார்க்கும் சாக்கில் தானும் ஒரு தரம் லண்டனுக்கு போய் வரலாம். வந்ததும் இங்குள்ளவர்களுக்கெல்லாம் அங்குள்ள நடைமுறைகளைப் பற்றி கூறி பெருமையடிக்கலாம் என்ற கற்பனை உலகத்தில் அவள் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள்.

அந்தச் சமயத்தில்த் தான் கவிதாவின் அபாயச் சங்கொலி அவளது காதுகளுக்கு கிட்டியது. செய்வதறியாது விக்கித்து நின்றவளை, சிவப்பிரகாசம் சுமத்திய குற்றப் பழிச்சொல் வேறு துன்புறுத்தியது. துடிதுடித்துப் போனாள், பூரணி.

கவிதாவின் கணவனுக்கு ஒரு வெள்ளைக்காரப் பெண்ணின் தொடர்பும் இரண்டு குழந்தைகளும் இருப்பதாக அவள் கூறிய போது, பூரணி அவளைச் சமாதனப் படுத்தி அவனுடன் வாழவைக்க முயன்றாள். கவிதா அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டாள். தாயின் பிடிவாதப் போக்கு அவளிடம் அப்படியே குடி கொண்டிருந்தது. எனவே அவள் அவனுடனான உறவை முற்றாகத் துண்டித்துவிட்டு தனியொருத்தியாக பெற்றோரிடம் வந்து தஞ்சமடைந்து விட்டாள்.

காலம் கடந்து போனதே தவிர, கவிதாவின் வாழக்கைக்கு

எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. சிவப்பிரகாசமும், பூரணியும் மனமுடைந்த நிலையில் நடைப்பிணங்களாக வாழத் தொடங்கினர். கவிதா அவர்களுக்கு ஒரே பிள்ளையாதலால் சொத்து பத்துக்கு பஞ்சம் இருக்கவில்லை. ஆனால்,.. மாப்பிள்ளை அமையவில்லை. வரன்கள் சிலர் முன்வந்த போதிலும் அவர்களைப் பெற்றவர்கள் பின்வாங்கினர். செத்தவன் மனைவியைக் கட்டினாலும் விட்டவனன் மனைவியைக் கட்டக் கூடாது என்பது வியாக்கியானம் . அல்லும் பகலும் இதே சிந்தனையில் வாழந்துகொண்டிருந்த பூரணியின் மனதில் கண்மணி அக்காவின் பையனுடைய நினைப்பு வந்ததில் தவறேதுமில்லை.

கண்மணியைப் பற்றி பூரணி சொன்னதும் சிவப்பிரகாசத் துக்கு தன் இளமைக்கால நினைவுகள் வந்து அலைகளாக மோதத் தொடங்கின. அரசாங்க திணைக்களமொன்றில் எழுதுவினைஞராக வேலை கிடைத்த  அந்த காலகட்டத்தில் ஊரில் அவருக்கு நல்ல மதிப்பு. அநேகமான இளைஞர்கள் விவசாயத்தில் தான் ஈடுபட்டுக் கொண்டிருக்க சிவப்பிரகாசம் முழுமூச்சாகப் படித்து அரசாங்க உத்தி யோகமும் கிடைத்துவிட்ட கர்வத்துடன் கம்பீரமாகவே நடந்து கொள்ளுவார்.

கொழும்பில வேலை பார்க்கும் அவர் விடுப்பு கிடைக்கும் போது ஊருக்கு வந்து போவார். அப்படி ஒரு சமயம் வீட்டிற்கு வந்திருந்த போதுதான் அவர் முதன் முதலில் கண்மணியைக் கண்டார்.

“மாமி! என அழைத்தவாறு வீட்டிற்குள் வந்தவள், அம்மாவிடம் எதையோ கொடுத்தாள்.

“அம்மா ராசவள்ளிக் கிழங்கு அவிச்சவ. அதுதான்  தந்து விட்டவ”

சொல்லும் போது அவள் சிவப்பிரகாசத்தைக் கண்டவுடன் மிரண்டு போனவளாய் ஓடிவிட்டாள். அவர் தான் அம்மாவிடம் விசாரித்தார்.

“யாரம்மா இந்தப் பிள்ளை”

“பக்கத்துவீட்டுக்கு குடிவந்திருக்கினம். பலாலியில இருந்து இடம்பெயர்ந்து வந்திருக்கினம். அவைக்கு அங்கை ஏராளமான சொத்துக்கள் கிடக்குதாம். எல்லாத்தையும் விட்டிட்டு வந்திட்டுது கள். பாவம்இதுதான் அவையின்ரை மூத்தபிள்ளை.”

அம்மாவின் பேச்சைக் கேட்க அனுதாபமாய் இருந்தது.

அக்காமார் இருவரும் புகுந்த வீட்டோடு போய்விட்டனர்.

அம்மாவுக்குத் தேவையான உதவிகளை அடிக்கடி வந்து கண்மணி செய்து கொடுப்பாள். அம்மாவுக்கும் அவள் மீது நல்ல பிரியம்.

வருடங்கள் சில ஓடி மறைந்தன. ஒரு சமயம் அவர் ஊருக்கு வந்திருந்த போது அம்மா அவரிடம் பேச்சுக் கொடுத்தாள்.

"தம்பி! உனக்கும் வயசாகிவிட்டது. உனக்கு ஒரு கலியாணத் தைச் செய்து பார்க்க வேணுமென்ட ஆசை எங்களுக்கிருக்காதா? என்ன!"

அவர் பதிலேதும் பேசவில்லை. மௌனமே சம்மதம் என்ற தோரணையில் அம்மா தொடர்ந்தார்.

"உந்தப் பிள்ளை கண்மணியைத் தான் உனக்குப் பேசுவம் என்று இருக்கிறம். நல்ல குடும்பப் பாங்கான அருமையான பிள்ளை. நீ என்ன சொல்லுறாய்?"

கேட்ட மாத்திரத்தில் சிவப்பிரகாசத்துக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது, அம்மா மீது சீறி விழுந்தார்.

"உங்களுக்கு வேறை ஒரு பொம்பிளையும் கிடைக் கேல்லையே. கன்னங்கரேலென்று இருக்கிற அந்த பட்டிக்காட்டுப் பொம்பிளைதான் உங்களுக்கு மருமகளாய் வரவேணுமோ... உதுக்கு நான் சம்மதிக்க மாட்டான்."

அம்மாவின் முகம் சுருங்கிப் போனதையும் அவர் கண்காணிக் கத் தவறவில்லை. ஆனால் அவருக்கு எள்ளளவும் கண்மணியைப் பிடிக்கவில்லை. நாகரீகமான சிவப்பு நிற பெண்ணைத்தான் எதிர் பார்த்தார். பூரணி அவரது இரசனைக்கு ஏற்றவளாய் அமைத்தாள்.

அதன் பிறகு கண்மணி குடும்பத்தினர் அவர்களிடமிருந்து விலகிப் போய்விட்டனர். சற்றுத்தொலைவில் ஒரு வயற்கரை ஓரமாக சிறு காணியொன்றை வாங்கி அதில் குடியேறி விட்டதாக அவர் கேள்விப்பட்டார்.

நாற்பத்தைந்து வருடங்கள் உருண்டோடி விட்டன. கண்மணி ஒரு விவசாயியை திருமணம் செய்து நான்கு குழந்தை களுக்கு தாயாகி விட்டாள். மூத்தவன் கண்ணதாசன். வீட்டின் கஷ்ட நிலையை நன்குணர்ந்தவன். படித்து ஒரு பட்டதாரியாகி சுங்கவரித் திணைக்களத்தில் வேலை செய்கிறான். தந்தைக்கு உதவியாக முன்நின்று தங்கைமார் மூவரையும் வாழவைத்தவன். தன்னுடைய திருமணத்தைப் பற்றி சிந்திக்கவே அவகாசமில்லாமல் வாழ்ந்து விட்டான். அதனால்த் தான் நாற்பது வயதாகியும் பிரம்மச்சாரியாக வாழ்ந்து கொண்டிருக்கிறான். கண்மணியும் கணவரும் இப்போது

*தான் அவனுக்கென்று ஒரு பெண்ணைத் தேடத்தொடங்கி யிருக்கின்றனர்.*

*பூரணியின் வற்புறுத்தலால் சிவப்பிரகாசம் தனது குறுகுறுக்கும் மனத்துடன் அவளுடன் இணைந்து கண்மணியின் வீடு தேடி வந்திருந்தனர். அவர்களைக் கண்டதும் கண்மணி இன்முகத்துடன் வரவேற்று உபசரித்தாள். பூரணி தான் அவர்களோடு அளவளா வினாலே தவிர சிவப்பிரகாசம் குற்ற உணர்வோடு முகத்தைத் தொங்கப் போட்டவாறு அமர்ந்திருந்தார். சிறிதுநேர உரையாடலின் பின் பூரணி மெதுவாக பேச்சை ஆரம்பித்தாள்.*

*"ஏனக்கா தம்பிக்கு இன்னும் ஒரு இடமும் பாக்கேல்லையே. வயதுமெல்லே போய்க் கொண்டிருக்குது,"*

*"தம்பி இவ்வளவு காலமும் தங்கச்சிமாரைக் கரைசேர்க்க வேணுமென்ற பிடிவாதத்தில இருந்திட்டுது. இப்பதானே கடைக் குட்டி மாலா கலியாணஞ் செய்து போனவள். இனித்தான் அவனுக்கும் ஒரு பொம்பிளை பாக்க வேணும்?"*

*வஞ்சகமில்லாமல் கண்மணி உண்மையைப் போட்டுடைத் தாள். பூரணி அந்த இடைவெளிக்குள் தனது கோரிக்கையை முன்வைத்தாள்.*

*"அக்கா! எங்கட மகள் கவிதாவின்ரை நிலமை உங்களுக்குத் தெரிஞ்சது தானே! லண்டன் மாப்பிள்ளை . நல்லா வைச்சிருப்பான் என்று நம்பித் தானே நாங்கள் அவனுக்குச் செய்து வைச்சம். எல்லாம் இப்பிடியாப் போச்சு. இப்ப அவள் வாழாவெட்டியாய் நிக்கிறாள். அவளைப் பாத்து தினம் தினம் நாங்கள் மனமெரிஞ்சு வாழுறது யாருக்குத் தெரியப் போகுது"*

*பூரணி அழுதேவிட்டாள். சிவப்பிரகாசத்துக்கு உணர்ச்சி கொந்தளிக்க கண்களைத் துடைத்துக் கொண்டவர், குரலைச் செருமிக் கொண்டார். இதனைக் கண்ணுற்ற கண்மணியின் இளகிய நெஞ்சம் நெகிழ்ந்து போனது. ஒரே ஒரு கணம் தான். மறுகணம் நிதானமாக ஒரு முடிவெடுத்தாள்.*

*"கவலைப்படாதையுங்கோ. நான் உங்களுடைய மகளை மருமகளாக ஏற்றுக்கொள்ளுறன்"*

*நெஞ்சம் குளிர பூரணியும் சிவப்பிரகாசமும் எழுந்து நின்றனர். குவிந்த கரங்களுடன் சிவப்பிரகாசம் அவனை ஏறெடுத்துப் பார்த்தார். அவருக்கு இப்போது கண்மணி கண்ணின் கருமணியாக உயர்ந்து தோன்றினாள். இப்போது கண்ணதாசனின் கரிய நிறம் அவருக்கு ஒரு பொருட்டாகத் தெரியவில்லை.*

# அகக்கனல்

காலைநேரம் அந்த நகரத்துப் பாடசாலை வளாகம் மட்டுமல்ல. அதன் முன்றலிலுள்ள தெருவும் கூட களைகட்டியிருந்தது. கடந்த நான்கு வாரங்களாக வருடாந்த இறுதி விடுமுறையைக் கழித்துவிட்டு அன்றுதான் ஆரம்பிக்கப் போகும் முதற்தவணைக் கல்வியை எதிர்நோக்க மாணவர்களும் ஆசிரியர்களும் திரண்டுவந்து கொண்டிருந்தனர். வெள்ளைச் சீருடையில் வெண்சிட்டுக்களாக மாணவர்களும், ஆங்காங்கே நிற உடுப்புக்களுடன் ஆசிரியர்களுமாக கலகலப்புடன் காட்சியளித்தது, வளாகம்.

மெதுவாக அந்த சனத்திரளைக் கிழித்துக் கொண்டு வளாகத்தினுள் நுழைகிறது ஓர் உந்துருளி. அதைச் செலுத்தி வந்த பெண் தயக்கத்துடன் பார்வையை அங்குமிங்கும் ஓடவிடுகிறாள். இடது புறத்து மதிலோரத்தில் அவளது கண்கள் நிலைகுத்தி நிற்கின்றன. சட்டென தனது உந்துருளியைத் திருப்பி அங்கு அமைந்திருந்த தரிப்பிடத்தை அடைந்தவள் அங்கே தனது உந்துருளியை நிறுத்திவிட்டு வருகிறாள். அவளுடன் கூடவே மற்றுமொருஆசிரியையும் வந்து கொண்டிருப்பதை கண்ணுற்றவள் அவளிடம் பேச்சுக் கொடுக்கிறாள்.

“குட் மோனிங் மிஸ். நான் கங்கா முரளீதரன். இந்த ஸ்கூலுக்கு ட்ரான்ஸ்பரில வந்திருக்கிறன்.”

மற்றவள் அவளுடன் சகஜமாக உரையாடு கிறாள்.

“வெல்கம் மிஸ். நானும் இங்கை தான் மூன்று

வருசமாய் படிப்பிச்சுக் கொண்டிருக்கிறன். வாங்கோ, நாங்கள் ஸ்டாப் ரூமுக்கு போவம். பெல்அடிக்க நேரமிருக்குத் தானே. நான் உங்களை எங்கட ஸ்டாவ்ஸ்ஸூக்கு அறிமுகப்படுத்தி விடுறன்."

"இல்லைமிஸ் நான் ஒருக்கா பிரின்சிபலை சந்திக்க வேணும். ஒவ்விஸ் எங்கை இருக்குதென்று காட்டுறீங்களா?"

"ஓ. கே." அவளை அழைத்துப் போய் அதிபரின் அறைக்கு முன் விட்டாள், கோமதி. மிஸ் என அழைக்கப்படும் அந்த ஆசிரியை.

அவள் கொடுத்த கடிதத்தை வாங்கிப் படித்துவிட்டு , அதிபர் அவளை ஆசிரியர் தங்கும் அறையில் காத்திருக்குமாறும், தான் பியோனிடம் நேரசூசியை அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்தார். வெளியே அவளுக்காக காத்துநின்ற கோமதி மிஸ்அவளையும் அழைத்துக் கொண்டு போனாள். ஆசிரியர்களுக்கு அவளை அறிமுகப்படுத்தி வைத்தாள்.

திடீரென பிருந்தா என்ற ஆசிரியை அவளிடம் வினவினாள்.

"மிஸ் கங்கா! உங்கட சொந்தக் கார பிள்ளையள் யாரும்இங்கை படிக்கினமோ?"

"இல்லையே!" என்று பதிலிறுத்தாள், கங்கா.

"என்னுடைய கிளாஸில சங்கரி என்றொரு பிள்ளை படிக்கிறா. சரியாய் அவ உங்களைப் போலத்தான் அச்சொட்டாய் இருக்கிறா" அதுதான் கேட்டநான்."

கோமதி டீச்சர் அவளை இடைமறித்தாள்.

"மிஸ்! நீங்கள் இவ்வளவு காலமும் எங்கை படிப்பீச்சநீங்கள்?"

"எனக்கு "அப்பொயின்ற்மென்ற்" கிடைச்ச காலத்திலை இருந்து வன்னியீல தான் படிப்பீச்ச நான். இந்த வருசம் தான் மாற்றம் கிடைச்சிருக்கு."

பதிலிறுத்த கங்காவைத் துழாவத் தொடங்கினாள், கோமதி.

"ஏன் மிஸ் நீங்கள் இன்னும் மரி பண்ணேல்ல"

கங்கா ஒரு தரம் முகத்தைச் சுழித்துவிட்டு பதிலிறுத்தாள்.

"கலியாணம் செய்யிற நோக்கம் எனக்கு இல்லை. கலியாணம் செய்து குடும்ப வாழ்க்கை என்ற கூட்டுக்குள்ள சிக்காம சுதந்திரமாய் வாழவேணுமென்று விரும்புறன்."

வாய் உளறியதே தவிர மனதிலுள்ள கறை அவளை

உறுத்தியது. பிருந்தாவும் கங்காவின் கூற்றை ஆமோதித்தாள்.

"ஓ!.. அவ சொல்லுறதும் சரிதான். இப்ப பாருங்கோ என்னை விடிய எழும்பினதும் மூச்சு விட நேரமில்லாமல் ஓடியாடி வேலை செய்ய வேண்டிக்கிடக்கு. அவரை வேலைக்கு அனுப்ப வேணும். பிள்ளகைளை பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி வைக்கவே நேரம் சரியாய்ப் போயிருது. நான் அவசர அவசரமாய்க் குளிச்சிட்டு வெளிக்கிட்டு வரத்தான் நேரம் சரி. சாப்பிடக் கூட நேரம் கிடைப்பதில்லை. என்ன. தான் மெசின் வாழ்க்கையோ.. அப்பப்பா... அலுத்தே போச்சுது"

வாய்விட்டுச் சிரித்தாள், கோமதி.

"இதை அப்பவே நீர் யோசிச்சிருக்க வேணும். கலியாணம் செய்யிறதுக்கு முந்தி"

மற்றவர்கள் சிரிக்க, அவர்களுடைய சிரிப்பில் ஒன்றிப் போக முடியாதவளாய் தவித்தாள், கங்கா. நல்ல வேளையாக மணி ஒலித்ததும்˙ அனைவரும் கிளம்பி அவரவர் வகுப்புக்களை நோக்கி நடந்தனர். கங்கா மட்டும் அங்கேயே காத்திருக்க வேண்டியதாயிற்று.

கவிதாவை எட்டாம் வகுப்பிற்குரிய ஆசிரியராக நியமித் திருந்த போதிலும் ஒன்பதாம், பத்தாம், பதினோராம் வகுப்புக்களுக் கான விஞ்ஞான, சுகாதார பாடங்களை கற்பிக்க வேண்டியிருந்தது. கல்வியில் நல்ல ஆர்வமுள்ள மாணவர்களாய் இருந்ததால் அவர்களுக்குக் கற்பிப்பதில் அவளுக்கு சிரமம் ஏதும் இருக்கவில்லை.

அன்றைய தினம் பிருந்தா டீச்சர் பாடசாலைக்கு வரவில்லை. ஏழாம் வகுப்பிற்கு பொறுப்பாசிரியாராக விருந்த பிருந்தா வராததால் ஆசிரியர் தங்கும் அறையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த கங்காவைப் போய் அந்த மாணவர்களை கவனிக்குமாறு அதிபர் பணித்திருந்தார். அங்கு போன கங்காவிற்கு காத்திருந்தது அதிசயம்.

வகுப்பை ஒரு தரம் சுற்றி நோட்டமிட்டவளது கண்கள் ஓரிடத்தில் வந்ததும் நிலைகுத்தி நின்றுவிட்டன. அவளால் நம்பவே முடியவில்லை. தினமும் கண்ணாடியில் தெரியும் தனது விம்பம் தன் கண்முன்னால் நின்றால் அவளால் திகைத்து நிற்காமல் என்ன செய்ய முடியும். பிருந்தா டீச்சர் அன்று சொன்ன போது அதை அவள் ஒருபொருட்டாகவே நினைக்கவில்லை. ஏதோ ஒரு உத்வேகத்தில் தன்னையறியாமலே அவளிடம் கேட்டுவிட்டாள்.

"உம்முடைய பெயர் சங்கரிதானே?"

“ஓம் மிஸ்”

தலையைக் குனிந்தவாறு பதிலளித்தாள், அவள். அதற்கிடையில் மற்றைய மாணவர்கள் ஏகோபித்த குரலில் சொல்லத் தொடங்கினர்.

“டீச்சர்! சங்கரி சரியாய் உங்களைப் போலவே இருக்கிறா”

“ஸ்... சத்தம் போடக் கூடாது. உங்களுக்கு இப்ப என்ன பாடம்?”

கங்கா அவர்களுக்கு பாடத்தை நிதானமாக கற்பிக்கத் தொடங்கினாள்.

அன்று பாடசாலை முடிந்து வீட்டிற்கு வந்தவளுக்கு மனதில் ஒரே குழப்பம். உள்ளத்தில் பலவிதமான சிந்தனையோட்டம் துளிர்த்தெழுந்தது அவளை அழைக்கழித்தது.

அப்படியிருக்குமோ?

மனதில் ஒரு கேள்வி.

ஆழ்மனதின் அடியில் புதைக்கப்பட்டு மறைந்து, மறந்து போன அந்தச் சம்பவம் மீண்டும் மீள்நினைவாகத் தோன்றி அவளை அச்சுறுத்திய போது அவள் மனம் உஷாரடைந்தது.

“சீ!!!!.. அப்படியிருக்காது. அதற்கான வாய்ப்பே இல்லை.”

மனத்தை திடப்படுத்திக் கொண்டவளை நித்திராதேவி அணைத்துக் கொண்டாள்.

மாதங்கள் இரண்டு உருண்டோடின. தனி மரமாய் நின்ற கங்காவுக்கு சக ஆசிரியர்களின் அந்நியோன்யப் போக்கு வாழ்க்கையில் ஒரு பிடிப்பை ஏற்படுத்தியது. சுமுகமாக வாழத் தொடங்கினாள். எனினும் இடையிடையே அம்மா அப்பாவின் நினைவுகள் தோன்றி அவளை சஞ்சலப்படுத்திக் கொண்டிருந்தன. அவளுக்கு ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொடுத்துவிட வேண்டுமென்று அவர்கள் துடிதுடியாய்த் துடித்தனர். ஆனால் கங்காவின் பிடிவாதம் அதற்கு இடம்கொடுக்கவில்லை. தீராத கவலையுடன் அவர்கள் ஒருவர் பின் ஒருவராக போய்ச்சேர்ந்து விட்டனர்.

தனித்து நிற்கும் போதுதான் கங்காவுக்கு அம்மா அப்பாவின் அருமை புரிந்தது. ஆயினும் அவளுக்கு தான் எடுத்த தீர்மானம் சரியானது தான் என்ற மனத்திடம் என்றுமே தளம்பியதில்லை.

அன்று காலை. குறுநேர இடைவேளையின் போது

ஆசிரியர்கள் அனைவரும் தங்களது தங்குமறையில் கூடியிருந்த வேளை அந்தச் சமயத்தில் தான் ஆசிரியர்கள் தங்கள் சொந்தப் பிரச்சினைகளை மனம் விட்டு மற்றவர்களிடம் சொல்லி ஆறுதலடைவது வழக்கம். அதனால் அந்த அறை கலகலப்பில் மூழ்கியிருந்தது.

“எக்ஸ்கியூஸ்மீ”

கணீரென்ற குரல் அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்தது. கங்காவும் நிமிர்ந்து வாசலைப் பார்த்தாள். அங்கே.. கையில் ஒரு பெரும் பொதியுடன் சங்கரி நின்றிருந்தாள்.

“இன்றைக்கு என்னுடைய பிறந்தநாள். அதுதான் உங்களுக்கெல்லாம் ஸ்வீற் கொடுக்க வந்தநான்.”

சொன்னவள் ஒவ்வொருவருக்கும் ஒரு சிறு பொட்டலமாகக் கொடுக்கத் தொடங்கினாள். ஆசிரியர்கள் சிலர் அவளை வாழ்த்தினார்கள். சிலர் நன்றி மட்டும் சொல்லிவிட்டு வாங்கிக் கொண்டார்கள்.

சங்கர் கங்காவிடம் இனிப்புப்பொதியை நீட்டிய போது, அவள் தன்நிலை மறந்தவளாய் .. அப்படியே அவளை இழுத்து இறுக அணைத்துக் கொண்டாள். கங்காவின் உடலில் மின்சாரம் பாய்வது போன்றதோர் உணர்வு.

“ஹப்பி பேத்டே சங்கரி. மே கோட் பிளெஸ் யூ“

“தாங்க் யூ வெரி மச் மிஸ்”

அதிர்ச்சியுடன் சங்கரி நாசூக்காக தன்னை அவளது பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டாள். கங்காவின் மனமோ பின்நோக்கிப் பாய்ந்தது. இன்று என்ன திகதி மார்ச் பன்னிரண்டு,... ஓ .. இந்த நாளில் தானே அந்தக் குழந்தையைப் பிரசவித்தேன். சிந்தனைச் சுழலில் செயலிழந்து அவள் மௌனத்தைத் தழுவிக் கொண்டாள்.

இந்த உண்மைநிலையை எவருமே அறிந்திருக்க சாத்தியமில்லை. கங்காவுக்கு சங்கரி தன்னைப் போலவே இருப்பதால் அவள் மீது ஒரு ஈர்ப்பு என நினைத்து தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

ஆனால்... கங்கா ஏ.எல் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் போது காமுகன் ஒருவனிடம் சிக்கி தனது அறியாத பருவத்தில் கற்பை இழந்தது... இதனால் மனம் நொறுங்கிள பெற்றோர் சாதுரியமாக அவளை திருகோணமலைக்கு அழைத்துச் சென்று அங்கேயே சிறிது காலம் வாழ்ந்து, குழந்தையைப் பிரசவித்ததும் அதனை பிள்ளைப்

பேறில்லாமல் தவித்த ஒரு தம்பதிக்கு நீதிமன்றம் மூலம் தத்துக் கொடுத்ததும்.. பின்னர் தன் தவறை உணர்ந்த கங்கா ஊர் திரும்பி படிப்பில் கவனம் செலுத்தி இன்று இந்நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பதும் எல்லாமே ஒரு கனவாகத் தோன்றி அவளைத் திணற வைத்தது.

இத்தன காலமும் அவளது இதயத்தில் கனலாகத் தரித்துக் கொண்டிருந்த தீ இன்று சுவாலையாக கொழுந்துவிட்டெரிய அந்த வெப்பத்தின் கொடூரத்தில் துடித்துப் போனாள், கங்கா.

## நூலாசிரியரின் ஏனைய நூல்கள்

1. வேர் பதிக்கும் விழுதுகள் - சிறுகதைகள் (2015)
2.மறையாத சூரியன் - நாவல்  (2016)
3.கீறல் - சிறுகதைகள் (2016)
4.மௌனத்தின் சிறகுகள் - நாவல் (2017)
5.அனலிடைப்புழு - சிறுகதைகள் (2017)
6.மலைச்சாரலின் தூவல் - நாவல் (2018)
7. காகிதப்படகு - 3 குறுநாவல்கள்(2018)
8.அப்பாவின் தேட்டம் - சிறுகதைகள்(2019)
9. பாலைவனத்து புஷ்பங்கள் - குறுநாவல்கள் (2019)
10 உயிர் சுமந்த கூடு - சிறுகதைகள் (2020)
11. அசை - சிறுகதைகள் - (2021)



மலரன்னையின் கதைகள் இலகுவான வாசிப்புக்கு ஏற்றவை. அதிகளவு வர்ணனைகளோ தேவையற்ற வார்த்தைகளோ எதுவும் இருக்காது. ஒரு தேர்ந்த கதைசொல்லியின் லாவகம் அவருக்குள் படிந்து போய் இருக்கிறது. அது ஆர்வமூட்டும் வாசிப்புக்கு எளிதாக நம்மை அழைத்துச் சென்று விடுகிறது. அவர் தேர்ந்தெடுக்கும் கதையின் கருக்கள் நம்மைச் சுற்றி இருப்பவையே. பாத்திரங்களும் நாம் அன்றாடம் பார்க்கும் மனிதர்களே. குறிப்பாக பிரச்சனைகளில் அலைவுறும் பெண்கள். அவர்களின் உணர்வுகள்... அவற்றை தான் எப்படி உள்வாங்கினாரோ எப்படி உணர்ந்தாரோ அதை அப்படியே எழுத்தில் பதிவு செய்தார். தான் சொல்ல விரும்புவதை எளிமையாகவும் வலிமையாகவும் சொல்லிவிடும் ஆற்றல் இவருக்கு இயல்பாகவே அமைந்திருக்கிறது.

– தாமரைச்செல்வி

மலரன்னையின் படைப்புகளில் அவர் கையாளும் மொழிநடை இலகுவாக வாசிப்பாளர்களைச் சென்றடையக் கூடியது. கைதேர்ந்த ஒரு சிற்பியைப் போல பார்த்துப் பார்த்து கதைமாந்தர்களை உயிர்ப்பிக்கும் நுண்ணறிவு இவருக்கு இயல்பானது. கதைசொல்வதற்கு மலரன்னை பயன்படுத்தும் உத்திகள் மிகச் சிறப்பானவை. அந்தந்தக் கதை மாந்தர்களுக்கே இயல்பான மொழிநடை கைகூடி வரும் போதே அப்படைப்புகள் வெற்றியை எட்டுகின்றன. சமூக மாந்தர்களின் மனதின் உள் ஆழத்தில் மூழ்கி, அங்கே உறைந்து கிடக்கும் உணர்வுகளை ஒரு படைப்பாளியால் வெளிக் கொண்டு வர முடியும் என்பதற்கு மலரன்னையின் கதைகளும், நாடகங்களும், கவிதைகளும், நாவல்களும் சான்றாகின்றன.

– ஆதிலட்சுமி சிவகுமார்

ISBN 955524963-6